ISSN 2630 7855

# ஆய்வுக்குரல்

## *The Voice of Research*




வெளியீடு:
சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்
இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழிப் பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

ஆய்வு 01
குரல் 01
ஓராண்டுச் சஞ்சிகை
2018 ஒக்டோபர்
2019 செப்டம்பர்

# ஆய்வுக்குரல்

## The Voice of Research

ஆய்வு01
குரல்01

ஓராண்டுச் சஞ்சிகை
2018 - 2019




வெளியீடு:
சமூகவியல் ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்
இஸ்லாமிய கற்கைகள், அறபுமொழிப் பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

**பெரும்பொருளாளர்**
கலாநிதி. எஸ்.எம்.எம். மஸாஹிர்
பீடாதிபதி,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்

**ஆலோசனைக்குழு**
எம்.சீ.எஸ். ஸாதிபா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்

எப்.எச்.ஏ. ஷிப்லி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்

எம்.வை.எம். சுஹைறா
விரிவுரையாளர்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்

எம்.ரீ. ஹபீபுல்லாஹ்
விரிவுரையாளர்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்

**உயர்மட்ட நிர்வாகக் குழு**
எஸ்.எல்.எம். நபீர் (தலைவர்)
பீ.பீ. ஸிபாறா (உப தலைவி)
ஏ.பி.எம். அஸான் (செயலாளர்)
எம்.ரீ.ஏ. பரீஹா (உப செயலாளர்)
எம்.எஸ்.எம். ஹில்மி (பொருளாளர்)
எம்.எஸ். ஸுனூமி (ஒருங்கிணைப்பாளர்)
எம்.என்.எப். நிஸ்ரின் (எடிட்டர்)

| | |
|---|---|
| உப வேந்தரின் வாழ்த்துரை | 2 |
| பீடாதிபதியின் வாழ்த்துரை | 3 |
| ஆய்வால் ஆயுதம் செய்வோம் | 5 |
| மாணவர் ஆய்வு மன்றம் பற்றிய | 7 |
| ஆய்வு முறையில் தரவு சேகரிப்பு | 9 |
| பன்மைத்துவ சமூக சூழலில் | 14 |
| எழுத்துத் துறையில் பல்கலைக்கழக | 18 |
| இஸ்லாமும் சமூக ஊடகங்களும் | 25 |
| நேர்காணல் | 35 |
| இலங்கையின் மும்மொழிப் பாடசாலை | 43 |
| DIGITALIZATION OF HOLY QURAN | 47 |
| எம்.எச்.எம். அஸ்ரபின் கனவுகளை | 49 |
| இலங்கையில் போதைப்பொருள் | 52 |



150/=




# வாழ்த்துரை

**பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம்**
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்
ஒலுவில்

தென்னாசியாவில் பல்லினப் பண்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இங்கு இனம், மொழி, மதம், பண்பாடு, வாழ்க்கை முறை என்பவற்றால் வேறுபட்ட மக்கள் தமது தனித்துவத்தை பேணுவதிலும் ஏனைய இன, மதப் பாண்டுகளை மதிப்பதிலும் இலங்கையின் பல்லினப் பண்பாட்டுத் தன்மையின் வெற்றி தங்கியுள்ளது. அத்தகைய வேறுபாடுகள் கொண்ட மக்கள் குறிப்பாக மாணவ சமூதாயம் ஒன்றுகூடி வாழும் அதி முக்கிய கல்விக்கூடமாக பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் மாணவ சமூதாயமே நாட்டின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்தியில் வழிகாட்டியாக திகழ்கின்றனர். இவற்றின் வெற்றி என்பது மாணவ சமூதாயத்தின் இன, மத, பண்பாட்டு, ஐக்கியம், ஒருமைத்தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது. இந்தவகையில் மாணவர்களின் பல்வேறு ஆய்வுகளையும், நிகழ்வுகளையும், மாணவர்களின் ஆக்கங்களையும் ஊக்கத்துடன் வெளிக்கொண்டுவருவதற்கு பாடுபடும் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர் ஆய்வு மன்றத்தினை இவ்விடத்தில் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றமானது அண்மைக்காலமாக ஆய்வுக் கலாசாரத்தை ஏற்படுத்துவதில் மகத்தான பங்களிப்பை செய்து வருகின்றது. அதன் முக்கிய அம்சங்களில் ஒன்றாக ''ஆய்வுக்குரல்'' சஞ்சிகையை குறிப்பிடலாம். ஆய்வுசார் தலைப்புக்களை மையமாக கொண்டு வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகை பல்கலைக்கழக மட்டத்திலும், வெளி சமூக மட்டத்திலும் அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய கனதியான ஆய்வுக் கட்டுரைகளை சுமந்திருக்கின்றது எனக்கூறுவது மிகையாகாது.

இம்மன்றத்தினுடைய இந்த ''ஆய்வுக் குரல்'' சஞ்சிகை மற்ற அமைப்புகளுக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும் என்பதுடன், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நற்பெயரை வெளியுலகிற்கு கொண்டு வருவதற்கும், அதீத நற்பெயரை ஈட்டுவதற்கும் காரணமாக அமைகின்ற மாணவர் ஆய்வு மன்றத்திற்கு எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



# வாழ்த்துரை

**கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர்,**
பீடாதிபதி மற்றும் சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றத்தின் பெரும்பொருளாளர்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையவனுமாகிய அல்லாஹ் தஆலாவின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர் அடிச்சுவடைப் பின்பற்றியோர் அனைவர் மீதும் உண்டாவதாக.

தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பான ''சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்'' ஆய்வுகளுக்குக் களமமைப்பதற்காக ''ஆய்வுக் குரல்'' என்ற மகுடத்தில் வெளியிடும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் உருவாக்கம் தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் ஒரு வரலாற்று மைற்கல் எனலாம். 2013/2014ஆம் கல்வியாண்டு மாணவர்களின் மூன்று வருட அயராத பிரயத்தனம், உழைப்பின் ஊடாகப் பிறந்ததுவே இம்மன்றமாகும். இப்பீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய சகோதரர் ஸஹீம் கமால் அவர்கள், தமது முதலாவது வருடத்திலேயே இக்கைங்கரியத்திற்கு வித்திட்டு, மேலும் பல மாணவர்களை இணைத்துக் கொண்டு, இம்மன்றத்தை உருவாக்கி சாதித்தார். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வேறு எந்தப் பீடத்திலும் இல்லாத ஒரு புதுமுயற்சியாக இது அமைந்ததோடு, மாணவர்களின் புத்தாக்க முயற்சிகளுக்கு இப்பீடம் உறுதுணையாக இருக்கும் என்பதற்கு சான்றாகவும் இது அமைந்துள்ளது.

சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தை பொறுப்பேற்ற அடுத்த கல்வியாண்டு (2014/2015) மாணவர்கள் ஆக்கபூர்வமான பல திட்டங்களை வடிவமைத்து, அவற்றை மிகக் கச்சிதமாகச் செயற்படுத்தி வருகின்றனர். அச்செயற்பாடுகளுள் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக ''ஆய்வுக்குரல்'' சஞ்சிகை வெளியீடு அமைகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் சமூக அக்கறையும் சீர்திருத்த எண்ணமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதற்கு தத்தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அவர்கள் பயன்படுத்த வேண்டும். எழுத்தாற்றல் இருப்போர்

அவ்வாற்றலை சமூக மேம்பாட்டுக்காக உபயோகிக்கலாம். கவிதை புனையும் திறமை கொண்டோர் அத்திறமையை சமூக சீர்திருத்தத்திற்காகவும் ஒழுக்க விழுமியங்களை பரப்புவதற்காகவும் பிரயோகிக்கலாம். ஆய்வுத் திறமையும் அதில் தேர்ச்சியும் உள்ளவர்கள் அத்திறனை சமூக ஆய்வுகளில் ஈடுபடுத்தி, சமூக மாற்றத்திற்குத் துணையாக அமையலாம். அறபு எழுத்தணி போன்ற அழகியல் கலைகளில் ஈடுபாடு கொண்டோர் அதனையும் சிறப்பான முறையில் பயன்படுத்தலாம். இவ்வாறான ஆக்க முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு பல்கலைக்கழகமும், பீடங்களும் களம மைத்துக் கொடுத்தல் வேண்டும்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தைப் பொறுத்தவரையில் பீட மாணவர்கள் பாடத்திட்டம் சாரா புறச் செயல்களில் கரிசனை காட்டுவதற்காக பல செயற்களங்களை ஏற்படுத்தி யுள்ளது. எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு ''சாளரம்'' என்ற சுவர்ச் சஞ்சிகை, சமூக ஆய்வுகளுக்கான மாணவர் மன்றச் செயற்பாடுகள், பீடத்தின் மாணவர் பேரவையின் வெளிக்களச் செயற்பாடு கள், ஒவ்வொரு புதன்கிழமை மாலை வேளைகளில் இடம்பெறும் மேடை நிகழ்ச்சிகள், இடைக்கிடை இடம்பெறும் போட்டி நிகழ்ச்சிகள், கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் என்பன இதற்கு நல்ல சான்றுகளாகும். இவ்வரிசையில் ''ஆய்வுக்குரல்'' சஞ்சி கையும் இவ்வருடத்திலிருந்து இணைந்து கொள்கின்றது.

வருடத்திற்கொரு வெளியீட்டைக் கொண்ட இச்சஞ்சிகை ஆய்வுக் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படுகின்றது. விரிவுரையாளர்களின் இரு காத்திரமான கட்டுரைகள் இச்சஞ்சிகைக்கு அணி சேர்க்கின்றன. பீடத்தின் மாணவர்களால் எழுதப்பட்ட ஆக்கபூர்வமான நான்கு கட்டுரைகள் இதில் உள்ளடங்கியுள்ளன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தராக இருந்து பெரும் தொண்டாற்றிய பேராசிரியர் எம். எல். ஏ. காதர் அவர்களின் நேர்காணல் ஒன்று இதில் வெளியிடப்படுவது சாலப் பொருத்தமாக அமைந்துள்ளது. அவரின் ஆழ்ந்த கருத்துக்கள் இந்த கன்னிப் படைப்புக்கு அழகு சேர்க்கின்றன. சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் சிற்பியாக இருந்த சகோதரர் ஸஹீம் கமால் அவர்களின் ''எம். எச். எம். அஷ்ரபின் கனவுகளை நனவாக்க வேண்டிய தென்கிழக்குப் பல்கலைக் கழகம்'' என்ற ஆக்கமும் முதல் சஞ்சி கைக்குப் பொருத்தமானதாக அமைந் துள்ளது.

சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் இவ்வாய்வுச் சஞ்சிகை பல ஆழமான ஆய்வுகளைத் தாங்கி, தொடர்தேர்ச்சியாக வெளிவருவதற்கு எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த் தித்து, இக்காத்திரமான முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் இறை யன்பைப் பெறும் செயற்பாடாக இது மாற வேண்டும் எனவும் ஆசிக்கின்றேன்.

✷

# EDITORIAL



# ஆய்வால் ஆயுதம் செய்வோம்

எல்லாப் புகழும் புகழ்ச்சியும் எல்லாம் வல்ல இறைவன் அல்லாஹ்வுக்கே அல்ஹம்து லில்லாஹ். உம்மத்தை உம்மியாக்காமல் உம்மி நபியாக நின்று உழைத்து உலகத்திற்கே எங்களை உலமாக்களாக மாற்றியமைத்த உயிரிலும் மேலான உத்தம நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

உலக வரலாற்றில் இன்று ஊடகம் உலகை ஆளும் ஆயுதமாக இருப்பதைப் போன்று காலத்திற்குக் காலம் வித்தியாசமான பல ஆயுதங்கள் ஏந்தப்பட்டுள்ளன. தலைமுறை வித்தியாசங்களினாலும் சிந்தனைப் புரட்சிகளினாலும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாட் போல் ஆயுதங்கள் வித்தியாசப்பட்ட போதிலும் எல்லா ஆயுதங்களின் பின்னணியிலும் அவ் ஆயுதங்கள் பிரகாசிக்கக் காரணம் ஆய்வு என்ற மிகப் பெரும் ஆயுதம் ஒன்று மட்டுமே. ஊடகம் என்ற மிகப் பெரிய சக்திக்குப் பின்னால் ஆய்வுகள் என்ற சட்டங்கள் இருக்கின்றன என்ற செய்தி முக்கியமானதாகும். ஊடகம் தன்னளவில் எட்ட முடியாத தூரங்களையும் கட்ட முடியாத பாலங்களையும் எட்டிப்பிடிக்க கட்டிமுடிக்க துணிவு பெற்றது ஆய்வு என்ற ஆயுதத்தாலே.

ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளோடு ஆரம்பிக்கும் தேடல் ஆய்வின் வாசலாகவும் பெறுபேற்றின் புள்ளியாகவும் அமைகின்றது. உலகில் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக் கின்ற, நிகழப் போகின்ற அத்தனை ஆய்வுகளும் நிழல்களாக இருக்கின்ற இந்தக் கேள்விகளால் ஆனது. ஆய்வை தன் கலாசாரமாக, கலையம்சமாக, அணிகல னாக கொண்ட எந்த மனிதனும் எந்த சமூகமும், எந்த நாடும் தோற்றுப் போனதாக சரித்திரமில்லை. விழுந்திருக்கலாம் ஆனால்

விழுந்தே கிடக்கவில்லை என்பதே எழுதப்பட்ட சரித்திரம்.

பிறமொழி சார்ந்தவர்களால் செய்யப்படுகின்ற ஆய்வு வீதம் தமிழ் பேசும் சமூகத்தில் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கின்றது. ஐரோப்பா நாடுகளில் செய்யப்படுகின்ற ஆய்வு வீதம் ஆசிய நாடுகளில் குறைவாகவே இருக்கின்றது. இவ் ஒப்பீட்டை ஆய்வுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையையும் முயற்சிகளையும் வைத்து அளந்து கொள்ளலாம்.

குறிப்பாக இலங்கையை பொறுத்த வரைக்கும் ஆய்வுக் கலாசாரம் பல்கலைக் கழகங்களிலும், சில நிறுவனங்களிலும் மட்டுமே தங்கியுள்ளது. என்றாலும் இந்நிறுவனங்களிலும் கூட பரபரப்பாக பாரிய அளவில் ஆய்வுகள் நடப்பதில் போதாமைகள் இருக்கின்றன. இதற்கு குறிகாட்டியாக சில வெளிநாட்டு ஆய்வாளர்களை கடன் வாங்கிய வங்குரோத்து நிலைமையை கடந்த காலங்களில் பார்த்திருக்கிறோம். இந்நிலை தொடர் கதையாகுமென்றால் நாடு கிட்டிய எதிர்காலத்தில் பாரிய சவால்களை சந்திக்க வேண்டி ஏற்படும். நாட்டின் கல்வி, அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், பாதுகாப்பு என்பன நாளுக்கு நாள் கேள்விக் குறியாகிக் கொண்டே போவது கண்கூடு.

படித்த சமூகமென்ற அடையாளம் மங்கி பாமர சமூகம் என்ற மக்கள் கூட்டம் திரளாகின்ற போது ஆரோக்கியமற்ற சிவில் சமூகம் தோன்றும். ஆரோக்கியமற்ற சிவில் சமூகத்தால் ஒருகாலும் தன்னையும் தன்சார்ந்த நாட்டையும் நல்லறத்தின் பால் இட்டுச் செல்வது சிரம சாத்தியமாகும். ஆரோக்கியமான சிவில் சமூகம் ஆரோக்கியமான அறிவிலும், கல்வியிலும், பொருளாதாரத்திலும், சுகாதாரத்திலும் தங்கியுள்ளது. இத்தனை ஆரோக்கியத்திற்கும் முன்னால் ஒரு நாட்டின் ஆய்வுத்துறை மிக ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்பதே அடிப்படை.

பொதுவாக பாடசாலை மட்டங்களில் இருந்தே ஆய்வுக் கலாசாரத்தை உருவாக்க முடியுமான மாற்றங்களை கல்விக் கொள்கையில் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கின்றது. கலாசாரம் பள்ளி முதல் பல்கலை வரை வழக்கமாகின்ற போது ஆய்வும் வாழ்வாக மாறும். நல்ல வாழ்கைக்கு தீர்வாக அமையும். ஆய்வுகள் ஆக்கபூர்வமாக அமைகின்ற போது ஆய்வுகளால் ஆயிரம் புரட்சிகளை, புதுமைகளை, புணர் நிர்மானங்களை அரங்கேற்றலாம்.

இவ் ஆய்வுச்சஞ்சிகை தமிழ் பேசும் சமூகத்தில் பல புரட்சிகளையும் புத்தாக்கங் களையும் புதுமையாய் செய்ய கன்னிப் பிரசவமாக தளிர்க்கின்றது. தளிரை தள்ளிப் போடுவதா? இல்லை மரமாக மலரச் செய்வதா? என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும். இக்கன்னிப் பிரசவத்திற்காக உழைத்தவர்களுக்கும், கொள்வனவு செய்தவர்களுக்கும், வளர்க்க நினைப்பவர் களுக்கும் நன்றிகள். பல கோடி நிறைவாக அமையட்டும்...

**- தலைவர்**



# மாணவர் ஆய்வு மன்றம் பற்றிய அறிமுகம்

**தொகுப்பு : ஒருங்கிணைப்பாளர்**

இவ்வாய்வு மன்றமானது தேசிய ரீதியில் வினைத்திறன் மிக்க ஆய்வாளர்களை உருவாக்கும் நோக்கத்துடனும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் களிடத்தில் ஆய்வுக்கலாச்சாரத்தை பரப்பு வதற்கும், மாணவர்கள் மத்தியில் காணப்படும் திறமைகளுக்கான களத்தை அமைத்துக் கொடுக்கும் நோக்கிலும் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தை மையமாக வைத்து பீடாதிபதி கலாநிதி. எஸ்.எம்.எம் மஸாஹிர் அவர்களின் தலைமையில் கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக "இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்" எனும் பெயரில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது.

இம்மன்றத்தின் தூரநோக்கு "நமது நாட்டில் சிறந்த, தரமான ஆய்வுளுக்கான மையமாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஆய்வு மன்றம் தொழிற்படல்" என காணப்படும் அதேவேளை பிரதான நோக்கமாக "தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அறிவு பூர்வமாக சிந்திக்க கூடிய, புத்தாக்க திறன்மிக்க சிறந்த ஆய்வாளர்களை உருவாக்குதல்" காணப்படுகின்றது.

இதன் துணை நோக்கங்களை பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்தியிலும் ஆய்வுகளுக்கான விழிப் புணர்வை ஏற்படுத்தல்.
2. மாணவர்களை வாசிப்புக் கலாச்சாரத்தின் பக்கம் தூண்டுதல்.
3. மாணவர்கள் மத்தியில் ஆய்வு சார் திறன் விருத்தியை ஊக்குவித்தல்.
4. துறைசார் ஆய்வுகளுக்கு மாணவர்களை இனங்கண்டு வழிகாட்டல்.
5. மாணர்களுக்கு மத்தியில் ஆய்வு சார் ஆக்கங்களுக்கும், கட்டுரைகளுக்கும், பேச்சுக்களுக்கும், புத்தாக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இம்மன்றத்தினுடைய பிரதான தொழிற் பாடுகளாக பின்வரும் ஆறு விடயங்களும் காணப்படுகின்றன.

### 1. ஆய்வுகள் :

ஆய்வுக்கான மன்றமாக இவ்வமைப்பு இருப்பதால் நேரடியாகவே ஆய்வுச் செயற் பாடுகளில் ஈடுபடுவதற்கு வழியமைத்தல். இங்கு நூலக ஆய்வு, கள ஆய்வு, நேர்காணல் ஆகிய மூன்று வகையான ஆய்வுகள் இடம்பெறும்.

### 2. மொழிபெயர்ப்புகள் :

வேறுபட்ட மொழிப்புலமை கொண்ட மாணவர் களின் மொழிவளத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் புத்தகங்கள், ஆக்கங்கள், கட்டுரைகளை மொழி பெயர்ப்புச் செய்ய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### 3. சாளர வெளியீடு :

எழுத்துத்துறை ஊக்குவிக்கும் நோக்கத்தில் “சாளரம்” எனும் சுவர் சஞ்சிகையில் ஆக்கங்களை காட்சிப்படுத்தல்.

### 4. புத்தாக்க செயற்பாடுகள் :

இங்கு ஆய்வு ரீதியான புதிய அணுகுமுறைகளை, வழிமுறைகளைக் கொண்டு ஆய்வுச் செயற்பாடுகளை புதிய செல்நெறியை நோக்கி நகர்த்திச் செல்வதை ஊக்குவிக்கின்றது. இங்கு குறுந் திரைப்படங்கள், புதிய கருவிகளைக் கண்டுபிடித்தல், சமூகச் சித்திரங்கள் போன்றனவும் உள்வாங்கப்படும்.

### 5. பொதுவான நிகழ்ச்சிகள் :

இவை மாணவர்களை ஆய்வுச் செயற்பாடுகளின் பக்கம் தூண்டுகின்ற, ஆய்வு மன்றத்தோடு சேர்ந்து பணியாற்ற உதவுகின்ற நிகழ்ச்சி நிரல்களாகும். இவற்றுள் ஆய்வு விவாதங்கள், ஆய்வுப் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள், ஆய்வு முன்மொழிவுகள் (presentations), ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் இடம்பெறும்.

### 6. வரலாற்று மூலாதாரங்களை தொகுத்து ஆவணப்படுத்தல் :

கடந்து வந்த பாதைகள் குறித்த தடையங்கள், சூழ்நிலைகள், அனுபவங்கள், மனிதர்களைக் கொண்டு வரலாற்றை அடையாளப்படுத்தல். இதன் நோக்கங்களாக வரலாற்று தகவல்களை சேகரித்தல், வரலாற்றுத் தகல்களை தொகுத்து ஒழுங்கு படுத்தல், வரலாற்றுத் தகவல்களை ஆவணப் படுத்தி பாதுகாத்தல், தேவை ஏற்படும் போது ஆவணங்களை வெளியீடு செய்தல் போன்றன காணப்படுகின்றன.

இந்தவகையில் இம்மன்றமானது ஆரம்பிக்கப் பட்டது முதல் தற்போது வரை மாணவர் களிடத்தில் ஆய்வு செயற்பாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சி களை ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றது. அவற்றுள் சிலவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

- ஆய்வுக் கலாச்ாரம் குறித்த செயலமர்வு
- ஆய்வு முன்வைப்புக்கள் - முஸ்லிம் தனியார் சட்டம்
- ஆளுமையை இனங்காணல்
- எழுத்தணிக்கலைப் போட்டி
- அறிஞர் சித்திலெப்பை பற்றிய அறிமுகம்
- ஆய்வுக் கருத்தரங்குகள்
- களஆய்வுச் சுற்றுலா
- சாளர வெளியீடுகள்
- ஆய்வுக் கட்டுரைகள்
- புத்தக வெளியீடுகள்
- சஞ்சிகை வெளியீடு

இம்மன்றத்தின் ஆரம்ப உயர்மட்டக் குழு வினர் கே.எம். ஸஹீம் (தலைவர்), எம்.என். அப்துர் ரஹ்மான் (செயலாளர்), எஸ். ஸபீயுல்லாஹ் (பொருளாளர்), ஏ.கே.எப். நதீரா (உப தலைவி), எம்.எம்.எப். ஸம்ஹா (உப வெயலாள்).

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்களை ஆய்வுக் கலாசாரத்தின் பால் வழிகாட்டுகின்ற இம்மன்றமானது இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியாகிய (2017) ஸஹீம் கமால் (இர்பானி) அவர்களின் விடாமுயற்சியின் பலனாக உருவாக்கப்பட்டது எனலாம். இம்மன்றம் சிறப்பாக பயணிக்க வல்லவனை பிரார்த்திப் போமாக!




# ஆய்வு முறையில் தரவு சேகரிப்பு நுட்பங்கள்

**எப்.எச்.ஏ. ஷிப்லி**
சிரேஷ்ட விரிவுரையாளர் (தகவல் தொழிநுட்பம்)
இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழம்

## அறிமுகம்

ஆய்வு என்பது ஆய்வுக்குரிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தீர்வுகளைக் கண்டடையக்கூடிய ஒரு முறைமைசார் அணுகுமுறை என்று சொல்லலாம். இன்றைய காலப்பகுதியில் மருத்துவம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம், தொழிநுட்பம் என்று எல்லாத்தளங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுகளின் மூலம் பல அபரிதமான புதிய கண்டுபிடிப்புகளும், சமூகம் சார் பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளும் எட்டப்பட்டு வருகின்றன. இத்தகு ஆய்வுசார் முயற்சிகளில் தரவு சேகரித்தல் என்பது முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆய்வு முறையியல் எவ்வாறு இருந்தாலும் சரியான தரவுகள் சேகரிக்கப்ப் படுமிடத்து மட்டுமே சரியான ஆய்வு முடிவுகளை எட்ட முடியும். அந்தவகையில் ஒரு ஆய்வாளருக்கு தரவு சேகரிக்கும் நுட்பங்கள் தொடர்பில் போதிய அறிவு அவசியமாகிறது. தனது ஆய்வுத் தலைப்புக்கு ஏற்ப எவ்வாறு தரவுகள் சேகரிக்கப்படவேண்டும் என்பது ஆய்வின் வெற்றியை தீர்மானிக்கும் ஒரு காரணியாகவும் நோக்கப்படுகிறது.

## தரவுகளின் மூலங்கள் (Sources of Data)

பொதுவாக தரவுகளின் மூலங்களை இரண்டாக வகைப்படுத்துகின்றனர். அந்த வகையில் அவை முதலாம் நிலைத் தரவுகள் என்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்று வகைப் படுத்தப்படுகின்றன.

முதலாம் நிலைத்தரவு என்பது குறித்த ஆய்வு நோக்கங்களுக்காக ஆய்வாளரால் முதன்முறை சேகரிக்கப்படும் தரவுகளைக்குறிக்கின்றது. இவை, குறித்த ஆய்வு நோக்கங்களையும், ஆய்வுப் பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு சேகரிக்கப்படும்.

இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன ஏற்கனவே இருக்கின்ற தரவுகளை குறித்த ஆய்வுக்காக ஆய்வாளர் மீளப்பயன்படுத்தும் தரவுகளைக் குறிக்கும். புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், நிறுவனக் கணக்கறிக்கைகள், அரச வெளியீடுகள், இணையத்தளங்கள், இணைய சஞ்சிகைகள், ஊடகங்கள் என்று வழிமுறைகளில் இரண்டாம் நிலைத் தரவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

## தரவு சேகரிப்பு நுட்பங்கள்

ஆய்வாளர் தன்னுடைய சுய விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல் தரவுகளைச் சேகரிக்கும் திறன் உடையவராகவும், நம்பிக்கை உடையவராகவும் தகவலாளர் களிடம் இருந்து தரவுகளை

முழுமையாகப் பெற்றுச் சேகரிக்கும் திறன் உடையவராகவும் இருக்க வேண்டும். சமூகம் ஏற்றுக் கொண்டவை பற்றியோ அல்லது ஏற்றுக் கொள்ளாதவை பற்றியோ கருத்தில் கொள்ளாமல் தரவுகளைச் சேகரிக்க வேண்டும். (தமிழ் இணையக் கல்விக்கழகம், 2014).

இக்கட்டுரையானது பிரதானமாக பேராசிரியர் சபா. ஜெயராசா எழுதிய ஆய்வு முறையியல் நூலினையும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் குறிப்புகளையும் அடிப்படையாகக்கொண்டே எழுதப்படுகிறது. இதன்மூலம் கனதியான பல விடயங்களை வாசகர்களுக்கு வழங்குவதே கட்டுரையாசிரியரின் நோக்கமாகவும் அமைகிறது.

அந்தவகையில் முதல் நிலைத் தரவுகள் சேகரிக்கும் பின்வரும் மூன்று நுட்பங்கள் பற்றியே இக்கட்டுரை பிரதானமாக ஆராய்கிறது.

1. நேர்காணல் (Interview)
2. வினாக்கொத்து (Questionnaire)
3. உற்றுநோக்கல் (Observation)

## நேர்காணல் (Interview)

ஆய்வாளர் தகவலாளரை நேரில் சென்று கண்டு உரையாடுவது நேர்காணல் ஆகும். இதனைப் பேட்டி முறை என்றும் குறிப்பிடுவர். நேர்காணலுக்கான இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவதும் உருவாக்கித் தருவதும் நேர்காணலின் முதல்படியாகும். தகவலாளரின் ஒத்துழைப்பின்றி நேர்காணலை வெற்றிகரமாக நடத்த இயலாது. நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு அதன் அடிப்படையில் நடத்தப்படும் நேர்காணலே சரியான தகவல்களைத் திரட்டித் தரும்.

களப்பணியில் தகவல் திரட்டுவதன் அடிப்படையில் நேர்காணலை இருவகைப் படுத்தலாம்.

1) கட்டமைப்புடைய நேர்காணல் (Structured Interview)
2) கட்டமைப்பில்லா நேர்காணல் (Unstructured Interview)

## கட்டமைப்புடைய நேர்காணல்

நேர்காணலின் நோக்கம், பயன், வினாக்கள், அணுகுமுறை ஆகிய அனைத்தையும் முன்னரே தீர்மானித்துத் திட்டமிட்டு நடத்தப்படுவதாகும். தரவுகளைத் துல்லியமாகப் பெற இம்முறை உதவும். ஆனால் இம்முறை இயல்பான சமூகச் செயலாக இல்லாமல் எந்திரத்தனமாகவும் செயற்கைத் தன்மையுடையதாகவும் ஆகிவிடலாம்.

## கட்டமைப்பில்லா நேர்காணல்

நேர்காண்போரின் திறமை, தகவலாளியின் மனநிலை, சூழல் இவற்றிற்கேற்ப அந்தந்த நேரத்தில் அமைத்துக் கொள்வதுவ கட்டமைப்பில்லா நேர்காணல் ஆகும். இது நெகிழ்ச்சியும், இயல்புப் போக்கும் உடையது. முன்னரே வினாக்களை உருவாக்காமல் தகவலாளியை அணுகி நேர்காணலைத் தொடங்குவார். தகவலாளியும் பரந்த அளவில் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள், வழக்காற்று அனுபவங்கள், எண்ணங்கள், உணர்வுகள் போன்றவற்றை இயல்பான போக்கில்

விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைப்பார். அதிலிருந்து ஆய்வாளர் தேவை யானதை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இவை தவிர பேராசிரியர் சபா ஜெயராசா பின்வரும் சில முறைகளையும் குறிப்பிடுகிறார்.

1. முறைசார் நேர்காணல் (FORMAL INTERVIEW)
2. முறைசாரா நேர்காணல் (NON FORMAL INTERVIEW)
3. தனியாள் நேர்காணல் (PERSONAL INTERVIEW)
4. குழுநிலை நேர்காணல் (GROUP INTERVIEW)
5. குறுங்கால நேர்காணல் (SHORT TERM INTERVIEW)
6. தொடரும் நேர்காணல் (PROLONGED INTERVIEW)
7. பிணி ஆய்ந்தறியும் நேர்காணல் (DIAGNOSTIC INTERVIEW)
8. தீர்விய நேர்காணல் (TREATMENT INTERVIEW)
9. அளவுநிலை நேர்காணல் (QUANTITATIVE INTERVIEW)
10. பண்பு நிலை நேர்காணல் (QUALITATIVE INTERVIEW)

நேர்காணலைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்கின்ற போது ஒரு ஆய்வாளன், எவ்வாறான கேள்விகளை கேட்க வேண்டும், எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும், எவ்வாறு தரவுகளை குறித்துக்கொள்ள வேண்டும், எவ்வாறு நேர்காணலை தொடங்கி, நடாத்தி, முடிக்க வேண்டும் போன்ற நுட்பங்களை அறிந்துகொள்வது முக்கியமானது.

## வினாக்கொத்து (Questionnaire)

ஆய்வுப் பொருள் குறித்த வினாக்களை எழுத்து வடிவில் பட்டியலாகத் தொகுத்துத் தகவலாளர்களிடம் கொடுத்துப் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்வது வினா நிரல் முறை ஆகும். வினா வரைவு என்பது எழுத்துரையாக வரிவடிவில் அமைகின்றது. ஒரு பெருங்குழுவின் (சமூகக் குழு அல்லது இனக்குழு) சார்பாளராக உள்ள சில தகவலாளிகளைத் தேர்ந்தெடுத்து வினா நிரலை வழங்க வேண்டும். அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளை ஆராய்ந்து அதில் கிடைக்கும் முடிவுகளை இறுதியானவைகளாகக் கொள்ள வேண்டும். இந்த முடிவுகள் பெருமளவில் அக்குழு முழுவதற்கும் பொருந்துவதாக அமையும். அப்பெருங்குழு முழுமைக்கும் பொதுவானதாக அமையும் தன்மை இவ்வினா நிரலுக்கு உண்டு. (தமிழ் இணையக் கல்விக்கழகம், 2014).

தகவல்களை இலகுவாக திரட்டிக் கொள்வதற்குரிய எளிமையான சாதனமாக வினாக்கொத்து அமைகின்றது. இது ஆய்வாளர்களுக்கு நேரச் சிக்கனத்தை தரும் சாதனமாகவும் உள்ளது. தகவல் தருவோர் தாம் யார் என்று தெரிவிக்காத வகையில் துலங்கலைத் தருகின்ற சாத்தியக் கூறுகளும் இதிலே காணப்படுகின்றன. தகவல் தருவோரின் நேர்மியப்பண்பு, கருத்துறுதித் தன்மை அதனை ஒரு பொறுப்பு மிக்க செயலாக கருதும் மனப்பக்குவம் முதலியவை வெற்றியைத்தரும்.

வினாக்கள் எளிதானதாகவும், சிக்கலற்றதாயும், தெளிவானதாயும் இருத்தல் வேண்டும். குறுகிய நேரத்திற்குள் விடையளிக்கக் கூடியதாக வினாக்கள் தயாரிக்கப்படுதல் நல்லது.

விடைகள் நம்பககரமானதாக இருக்கின்றதா என்பதை கண்டடையக் கூடியவாறு குறுக்குப்

பிடிகளையும், வினாக் கொத்தை வடிவமைப்பவர் கருத்திலே கொள்ளுதல் நன்று. விடை தருபவரை திணறடிக்க வைக்காது ஈடுபாட்டுடன் இசைவு தர வைக்கும் பண்பு வினாக்கொத்துக்கு சிறப்புத் தரும்.

வினாக்கள் பிரதியடிப்பு (Repetition) கொண்டிராது அமைதல் வேண்டும். அத்துடன் நன்கு வகை பிரிக்கப்பட்டும் ஒழுங்கமைக்கப்பட்டும் இருத்தல் வேண்டும். முன் கூட்டியே பரீட்சிக்கப்பட்ட வினாக்களை (Pretested Questionnaire) பயன்படுத்துதல் வினாக்கொத்து அமைப்பதற்கு துணையாக இருக்கும். வினாக்கொத்தை திருத்தமாக வடிவமைப் பதற்கும் தகவல்களை செப்பமாக செய்வதற்கும் அது கைகொடுக்கும். ஒரே வினாக்கொத்தை சிறிது மாற்றங்களுடன் ஒருவருக்கு மீளக் கொடுத்து இசைவுதலின் (RESPONDING) நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் முறையையும் ஆய்வாளர் பயன்படுத்தலாம். (சபா ஜெயராசா, 2006).

## உற்றுநோக்கல் (Observation)

களப்பணித் தரவுச் சேகரிப்பில் முக்கியமான கருவி உற்று நோக்கல் என்பதாகும். உற்று நோக்கல் என்பது குறிப்பிட்ட நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு நடைபெறும் அல்லது நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வை நுணுக்கமாக அவதானிப்பதாகும்.

உற்று நோக்கலின் வகைகள் :

1) பங்கு பெறும் உற்று நோக்கல் (Participant observation)
2) பங்கு பெறா உற்று நோக்கல் (Non-Participant observation)
3) செய்காட்சி முறை (Arrangement observation)

## பங்கு பெறும் உற்று நோக்கல்

பங்கு பெறும் உற்று நோக்கலில் நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, அதில் ஆய்வாளரும் முழுமையாகப் பங்கு கொண்டு செயல்களில் விவாதங்களில் கலந்து கொள்வதாகும்.

### பங்கு பெறா உற்று நோக்கல்

ஆய்வாளர் ஆய்வுச் சூழல் மற்றும் நிகழ்விலிருந்து தன்னை முற்றிலுமாக விலக்கிக் கொண்டு தரவுகளைத் திரட்டும் முறை பங்கு பெறா உற்று நோக்கல் எனப்படும். சமூகப் பண்பாட்டுச் சூழல்களையும், சிக்கல்களையும் ஆய்ந்திடப் பங்கு பெறா உற்று நோக்கல் சிறந்த முறையாகும். பங்கு கொள்ளாமல் பார்வையாளராக ஒதுங்கியிருந்து நிகழ்ச்சியைக் கவனிக்கும் போது, சேகரிப்பாளர் நிகழ்ச்சியின் இயற்கையான போக்கில் குறுக்கிடாமல் இருக்கின்றார். குறிப்புகள் எடுத்துக் கொள்ளவும், நிகழ்ச்சியினை ஒலிப்பதிவு செய்யவும், புகைப்படம் எடுக்கவும் அவருக்கு வாய்ப்புகள் உள்ளன.

## செய்காட்சி முறை

செய்காட்சி முறை என்பது பரிசோதனை முறையில் ஆய்வாளர் தாமே ஒரு நிகழ்விற்கு ஏற்பாடு செய்து, தம் தேவைக்கேற்ப நிகழ்வின் காரணிகளைக் கட்டுப்படுத்தியும் நீக்கியும் உற்று

நோக்குவதாகும். ஆய்வாளரே ஒரு நிகழ்வை உருவாக்கிச் செய்து காண்பதால் இது செய்காட்சி முறை எனப்படுகிறது.

ஆய்வாளர் இம்முறையைப் பயன்படுத்தித் துல்லியமான விடை காணும் வரை, எத்தனை முறை வேண்டுமானாலும் நிகழ்வை மீண்டும் மீண்டும் உருவாக்கி அறிந்து கொள்ளலாம்.

## தரவு சேகரிப்பின் நெறிமுறைகள் (Ethics)

தரவு சேகரிப்பின்போது பெறப்படும் அனைத்துத் தரவுகளையும் ரகசியம் பேணுவது மிக முக்கியமான ஒரு விடயமாகும். அதேபோல தரவுகள் பிழையாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படக்கூடாது என்பதும் முக்கியமே. அவ்வாறே தரவுகள் சேகரிக்கப்படும் போது தகவலாளரின் தனிப்பட்ட தரவுகள் அவசியமின்றி பெறப்படக்கூடாது என்பதில் ஆய்வாளர் கவனம் செலுத்த வேண்டும். மேலும், பலவந்தமாக யாரிடமிருந்தும் தரவுகள் சேகரிக்க எத்தனிப்பதை ஒரு ஆய்வாளர் முற்றாகத் தவிர்க்க வேண்டும். முக்கியமாக உடல், உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவது போன்ற நுட்பங்களை தரவு சேகரிக்கும் ஒருவர் எக்காரணம் கொண்டும் பயன்படுத்தக்கூடாது.

## முடிவுரை

தரவு சேகரித்தல் என்பது ஆய்வு ஒன்றின் இன்றியமையாத பாகம் என்பதில் மாற்றுக்கருத்துகள் இருக்க முடியாது. ஆய்வு நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும், ஆய்வுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் தரவு சேகரிக்கும் நுட்பங்கள் சரியான முறையில் பிரயோகிக்கப்பட வேண்டும். ஆதலால்தான் ஒரு சிறந்த ஆய்வாளர் தரவு சேகரிக்கும் நுட்பங்கள் பற்றிய தெளிந்த அறிவினைக் கொண்டிருப்பார். இத்தகு நுட்பங்களை சிறந்த முறையில் பிரயோகிப்பதனால் ஆய்வு முயற்சிகள் வினைத்திறனாக அமைவதோடு, பொருத்தமான தரவுகளை பொருத்தமான முறைகளில் பெறக்கூடிய சூழ்நிலையும் உருவாகும். எனவேதான் மேற்படி நுட்பங்களை தெளிவாக விளங்கிக்கொண்டு, ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப் பிரச்சினை, ஆய்வு நோக்கங்கள், ஆய்வு முறையியல் என்பனவற்றுக்கு ஏற்ப தரவுகளை சேகரித்து, சிறந்த ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் தரமான ஆய்வு முயற்சிகளை முன்னெடுப்போம்.

## உசாத்துணைகள்


1. அணுகுமுறைகள் (n.d.). Retrieved September 01, 2018, from http://www.tamilvu.org/courses/degree/a061/a0611/html/a0611514.htm
2. சபா ஜெயராசா. (2006). ஆய்வு முறையியல் (Research methodology) (3rd ed.). யாழ்ப்பாணம், Northern: Book Lab.
3. Sekaran, U., & Bougie, R. (2011). Research methods for business: A skill building approach. Chichester: John Wiley & Sons.



# பன்மைத்துவ சமூக சூழலில் இனங்களிடையே நல்லுறவை மேம்படுத்துவதில் சமூகப் பணிகள் – ஓர் இஸ்லாமிய நோக்கு


**MT. Habeebullah** B.A. (Hons), M.A., M.A. (Sudan)
**Lecturer, Dept. of Arabic Language, FIA**
**South Eastern University of Sri Lanka**


**அறிமுகம் :**
இன்று முஸ்லிம்களாகிய நாம் பல்லின சமூகக் குழுமங்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் வாழ்ந்து வருகின்றோம். இங்கு வாழும் முஸ்லிம்கள் இஸ்லாத்தை பின்பற்றி வாழ்வதற்கான அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ள இத்தகைய ஒரு சூழலில் இனங்களிடையே நல்லுறவைப் பேணி இஸ்லாத்தை பொதுமைப்படுத்திய முதன்மை நிலை மார்க்கமாக அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது கைகளிலேயே விடப் பட்டுள்ளன. இவற்றுக்கான வழிகாட்டல்களும் முன்மாதிரிகளும் அல்குர்ஆன், சுன்னா ஆகிய முதன்மை மூலாதாரங்களிலிருந்து பெறுவதற் கான வாய்ப்பும் எமக்குள்ளது. இத்தகைய பாரிய பணிகளை முன்னெடுக்கும் வகையிலான பல்வேறு சமூக சமய அமைப்புகளும் இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்களும் மனித வள மற்றும் பௌதீக வளங்களுடன் காணப்படு கின்றன. இத்தகைய சமூகப் பொறுப்புக்களை முன்னெடுக்கும் சமூகப்பணிகள் எமது தரப்பிலிருந்து மேற்கொள்வது முக்கிய கடமை யாகவுள்ளது.

சமூகப் பணிகள் *(Social Services)* என்றால் என்ன எனபதை "ழிஹ்யானி" என்ற அறிஞர் விளக்கும் போது ஒருவர் சமூகத்திலிருந்து எந்தப் பிரதி பலனையும் எதிர்பார்க்காது நிறுவன ரீதியாகவோ தனிப்பட்ட ரீதியிலோ சமூகத்தின் பொறுப்புக்களை எடுத்துக் கொண்டு அவற்றுக்கான சேவைகளை முறையே வழங்கு வதையே சமூகப் பணி என அடையாளப்படுத்து கிறார். மேலும் கலாநிதி அலி குறிப்பிடும் போது "ஒரு முஸ்லிம் தான் வாழும் சூழலிள்ள சமூகத்தில் எந்த பிரதிபலன்களையும் கருத்திற் கொள்ளாது பண ரீதியாகவோ, பொருளாதார, உடல் மற்றும் சிந்தனா ரீதியாகவோ வழங்கும் அனைத்து சேவைகளையும் குறிப்பதே சமூகப் பணி எனக்குறிப்பிடுகிறார்.

இந்தக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது சமூகப் பணி என்பது அல்லாஹ் விரும்புகின்ற ஒரு உயர்ந்த இபாதத் என்பதற்கு அப்பால் அது இனங்களிடையே இனநல்லுறவையும் சிறந்த புரிதைலையும் வலுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த ஒரு கேடயமாகவும் இருப்பதை நோக்கலாம். அண்மையில் உலகின் பல இடங்களில் ஏற்பட்ட சுனாமி மற்றும் வெள்ளப் பெருக்குகளின் போது சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அதிலும் குறிப்பாக இஸ்லாமிய அமைப்புக்களின் சமூக சேவைப் பணிகள் பலராலும் மெச்சப்படும் அளவு அடையாளப் படுத்தப்படுள்ளதை இங்கு ஈண்டு குறிப்பிட முடியும். உலகலாவிய ரீதியில் தொண்டு நிறுவனங்கள் சமூக, சமய அமைப்புக்கள் இத்தகைய சமூகப் பணிகளை முன்வைத்து அதிகமான மாற்றங்களை ஏற்படுத்தியும் வருகிறார்கள்.

இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழும் நாட்டிலும் இனநல்லுறவை கட்டியெழுப்ப எமது தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகள் பெரும் மாற்றத்திற்கான உறுதுணையாக அமையும் என்பது திண்ணம். எம்மிடமுள்ள சமூக தொண்டு நிறுவனங்கள் சமய சமூக அமைப்புக்கள் என்பன இனநல்லுறவை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அந்நிறுவனங்களின் பணிகள் அனைத்து இனங்களையும் சென்றடையும் வகையிலும் அனைவரையும் உள்ளீர்த்த மட்டத்திலான சமூகத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது காலத்தின் இன்றைய முக்கிய தேவையாக வுள்ளது.

## இஸ்லாத்தில் சமூகப் பணிகள்

இஸ்லாமிய மார்க்கம் ஒரு முழுமையான வாழ்கை நெறி. அதன் மூலாதாரங்களாக அல்குர்ஆனும் சுன்னாவும் விளங்குகிறது. மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான முழுமையான வழிகாட்டல் களையும் போதனைகளையும் இஸ்லாம் அல் குர்ஆன், சுன்னாஹ் என்பவற்றின் மூலம் எமக்கு முன்வைத்திருக்கிறது. இந்த வகையில் இஸ்லாம் சமூகப் பணிகள் புரிவதை பெரும் ஒரு இபாதாவாகவும் அதிகம் அல்லாஹ்விடம் நன்மைகளையும் அவனின் திருப்தியையும் பெற்றுத் தரும் ஒரு செயலாகவும் நோக்குகிறது. இஸ்லாம் முன்வைக்கும் சமூகப் பணிகள் என்ற எண்ணக்கரு ஒரு இனக் குழுமத்தைச் சாராது மானிடம் *(Human)* எனும் பொதுமைப்படுத்திய எண்ணக்கருவை உள்ளடக்கிய ஒன்றாகவே விளங்குகிறது. சமூகப் பணிகள் பல்லினக் குழுமங்கள் வாழும் ஒரு நாட்டில் அவர்களுக்கு மத்தியில் புரிந்துணர்வையும் இனநல்லுறவை யும் வலுப்படுத்துவதில் பாரிய பங்களிப்புச் செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

புனித அல்குர்ஆன் சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதுடன் அதில் ஈடுபடுவோர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் எனவும் பரஸ்பரம் உதவி செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. இதனை குர்ஆன் குறிப்பிடும் போது “நீங்கள் நன்மையான காரியங்களுக்கும் தக்வாவை ஏற்படுத்தும் அம்சங்களுக்கும் பரஸ்பரம் ஒத்து ழைப்பாக இருந்து கொள்ளுங்கள். பாவமான காரியங்களுக்கும் பகைமையை உருவாக்கும் அம்சங்களுக்கும் நீங்கள் பரஸ்பரம் உதவியாக இருக்க வேண்டாம்” (சூறா அல் மாயிதா - 02) மேலும் அல்குர்ஆன் “அவர்களின் பேச்சுக்களில் அநேகமானவற்றில் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் தானதருமங்களை அல்லது நன்மை யான காரியங்களை அல்லது மனிதர்களுக்கு மத்தியில் சமாதனத்தை ஏற்படுத்தும் செயல் களில் ஈடுபட்டாலே தவிர. இவற்றை எவர் அல்லாஹ்வின் திருப்தியை நாடி மேற்கொள் வாரோ அவருக்கு நாம் மகத்தான கூலியினை வழங்குவோம்.” (அந்நிஸா - 114) எனவே சமூகப் பணிகளில் மற்றும் சமாதான நடவடிக்ககளில் நன்மையான கரியங்களில் முன்னெடுப்புக்களை மேற்கொள்வது அதிக மான நன்மைகளையும் இறை திருப்தியையும் பெற்றுத் தரும் செயல் என்பதை நாம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் சமூகப் பணிகள் பற்றி பல ஹதீஸ்களில் வலியுறுத்தி யிருப்பதுடன் அவர்களே அவற்றின் முன்மாதிரி களாகவும் விளங்கி இருக்கிறார்கள். தமது 25 வயதில் நபியவர்கள் “ஹில்புல் புலூல்“ எனும் சமூக இயக்கத்தின் அங்கத்துவராக இருந்து சமூகப் பணிகளிலும் கோத்திரங்களுக்கிடையே நிலவிய முரண்பாடுகளை நீக்னும் சமாதான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்கள். மேலும் சமூகப்பணிகள் பற்றி நபியவர்கள் குறிப்பிடும் போது “மனிதன் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளிலும் தனது உடம்பிலுள்ள மூட்டுக்காக தானதர்மங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில் இருவருக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துவதும், ஒருவருக்கு அவரின் வாகனத்தின் மீது ஏறிச் செல்லவும் அவரின் பொருட்களை ஏற்றவும் இறக்கவும் உதவி புரிவதும் பாதையில் மனிதர்களுக்கு தடயங்களை விளைவிக்கும் இடைஞ்சல் தரும் பொருட்களை அப்புறப் படுத்துவதும் ஸதகா (தானதருமம்) ஆகும் எனக் குறிப்பிட்டார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்) அல்லாஹ்வின் அன்பும் அருளும் சமூகப் பணிகள் மூலம் மனிதனுக்கு கிடைக்கிறது. “ஒரு அடியான் தனது சகோதர அடியானுக்கு உதவி புரியும் காலமெல்லாம் அல்லாஹ்வும் அவனுக்கு உதவி புரிகிறான்” என நபியவ்கள் குறிப்பிட்டார்கள். மேலும் “விதவைகள், அனாதைகள் ஆகியோரின் விவகாரங்களில் ஈடுபாடு காட்டுபவர் அல்லாஹ்வின் பாதையில் போராடுவர், இரவு நேரங்களிளல் நின்று வணங்குபவர் மற்றும் பகல் வேளைகளில் நோன்பு நோற்றவர் ஆகியோரின் அந்தஸ்தை அடைந்தவரைப் போலாவார்” என நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (புகரி, முஸ்லிம்) மற்றொரு ஹதீஸில் “ஒரு சகோதரனின் தேவையை நிறைவேற்றுவதற்காக அவருடன் கொஞ்ச தூரம் நடந்து செல்வது பத்து வருடம் பள்ளியல் இஃதிகாப் இருப்பதை விட சிறந்தது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்கள் சமூகப் பணிகள் தொடர்பாக குறிப்பிடும் போது “ஒரு சகோதரனின் தேவையை நிறைவேற்று வதற்காக கொஞ்ச தூரம் நடந்து செல்வது பள்ளியில் இரண்டு மாதங்கள் இஃதிகாப் இருப்பதை விட எனக்கு மிகப் பிரியமானது” எனக் குறிப்பிடுகிறார்கள். எனவே இஸ்லாம் இவ்வாறு பரந்துபட்ட ரீதியில் சமூகப் பணிகளை முக்கியத்துவப்படுத்தி பேசி

யுள்ளதுடன் சில சமயங்களில் அடிப்படையான கடமைகள் கூட சமூகத்தின் உயர்ந்த இலட்சியத்திற்காக இரண்டாம் நிலைக்குச் சென்று சமூகப் பணிகள் முன்னுரிமைப்படுத்தும் சந்தர்ப்பங்களை கூட ஷரீஆவின் பரிணாமத்தில் நாம் அவதானிக்க முடியும். உதாரணமாக ஹஜ் கடமையான ஒருவர் தனது பிரதேசத்தில் கடுமையான பொருளாதாரத் தேவை மிகைத்துள்ள சூழலில் அதனை விட்டுவிட்டு சமூகத் தேவைகளையே முதன்மைப்படுத்த வேண்டும் என்பதை ஷரீஆ குறிப்பிட்டிருக்கிறது.

அல்லாஹ்வால் மனிதர்களை நேர்வழிப்படுத்து வதற்காக அனுப்பப்பட்ட இறைத் தூதர்கள் அனைவரும் இஸ்லாத்தின் அடிப்படையான நம்பிக்கை சார்ந்த அம்சங்களை நோக்கி மக்களுக்கு அழைப்புவிடுத்ததோடு அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு தேவையான சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அல்குர்ஆன் "நற்கருமங்கள் புரியுமாறு அழைப்புவிடுக்கின்ற" இறை வசனங்கள் அனைத்தும் நல்லமல்களையும் சமூப்பணி களையும் தூண்டும் வகையிலான வழிகாட்ட லாகும். அல்-குர்ஆன் குறிப்பிடும் "அல் அமலுஸ் ஸாலிஹாத்" என்ற பதப்பிரயோகம் குறிப்பிட்ட சில வணக்கவழிபாடுகளுடன் மாத்திரம் அது வரையறுத்துக் கொள்ளவில்லை.

## இனங்களிடையே நல்லிணக்கத்தை வலுவூட்டும் சமூகப்பணிகள்

சமூகப் பணிகளே மனிதர்களை சம்பாதித்துக் கொள்வதற்கான சிறந்த வழியாகவும் அவர் களின் மீது அதிகம் செல்வாக்குச் செலுத்துவதற் கான சந்தர்ப்பமாகவும் விளங்குகிறது. இந்த வகையில் பன்மைத்துவ சூழலில் இன நல்லுறவை வலுப்படுத்தி சிறந்த புரிந்துணர் வையும் அவர்கள் சார்ந்துள்ள சிந்தனைகள், மதம் என்பவற்றை சரியாக மதிப்பீடு செய்வதற்கான ஒரு பிரதான களமாகவும் சமூகப் பணிகள் விளங்குகின்றது. மேலும் இத்தகைய சமூகப் பணி ஒரு சமூகத்தின் மனப்பாங்கிலும் பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தவும் தப்பவிப்பிராயங்களை களைய வும் வழிகோலுகிறது எனலாம். இந்த வகையில் பன்மைத்துவ சமூக சூழலில் இனநல்லுறவை மேன்மைப்படுத்த நாம் செய்ய வேண்டிய முக்கிய சில சமூகப் பணிகளை பின்வருமாறு நாம் குறிப்பிடலாம்.

### 1. அனர்த்தங்களின் போது மனித நேய உதவிகளில் ஈடுபடல்:

தற்போதைய சூழலில் உலகின் பல இடங்களில் அதிமான அனர்த்தங்கள் இயற்கை அழிவுகள் அடிக்கடி இடம் பெற்று வருவதுடன் அதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை் எதிர் நோக்கிய வண்ணமுள்ளனர். வெள்ளப் பெருக்கு, சுனாமி அனர்த்தம், பூகம்பம் ஏற்படல், பூமியதிர்ச்சி போன்ற அனர்த்தங்களினால் பல நாடுகள் சவால்களை எதிர் நோக்கிய வண்ணம் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிக்கபட்ட மக்களுக்கு மனித நேய உதவிகளை புரிய வேண்டும், அவர்களை பாதுகாப்பது அனைவரின் மீதான கடமை என்பதை பொதுவாக அனைத்து சமயங்கள் சமூகங்களும் குறிப்பிடுவதைப் போன்று இஸ்லாம் அதனை கட்டாயமான ஒரு விடயமாக வலியுறுத்துவதுடன் அதற்கான இம்மை, மறுமைப் பயன்களையும் சிலாகித்து கூறியுள்ளமை அடையாளமிட்டு சொல்ல வேண்டிய ஒன்றாகும். "ஒருவர் ஒரு அடியானுக்கு உதவும் காலமெல்லாம் அவனுக்கும் அல்லாஹ் உதவி புரிகிறான்" என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். (புகாரி முஸ்லிம்) அல்குர்ஆன் மற்றோர் இடத்தில் "அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக்கூடாது எனவும் பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டும் எனவும் நெருங்கிய உறவு முறை அயலவருக்கும் அந்நிய தூரத்து அயலவருக்கும் வேறு மதத்தை சேர்ந்த அயலவருக்கும் உபகாரம் செய்யுமாறும் உமது இரட்சகன் கட்டளையிட்டுள்ளான்." (சூறா அந்நிஸா) மேலும் நபியவர்கள் குறிப்பிடும் போது "அனைத்து அம்சங்களிலும் நல்லுபகாரமாக நடந்து கொள்வதை அல்லாஹ் உங்கள் மீது விதியாக்கியுள்ளான். (புகாரி)

எனவே இஸ்லாம் மனித நேய உதவிகளை வழங்கும் போது இன ரீதியான சமய ரீதியான மற்றும் கோத்திர ரீதியான பாகுபாடுகளை கவனத்தில் கொள்ளக் கூடாது என்பதை குறிப்பிட்டுள்ளது. பொதுவாக அல்குர்ஆன் "உணவளித்தல்" "பொருளாதார உதவிகளை மேற்கொள்ளல்" போன்ற விடயங்களை குறிப்பிடும் போதெல்லாம் அடைமொழிகளை கொண்டு வரையறுக்காது பொதுவாகவே அனாதைகள், ஏழைகள் முஸ்லிமாகவோ முஸ்லிம் அல்லாதவராகவோ வேறு யாராகவோ இருக்கலாம் என்பதை நேரடியாக குறிப்பிட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

### 2. மோதல்களின் போதான சந்தர்ப்பங்களில் மத்தியஸ்தம் வகித்தல் :

சமூகப்பணிகளில் முக்கியமான ஒரு பகுதியாக மோதல்களின் போது மத்தியஸ்தம் வகித்தல் என்ற உயர்ந்த பணி விளங்குகிறது. சமூகத்துக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துவது மிக முக்கிய பணியாகவும் அதிக நன்மைகளை பெற்றுத் தரும் ஒரு செயலாகவும் விளங்குகிறது. "மு.்.மின்களில் இரு சாரார் முரண்பட்டுக் கொண்டால் அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துங்கள்." (அல் குர்ஆன்) மற்றோர் இடத்தில் "சமாதானமே சிறந்தது" எனவும் அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. இவ்விரு வசனங்களும் இன்னும் இது தொடர்பாக வந்துள்ள அநேகமான ஹதீஸ்களும் முரண்பாடுகளின் போது மத்தியஸ்தம் வகித்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்கள் ஈடுபடவேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

### 3. சமூக நீதியை நிலை நாட்டல் :

சமூகத்திற்கு எதிரான அநியாயங்களை களைந்து நீதியை நிலைநாட்டப் பாடுபடுவது மிகப் பெரிய இபாதாவாகக் கொள்ளப்படுகிறது. "அநியாயக்கார ஆட்சியாளனின் முன்னால் சத்தியத்தை எடுத்துரைப்பதே ஜிஹாதுகளில் மிகப் பெரிய ஜிஹாத்" என நபியவர்கள் குறிப்பிட்டார்கள். "நீதியான ஆட்சியாளன் மறுமை நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் நிழலைப் பெற்ற கூட்டத்தில் வீற்றிருப்பான்" என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். சமூக அநீதிக்கு எதிராக ஒரே அணியில் நின்று குரல் கொடுப்பது ஒரு முஸ்லிமின் கடமை யாகவும் அதே வேளை இன நல்லிணக்கம் ஏற்படவும் வாய்ப்பு உருவாகிறது.

### 4. சிரமதானப் பணிகளில் ஈடுபடல்

பல்லின சமூகங்களுடன் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பரஸ்பரம் புரிந்துணர்வும் இனநல்லுறவும் ஏற்படுகிறது. கிராமங்கள், வீதிகள் என இப்பணிகளில் கூட்டாக இணைந்து செயல்படுதல் இன நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியான செயற் பாடாக அமையும்.

### 5. இரத்ததானம் செய்தல்

"எவர் ஒரு ஆன்மாவை கொலை செய்வாரோ அவர் முழு மனித சமூகத்தையும் கொலை செய்தவரைப் போலாவார். மேலும் எவர் ஒரு ஆன்மாவை வாழ வைப்பாரோ அவர் முழு மனித சமூகத்தையும் வாழ வைத்தவரைப் போலாவார்" என்ற அல் குர்ஆனிய வசனம் மனித உயிர்களை பாதுகாக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதுடன் மேலும் ஒருவர் தனது இரத்தத்தை மற்றவருக்கு தானமாக வழங்கி உயிர் காக்கும் செயற்பாட்டையும் ஊக்குவிக்கிறது. அத்துடன் இத்தகைய சிறந்த செயற்பாடு இனநல்லுறவை வளர்ப்பதற்கும் பரஸ்பரம் உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வையும் பல்லின சமூகத்திற்கு மத்தியில் உருவாக்குகின்றன.

### முடிவுரை

சமூகப் பணிகளின் ஊடாக சமூக நல்லிணக் கத்தை உருவாக்கும் நடவடிக்கை இலங்கை போன்ற நாடுகளில் மிக அத்தியவசியமான செயற்பாடாக விளங்குவதுடன் கடந்த காலத் தில் தொண்டு நிறுவனங்களின் அனுபவப் பதிவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இனநல்லுறவை வலுவூட்டும் மேற்குறிப்பிட்ட அம்சங்களைப் போன்ற இன்னும் பல செயற்றிட்டங்களும் காணப்படுகின்றன. முஸ்லிம் சமூக அமைப்புக்களும் தமது பணிகளை குறிப்பிட்ட முஸ்லிம் பரப்பெல் லைக்குள் தம்மை வரையறுத்துக் கொள்ளாது அதனை பல்லின சமூகத்திற்கு மத்தியிலும் பரவலாக்கம் செய்வதற்கான திட்டங்களில் இறங்க வேண்டும். முரண்பாடுகள் அதிகரித்து வரும் தற்போதைய சூழலில் பன்மைத்துவ சமூக கள செயற்பாடுகளை முதன்மைப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே அறிவுடைமை சார்ந்த செயற்பாடுகளை நோக்கி நகர்வதாக அமைவதுடன் எதிர்கால அனைத்து இனங்களின் நிலைத்த இருப்புக்கும் அடையாளமாக அமையும் என்பது திண்ணம். அல்லாஹ் அனைத்துக்கும் போதுமானவன்.



# "எழுத்துத் துறையில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு"

### இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைநெறி மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

# "Contribution of University Students in the Field of Writing"

### Research Based on Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

**Miss. M.I.F. Afra, Miss. M.N.F. Nisrin** – மாணவர் ஆய்வு மன்ற அங்கத்தவர்கள்


**ஆய்வுச் சுருக்கம்**

எழுத்துத்துறை என்பது ஏனைய துறைகளைப் போன்று முக்கியமானதோர் பிரிவாகும். இது ஒவ்வொரு படைப்பாளியினதும் தளமாகும். இங்கிருந்து தான் மற்றைய துறைகள் எல்லாமே ஆரம்பமாகின்றன. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முக்கியமானதொரு பீடமாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடம் காணப்படுகின்றது. இப் பீடத்தில் கற்கின்ற மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு எழுத்துத் துறையில் இம் மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்துக்கு முன்னும் பின்னும் காட்டுகின்ற ஈடுபாடு, வாசிப்புக்காக இம் மாணவர்கள் செலவிடும் நேரம், தற்போது எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்டாமைக்கான காரணங்கள், எழுத்துத்துறையை வளர்ப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்களை இவ்வாய்வானது தன்னுள் கொண்டுள்ளது. குறித்த பீடமான இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினை மையமாகக் கொண்டு அமைந்துள்ளதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக் கொத்துக்கள் மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றனவற்றின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்து கற்கின்றனர். இவர்கள் தங்களது பல்கலைக்கழகத்துக்கு முற்பட்ட காலத்தில் பல்துறையாற்றல்களை வெளிக்காட்டக் கூடியவர்களாக இருந்த போதிலும், பல்கலைக்கழக காலத்தில் உரிய முறையில் வளங்களைப் பயன்படுத்தி தமது ஆற்றல்களை வெளிக்காட்டும் அளவு குறைந்துள்ளது என்பது நோக்கத்தக்கது. எவ்வாறிருந்தும் பல்கலைக்கழகத்துக்கு வந்து வெவ்வேறான பல கற்கைகளைத் தொடர்வதாலும் குடும்பத்தின் நெருக்கடியாலும் படிப்புச் சுமை, நேரமின்மை முதலிய காரணங்களினால் மிகச் சொற்பமான மாணவர்களே இப் பணியில் ஈடுபடுகிறார்கள். இதனால், இவ்வாய்வுப் பிரதேசத்தில் எழுத்துத் துறையில் மாணவர்களின் பங்களிப்பானது குறைவாகவே காணப்படுகிறது என்ற முடிவிற்கு வரலாம். மேலும், இப் பணிக்கான பங்களிப்பினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் இவ்வாய்வு முன்வைக் கின்றது.



**கலைச்சொற்கள்**

எழுத்துத்துறை, பல்கலைக்கழக மாணவர்கள், ஈடுபாடு


**அறிமுகம்**

ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு வகையான ஆற்றல்களுடன் படைக்கப்பட்டுள்ளான். எனினும், அத்தகைய ஆற்றல்களை இனங்கண்டு தமது திறமைகளை மேலும் மேலும் விருத்தியுறச் செய்யும் பாக்கியம் மிகக் குறைவாகவே கிடைக்கின்றது. பாடசாலைக் காலத்தில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்ற போது இலைமறை காய்களாகத் தம்முள் மறைந்திருக்கும் ஆற்றல்களை ஓரளவு

இனங்கண்டு கொள்வர். அது ஆசிரியர்கள் மூலம் செவ்வனே வளர்க்கப்படுகின்றது. அவ்வாறே தம்முள் மிளிர்ந்த திறமைகளை இனங்கண்டு வளர்த்துக் கொண்டோர் பாடசாலையை விட்டு வளர்ந்து இளைஞர்களாகிய பின்னும் தம் திறமைகளை மென்மேலும் வளர்த்துக் கொள்வோர் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சொற்பமானவர்களே ஆவர். இலைமறை காயாக மறைந்திருக்கும் ஆற்றல்களுள் கலையார்வம் அல்லது எழுத்தாளர்களாக மிளிரும் ஆர்வம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

"வாசிப்பு, எழுத்து என்பனவெல்லாம் ஒரு மனிதனுக்கு இருக்கின்ற மிகப் பெரும் விடுதலையும் சுதந்திரமும் ஆகும். ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி தன்னுள் அடக்கப்பட்டிருக்கின்ற, தன்னை ஆக்கிரமித்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வடிகாலாக இலக்கியத்தைக் கொள்கின்றனர். இந்தவகையில் மனிதனது முழு மொத்தமான அனுபவங்களையும் வெளிப்படுத்துகின்ற சாதனமாக இலக்கியமும் மாறுகின்றது." (ரமீஸ் அப்துல்லாஹ், 2012) இதன் மூலம் விளங்கிக்கொள்வது, மனிதனது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ஓர் அரிய ஊடகமாக எழுத்துத்துறை காணப்படுகின்றது என்பதேயாகும்.

பல்கலைக்கழகத்தில் நுழையும் ஏராளமான மாணவர்களுள் ஒரு சிலரே இத்தகைய எழுத் தாற்றல் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். பலரும் தம் பாடசாலைக் காலத்தில் தம்மிடையே மறைந்திருந்த திறமைகளைப் பட்டைதீட்டி வைரங்களாக வெளியிடச் செய்யாமல் அசட்டை யாக இருந்து விடுகின்றனர். எழுத்துலகில் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி பலரும் தம் ஆக்கங்களை வெளியிட முடியும். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், விமர்சனம், திறனாய்வு போன்ற எழுத்துத் துறைகளில் மட்டுமன்றி விவாதம், பேச்சு என்று பல்வேறு பேச்சாற்றல் மிக்கவர்களும் தத்தம் திறமைகளை இனங்கண்டு அத்துறைகளில் ஒருசிலரே கால்பதிக்கின்றனர்.

பல்கலைக்கழகத்தில் புதிதாக மாணவர்கள் நுழையும் போது அவர்கள் அனுபவிக்கும் புதிய சூழல் தாம் வாழ்ந்த சூழலில் இருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்கின்ற நிலையில் மாணவர்கள் தம்மைக் கவரும் அல்லது பாதிக்கும் விடயங்களில் தாம் கண்ட, கேட்ட விடயங்களுக்கு இலக்கிய வடிவம் கொடுக்கும் போது அவர்களது பார்வை விசாலமானதாக அமைகின்றது. எனினும், அதிகமான மாணவர்கள் தமது ஆற்றல்களை முடக்கி தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொண்டவர்களாகவும், தம்மைக் குறுக்கிக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் வெறுமனே பட்டத்தினை மட்டும் பெற்றுக் கொண்டு செல்ல எண்ணுகிறார் களேயன்றி, இத்தகையதொரு சிறப்பான சூழலில் தாம் எழுத்துலகில் வேரூன்ற வேண்டும் என பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தி பயன்பெறத் தவறிவிடுகின்றனர்.

எழுத்துத் துறையில் பிரகாசிக்க விரும்புவர்கள் தாங்கள் பார்த்தவை, கேட்டவை, இரசித்தவை மற்றும் உணர்ந்தவை என எல்லா அனுபவங் களையும் கருத்துக்களையும் ஒரு குறிப்பு ஏட்டில் எழுதி வைக்கும் பழக்கத்தை கையாள வேண்டும். இயன்றவரை தம்மைக் கவர்ந்த குறிப்புக்களை உடனுக்குடன் பதியும் வாய்ப்புக் களை ஏற்படுத்திக்கொண்டால் எழுத்துத் துறையில் மிகப் பெரிய சாதனைகளைப் புரிய முடியும். இவ்வாறு தொடர்ந்து ஒருவர் சாதனைகளை மேற்கொள்ளும் போது இடையில் விடுபடாமல் எழுத்துத் துறையில் தொடர்ந்தும் கால்பதித்துக் கொள்ள முடிகின்றது.

ஏனைய துறைகளைப் போலல்லாது எழுத்துத் துறையானது மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு துறையாகக் காணப்படுகின்றது. ஏனெனில், சமூகத்தில் காணப்படக்கூடிய பேசப்படாத பல உண்மைகளைப் பல சமூகங்களின் முன் நின்று பேசும் ஆற்றல் எழுத்தாக்கங்களுக்கு உண்டு. "ஓர் எழுத்தாளனுக்கு எப்போதும் அறிவுத் தாகம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். ஓவியனாலும் சிற்பியாலும் அல்லது வேறு எந்தக் கலைஞனாலும் சாதிக்க முடியாத சாதனையை எழுத்தாளர்கள் சாதிக்கின்றனர். ஓர் எழுதுகோள் புரிகின்ற சாதனையை எந்தக் கலைஞனாலும் எந்தக் கருவியைக் கொண்டும் சாதிக்க முடியாது." (நா. இலக்குமணப் பெருமாள், 2007). எனவே, இதனை இலகுவாகக் கைவிட முடியாது. இத்துறை தொடர்பான பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், ஆற்ற லுடையவர்களை இதில் ஈடுபடுத்த முனைய வேண்டும். "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிருக்கு" எனும் வான்புகழ் வள்ளுவரின் வாக்கின்படி எண்ணும் எழுத்தும் உயிர்களின் இரு கண்கள் என்றாகிய போது எழுத்துத் துறையின் மகத்துவம் என்னவென்று எல்லோரும் அறிவர்.

## ஆய்வின் நோக்கங்கள்

- இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட மாணவர்கள் எழுத்துத் துறையில் காட்டும் ஆர்வத்தின் மட்டத்தைக் கணிப்பிடுதல்

- எழுத்துத் துறையை விருத்தி செய்ய போதியளவு வளங்கள் எமது பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறிதல்

- மாணவர்கள் எழுத்துத் துறையில் அதிகம் ஈடுபாடு காட்டாமைக்கான காரணங்களை இனங்காணல்

- பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் எழுத்துத் துறையை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்

**ஆய்வின் முக்கியத்துவம்**
எழுத்துத் துறையில் மாணவர்கள் காட்டும் ஈடுபாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் கூட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீட மாணவர்களின் எழுத்துத்துறை ஈடுபாடு தொடர்பாக விடயங்களைக் கண்டறிவதற்கான ஒரு முயற்சியாகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஆய்வானது இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தினை மையமாகக் கொண்டு காணப்படுவதால் இப்பீட மாணவர்களில் அதிகமானோர் எழுத்துத்துறையில் ஈடுபாடு காட்டாமைக்கான காரணங்கள் மற்றும் ஈடுபாடு கொண்டவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இத்துறையை எமது பீட மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதற்கும், எமது பீடத்தில் எழுத்துத்துறையில் மாணவர்களின் ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளை ஆலோசனைகளை முன்வைப்பதனாலும் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

**ஆய்வுப்பிரச்சினை (Research Problem)**
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொருத்தமட்டில் இங்கு இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வந்த மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதில் குறிப்பாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடமானது சுமார் 1300க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்டு காணப்படுகின்றது. இம் மாணவர்களில் அதிகமானோர் எழுத்தாற்றல் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தமது பாடசாலைக் காலங்களில் எழுத்துத் துறையில் அதிகம் ஆர்வம் காட்டியிருக்கின்றமை ஆய்வின் பெறுபேறுகளின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது. தமது பாடசாலைக் காலங்களில் எழுத்துத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டிய மாணவர்கள் தமது பல்கலைக்கழக காலத்தில் எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்டும் வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் எழுத்துத் துறையானது மனித வாழ்வின் சகல துறைகளிலும் தாக்கம் செலுத்தக்கூடிய ஒன்றாகும். குறிப்பாக இன்றைய சமூக பிரச்சினைகள், மனித உரிமைகள் முதலிய அனைத்தும் எழுத்துத்துறை எனும் ஊடகத்தின் மூலம் பேசப்பட வேண்டிய அம்சங்களாகும். இப் பணியைப் பல்கலைக்கழக மாணவர்கள் கூடிய ஈடுபாட்டுடன் மேற்கொள்வது கட்டாயமாகின்றது. அந்தவகையில் எழுத்துத் துறையில் மாணவர்களின் பங்களிப்பு என்ற இத் தலைப்பு காலத்தின் தேவை கருதி இங்கு ஆய்வுக்குட்படுத்தப் படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவை 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி வெளியிட்ட அதிர்வு சஞ்சிகையில் வெளியான றஸாக் முஹம்மட் அலி அவர்கள் எழுதிய நூலகம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு கல்வி ஞானம் என்ற கட்டுரையில் வாசிப்பின் முக்கியத்துவம் குறித்தும். இலங்கைப் பல்கலைக்கழகங்களின் நூலக வசதிகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவை 2001ம் ஆண்டு மே மாதம் 02ம் திகதி வெளியிடப்பட்ட அதிர்வு சஞ்சிகையில் வெளியான, சிராஜ் மஷ்ஹூர் எழுதிய, பல்கலைக்கழக சூழலின் போதாமைகள், மாற்றங்களின் அவசியம் பற்றிய ஒரு கவனயீர்ப்பு என்ற ஆய்வுக் கட்டுரையில் பல்கலைக்கழக கல்வித் திட்டமானது மாணவர்களின் அறிவை மட்டுப்படுத்துகின்றமை தொடர்பாகவும், அவர்களது இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தடையாக அமைந்திருக்கு மாற்றையும் விளக்குகிறார்.

நா. இலக்குமணப் பெருமாள் என்பவரால் எழுதப்பட்ட ''சிந்திக்க விரும்பும் சிலருக்காக'' (ஜூன், 2007) எனும் நூலில், அவர் ஓர் எழுத்தாளனினதும் எழுத்துத்துறையினதும் பணியானது ஏனைய துறைகளை விடவும் மேன்மையானது என உயர்வாகக் கூறியுள்ளார்.

## ஆய்வு முறையியலும் தகவல் சேகரிப்பும்
## (Research Methodology and Data Collection)

இவ் ஆய்வானது பண்புசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இதில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்து, நேர்காணல், கட்டமைக்கப்படாத உரையாடல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகக் காணப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ் ஆய்வின் மூலம் ஆரோக்கியமான முடிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் (Structured Questionnaires) விநியோகிக்கப்பட்டன. பின்பு அவை பூரணப்படுத்தப்பட்டதுடன் மீளப் பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந் நூறு மாணவர்களில் எழுமாறாக 25 பேர் தெரிவு செய்யப்பட்டு நேர்காணலுக்கு உட்படுத்தப் பட்டனர்.

## கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடல்களும்

இவ்வாய்வில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட ஆண், பெண் மாணவர்கள் இரு பாலாரையும் அடிப்படையாகக் கொண்டு இவ் வாய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இதில் சுமார் 25 மாணவர்களுடன் கலந்துரையாடியும் மறைமுகமாகத் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

பொதுவான ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதென்பது நம் நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் போட்டிக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு தெரிவாகி பல்கலைக்கழகத்திற்கு வரும் மாணவர்கள் நிச்சயம் வாசிப்புத்திறன் அதிகம் உள்ளவர்களாயும் எழுத்துத் திறன் உடையவர்களாகவுமே காணப்படுவர் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் எழுத்துத் துறையில் அவர்கள் காட்டும் பங்களிப்பானது மிகவும் குறைவாக இருக்கின்றமையே எமது ஆய்வின் இறுதியில் கண்டறியப்பட்டது.


தற்போதைய காலகட்டத்தை எடுத்து நோக்கும் போது சமூகத்தில் பேசப்பட வேண்டிய விடயங்கள் நிறையவே காணப்படுகின்றன. ஒவ்வொரு சமூகமும் தமது பிரச்சினைகளை முன் கொணர்ந்து அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அச் சமூகத்தில் சிறந்த கருத்துக்களை வழங்கக்கூடிய எழுத்தாளர்கள் அவசியம் இருக்க வேண்டும்.

''அரசியலில் வாரிசுகள் வருவது போல எழுத்துத் துறைக்கும் கலைத்துறைக்கும் வாரிசுகள் வர வேண்டும். அப்போது தான் துறைகள் வளர்ச்சி பெறும்'' (இல.கணேசன், 2011). இதன் மூலம் கூற விழைவது, அரசியல் ஆட்சியில் மாத்திரம் உறுப்பினராக வாரிசுகளாக நாளுக்கு நாள் ஆட்சி செய்பவர்கள் தோன்றுவது போல் எழுத்து துறையிலும் தோன்ற வேண்டும் என்பதேயாகும். அதாவது, இத் துறையில் அதிகமானோரை ஈடுபாடு காட்டச் செய்வதே, இத் துறையை முன்னேற்றச் செய்யும் வழிமுறையாகும் என்பதையே அவர் கூறியுள்ளார்.

நாம் எழுத்து துறை பற்றிப் பேசுவதற்கு முன்னர் முக்கியமாக பேசப்பட வேண்டிய ஒரு விடயமே வாசிப்பு ஆகும். காரணம் எழுத்துத் துறையில் அதிகமாக வாசிப்புத் திறன் பாதிப்பு செலுத்துகின்றது. வாசிக்காத நாட்கள் சுவாசிக்காத நாட்களைப் போன்றது என்ற கருத்திற்கிணங்க ஒவ்வொரு நாளும் வாசிப்பு ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாகின்றது. ''மரண தண்டனை விதிக்கப்பட்டு, நஞ்சூட்டப்படும் வரை வாசித்துக் கொண்டிருந்தார் சோக்ரடீஸ், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றை முத்தமிடும் வரை வாசித்துக் கொண்டிருந்தார் உமர் முக்தார், தூக்கு மேடை செல்லும் வரை வாசித்துக் கொண்டிருந்தார் பகத் சிங், தூங்குமிடம் கூட வாசிகசாலைக்குப் பக்கத்தில் கேட்டார் அம் பேத்கர், வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை நிறைவு செய்வதற்காக தனது அறுவை சிகிச்சையைப் பிற்போட்டார் அறிஞர் அண்ணா, 35 வருடங்கள் வாசிப்பு எனும் கடலில் மூழ்கி மூலதனம் எனும் நூலைத் தந்தார் கார்ல்மார்க்ஸ்'' (பர்ஹான் மன்சூர், 2017). இதன் மூலம் எமது முன்னோர்களான அறிஞர்கள் எந்தளவு தூரம் வாசிப்பிற்கு முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது. அவர்களின் பெயர்கள் உலகளவில் பேசப்பட காரணமாய் வாசிப்பு அமைந்திருக்கின்றது.

எழுத்து துறையானது ஏன் மாணவர் மத்தியில் ஈடுபாடு காட்டாத ஒரு துறையாக காணப்படு

கின்றது என்பதைப் பற்றி சிந்திக்கும் முன்னர் மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறன் எந்தளவுக்குக் காணப்படுகின்றது என்பது கணிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வகையில், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட மாணவர்களிடம் வழங்கப்பட்ட 100 வினாக் கொத்துக்களின் படி நாளொன்றில் வாசிப்புக்காக அவர்கள் ஒதுக்கும் நேரம் பின்வருமாறு,





**வரைபு - 1**


இவ் வரைபின் மூலம் நாம் தெளிவுறும் விடயம் யாதெனில் இப்பீட மாணவர்கள் வாசிப்புக்காக தமது அன்றாட வாழ்வில் ஒதுக்கும் நேரம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. சுமார் 68% ஆனோர் ஒரு நாளைக்கு 20 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரையிலான நேரத்தினை வாசிப்புக்காக ஒதுக்குகின்றனர். இதில் ஒரு சிலர் நேரம் குறிப்பிட்டு கூற முடியாதளவிற்கு வாசிப்பில் பின் தங்கியவர்களாகவும் காணப்படுகின்றமை அறியக் கிடைத்த ஒரு விடயமாகும்.

தொடர்ந்தும் ஆய்வினை மேற்கொண்டு செல்லும் போது எழுத்துத் துறையில் மாணவர்கள் ஈடுபாடு காட்டாமைக்கு, வாசிப்பு வீதம் மாணவர் மத்தியில் குறைவாகக் காணப்படுகின்றமை ஒரு பாரிய பலவீனமாகக் காணப்படுவதை அறிய முடிகிறது. தமது பாடசாலைக் காலங்களில் கட்டுரைகள், விமர்சனங்கள், கவிதை, தொடர்கதை, நாவல் போன்ற ஆக்கங்களில் ஈடுபாடு கொண்ட மாணவர்கள் பலர் பல்கலைக்கழக பிரவேசத்தின் பின்னர் எழுத்துத் துறையில் காட்டும் ஈடுபாடு அரிதாகிச் சென்றுள்ளமை நோக்கத்தக்க விடயமாகும். இதனைப் பின்வரும் பை வரைபடம் தெளிவாகக் காட்டுகின்றது.

இவ்வாறு பல்கலைக்கழக காலத்திற்கு முற்பட்ட காலத்தில் எழுத்துத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் தமது பல்கலைக்கழக காலத்தில் இத் துறையில் ஈடுபாடு காட்டாமையும், தமது எழுத்தாற்றலைப் பிரயோசனப்





**வரைபு - 2**




**வரைபு - 3**

படுத்தாமலும் இருப்பது குறித்ததொரு சமூகத்துக்கு மட்டுமன்றி ஒரு தேசத்தையே பாதிக்கும் ஒன்றாக உருமாற்றம் பெறுகின்றது.

தமது பாடசாலைக் காலங்களில் 81.25% ஆனோர் சிறந்த முறையில் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருப்பினும் கூட இவ் வீதமானது பல்கலைக்கழக பிரவேசத்தின் பின்னர் 18.75% ஆகக் குறைந்துள்ளது. இதற்கு அவர்கள் முன்வைக்கும் பல காரணங்கள் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டன.




**வரைபு - 4**

வினாக்கொத்துக்களை வழங்கியதன் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின் பிரதிபலிப்பாகவே மேற்காட்டப்பட்ட வரைபடம் காணப்படுகின்றது. எழுத்துத் துறையில் ஈடுபாடு

காட்டாமைக்கான காரணங்களாக வேலைப்பளு, சிறந்த வழிகாட்டலின்மை, குடும்பச் சுமை, விரிவுரை நேர அட்டவணை இடம் கொடுக் காமை, களமின்மை, மொழித் தேர்ச்சியின்மை, விருப்பமின்மை போன்ற காரணங்கள் பொதுவாக அனைவராலும் குறிப்பிடப்பட்டவையாகும். இருப்பினும் இதற்கு மேலதிகமாக குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய சில காரணங்கள் நேர்காணல் செயன்முறையின் போது அறியக் கிடைத்தன. அவையாவன,

- எழுத்துத் துறைக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை கொடுக்காமல் பகுதி நேர செயற்பாடாக முன்னெடுப்பதால் ஆர்வ மின்மை
- வாசிப்புக்காக ஒதுக்கும் நேரம் மிகவும் சொற்பம்
- சமூகத்தின் பெயர் பெற்ற ஒரு சிலரது ஆக்கங்களின் முன் ஏனைய ஆக்கங்கள் எடுபடாமை
- ஆக்கங்களைத் தெரிவு செய்வதில் சில பக்கச்சார்புகள் காணப்படல்
- மட்டந்தட்டல், தயக்கம்
- தொழில் செய்வதால் நேரம் இடம் கொடாமை
- கையடக்கத் தொலைபேசியின் அதிகரித்த பாவனை.்.சமூக வலைத்தளங்களின் பாவனை
- இப் பல்கலைக்கழக நூலகத்தில் மொழிப் புலமையைக் கொண்ட புத்தகங்களின் பற்றாக்குறை (சிங்கள மொழியிலான நூல்களின் பற்றாக்குறை)

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் எழுத்துத்துறையில் ஈடுபாடு காட்டாமைக்கு பல காரணங்கள் இருக்கின்றமை மறைமுக உரையாடல்களின் போது அறியக்கிடைத்தன. இவ்வாறான சில சிறிய காரணங்களால் மாணவர்கள் எழுத்துத்துறையைக் கைவிட்டு விடுவதென்பது அசாதாரண விடயமாகும். இதனால் சமூகத்திற்கும் நாளைய தலை முறைக்கும் சென்றடைய வேண்டிய எத்தனை யோ தலைசிறந்த எழுத்தாளர்கள் உருவாவது தடைப்படுகின்றது.

மாணவர்களுக்கு தங்கள் பிறந்த மண்ணில் இருந்து அவர்களை வேரோடு பிடுங்கி எறியும் கல்வியைத்தான் இன்றைய கல்வித் திட்டம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் தங்களைச் சுற்றி மதிற்சுவர்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அந்த மதிற் சுவருக்குள்ளாக தம்மை மூடிக் கொண்டு ஓர் எல்லைக்கு உட்படுத்தப்பட்ட கல்வியையே இந்த மாணவர் சமூகம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டத்திற்கு உற்பட்ட சில விடயங்களை மட்டுமே மாணவர்களுக்கு வழங்காமல் அதற்கு மேலதிகமாக எழுத்துத்துறை போன்ற விடயங்களில் மாணவர்களை ஈடுபடுத்த விரிவுரையாளர்களும் பொறுப்பாளர்களும் முயல வேண்டும்.

ஒரு சாதாரண நபர் ஓர் ஆக்கத்தை வெளியிடுவதை விடவும் ஒரு பல்கலைக்கழக மாணவன் அல்லது மாணவி என்ற அடை யாளத்துடன் ஒரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு பாரிய வித்தியாசம் நோக்கப்படும். இவ்விரு நபர்களிலும் பல்கலைக்கழக மாணவர்களினது எழுத்துக்களுக்கே மதிப்பு அதிகம். இதுவே யதார்த்தமாகும். இவ்வாறான ஒரு யதார்த்தம் காணப்படும் நிலையில் ஒரு மாணவனின் பல்கலைக்கழக காலம் என்பது கிட்டத்தட்ட மூன்று அல்லது நான்கு ஆண்டுகளேயாகும். இச் சொற்ப கால பகுதியில் மாணவர்கள் தமது எழுத்தாற்றலை பிரயோசனப்படுத்தாமல் விடுவது என்பது அவர்களுக்கும் சமூகத்திற்கும் பாரியதொரு நட்டமாகும். பல்கலைகழக செயன்முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் எழுத்துத்துறையில் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும் என ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

தொகுத்து நோக்கும் போது பல்கலைக்கழக காலமானது மாணவர்களுக்கு எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்டுவதற்குறிய சிறந்த தொரு வாய்ப்பாகும். இம்மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் எழுத்துத்துறையை பயன்படுத்திக் கொண்டால் கிடைக்கும் பலன் அளப்பரியது. எனவே, இதனைப் பயன்படுத்திக் கொள்ள மாணவர்கள் அனைவரும் முயற்சி செய்வது அவசியம். மேலும், பல்கலைக்கழக சூழலும் இதற்கான களங்களை அமைத்துக் கொடுப்பதும் இங்கு முக்கியமாகும். எனவேதான் எழுத்துத் துறை மாணவர்களின் ஊடாக வளரத் தொடங்கும். எழுத்தாற்றல் என்பது அனை வருக்கும் கிடைக்கக் கூடிய ஒன்றல்ல. இவ் வாற்றல் கிடைக்கப்பெற்ற எல்லோரும் அதனை சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

ஆய்வுப் பிரதேசமான இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்களை மையமாகக் கொண்ட இந்த ஆய்வின் மூலம் இப் பீட மாணவர்கள் அதிகமானோர் தமது பல்கலைக் கழகத்துக்கு முற்பட்ட காலத்தில் எழுத்துத் துறையில் சிறப்பாக ஆர்வம் காட்டியுள்ள போதிலும், பல்கலைக்கழக காலத்தில் அவர்களின் ஈடுபாடு அருகியுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அதாவது, பல்கலைக்

கழகத்துக்கு முற்பட்ட காலத்தில் 80% ஆகக் காணப்பட்ட மாணவர்களின் ஈடுபாடானது, பல்கலைக்கழக காலத்தில் 18.75% ஆகக் குறைந்துள்ளது. இது ஓர் ஆரோக்கியமான நிலையல்ல.

எமது பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களைப் போலவே இப் பீடத்திலும் எழுத்துத் துறையை விருத்தி செய்வதற்கான களங்கள் காணப்பட்ட போதிலும் அதனை மாணவர்கள் சரிவர பிரயோசனப்படுத்தும் வீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு மாணவர்கள் எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்டாமைக்கு வேலைப்பளு, வழிகாட்டலின்மை மற்றும் போதிய களமின்மை, திருமணம், விரிவுரை நேர அட்டவணை, மொழிவளப் பற்றாக்குறை போன்ற பல காரணங்கள் செல்வாக்கு செலுத்துவதைக் கண்டறிய முடிந்தது. மேலும், பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று மட்டும் எதிர்ப்பார்பு வைத்தால் போதாது. சில பெற்றோர் இலக்கியம், கலை போன்ற எழுத்துத் துறை சார்ந்த விடயங்களில் தமது பிள்ளைகள் ஆர்வம் காட்டுவதை விரும்புவதில்லை. இந்நிலை மாற வேண்டும். பெற்றோரும் இதில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்த முனைய வேண்டும்.

## ஆலோசனைகளும் பரிந்துரைகளும்

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவின்படி எமது பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைநெறி மற்றும் அரபு மொழிப் பீட மாணவர்கள் பல்வேறு காரணங்களை முன்வைப்பதன் மூலம் தமது பல்கலைக்கழக காலத்தில் எழுத்துத்துறையில் இருந்தும் பின்வாங்கிக் கொள்கின்றனர். இந் நிலையை மாற்றி மாணவர்களை எழுத்துத் துறையில் ஈடுபடுத்துவதே எமது ஆய்வின் நோக்கமாகும். அவ்வகையில் பல்கலைக்கழக சூழலில் எவ்வாறான மாற்றங்களை கொண்டு வர முடியும் என்பதை நோக்குவோம்.

- எழுத்துத் துறையை மேம்படுத்த முயற்சி செய்யும் முன்னர், வாசிப்புக் கலாசாரத்தை மாணவர் மத்தியில் உருவாக்க விரிவுரையாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் ஊக்கமூட்ட வேண்டும்.
- எமது பீடத்தினால் ஒரு தமிழ்ச் சங்கம் உருவாக்கப்பட்டு அது கலை மற்றும் கலாசார பீடத்தில் இயங்கும் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.
- மாணவர்களது ஆக்கங்கள் அடங்கிய, தொடர்ந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்று வெளிவர வேண்டும்.
- பாடப்பரப்புக்கு வெளியே மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
- இருக்கும் வளங்களை வளர்ப்பதும், அதற்குப் பங்களிப்பு செய்வதும் வினைதிறனாக அமையும்.
- எழுத்து ரீதியான போட்டிகளை மாதாந்தம் வைத்தல் : ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்குதல்.
- எழுத்துத் துறைக்கென தனியானதொரு வலைத்தளம் திறக்கப்படல் வேண்டும், அதில் மாணவர்களின் ஆக்கங்களைப் பிரசுரிக்க வேண்டும்.
- கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதன் மூலம் சரியான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- நூல் வெளியீடுகளை ஊக்குவித்தல்.
- சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அதற்கான களங்களை அமைத்துக் கொடுத்தல்.
- எழுத்துத் துறைக்கான இயக்கங்கள், அமைப்புக்கள் போன்றவற்றைப் பீடங்களின் அடிப்படையில் சுருக்காமல் பரந்தளவில் செயற்படுத்துதல்.

## உசாத்துணைகள்


- இலக்குமண பெருமாள், (2007), "சிந்திக்க விரும்பும் சிலருக்காக", அகரம், மீறா fine arts, தஞ்சாவூர்.
- கணேசன்.இல, (2011), "வாரிசுகள் வருகையால் எழுத்துத்துறை வளரும்", (online) Available: http://m.dinamalar.com (Accessed): (02.06.2017)
- கிருஷாந்தி ரத்ணராஜா, (1998), "காலங்கள்", கூடல் பதிப்பகம், திருகோணமலை.
- சும்சுனா.ஏ.பீ, (2012), "உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்", வாமும் கலையிலக்கிய வட்டம், சம்மாந்துறை.
- பர்ஹான் மன்ஸுர், (2017), "வாசிப்பின் சமூகம் வாசிப்பதில்லை", வைகறை, மீள்பார்வை ஊடக மையம், கொழும்பு
- ரஸ்ஸாக் முஹம்மத் அலி, (2003), "நூலகம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு கல்வி ஞானம்", அதிர்வு, மாணவர் பேரவை, இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
- விமலா ரமணி, (2017), "எழுத்து என்றும் திகட்டாது". (online) Available: http://www.dinakaran.com (Accessed): (04.06.2017)
- நிலா,(2017), "நீங்களும் எழுத்தாளராகளாம்" (online) Available: https://www.nila4u.com (Accessed): (03.06.2017)
- மன்ஸுர்.ஏ, (2005), "நவீன தொழினுட்ப சவால் களுக்கேற்ப எழுத்தாளர்கள் மாற வேண்டும்", (online) Available: http://tamilcnnlk.com (Accessed): (02.06.2017)
- ஸிராஜ் மஷ்ஹுர், (2001), "பல்கலைக்கழக சூழலின் போதாமைகள்", அதிர்வு, மாணவர் பேரவை, இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்



# இஸ்லாமும் சமூக ஊடகங்களும்

**பாத்திமா பஸீலா பழீல், அநுராதபுரம்**

விஞ்ஞானம், அறிவியல், மருத்துவம் எனப் பலதுறைகளிலும் மனிதன் உச்சத்தை அடைந்து கொண்டே செல்கின்றான். இதில் குறிப்பாகக் கூற வேண்டுமெனில் மீடியா என்ற ஊடகத்துறை உலகில் அதிவேகமாகப் பரவியும் முன்னேறிக் கொண்டும் இருக்கின்றது. உலகளாவிய (Mass-Media) ஊடகங்களில் முஸ்லிம் சமுதாயமும், இஸ்லாமும் குறிவைத்து அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது போன்ற சூழலில் முஸ்லிம் சமுதாய மக்களுக்கு மீடியா என்றால் என்ன? அதன் அவசியம் என்ன? அதில் முஸ்லிம்களின் நிலை என்ன? மீடியாவில் எவ்வாறு நாம் தாக்கத்தை ஏற்படுத்தலாம்? என்று எடுத்துரைத்து துயில் கொண்டிருக்கும் நம் சமுதாயத்தை விழிப்படையச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உலகத்தில் பரந்து இருக்கும் இதழியல்கள், தொலைக்காட்சி சேனல்கள், திரைப்படம், வீடியோ கான்.ஃபிரன்சிங், இணையம், தனிநபர் பிரச்சாரம், வானொலி மற்றும் அலைவரிசைகள் எனப் பெருவாரியான மக்களைச் சென்றடையும் செய்திகள் மற்றும் இதற்குப் பயன்படும் தகவல் தொடர்புக் கருவிகள், ஜனசக்தி ஆகிய அனைத்தும் ஊடகம் (Media) என்ற கருத் தாக்கத்தில் அடக்கிவிடலாம். ஊடகங்களில் முஸ்லிம்கள் எவ்வாறெல்லாம் பாதிப்புக் குள்ளாக்கப்படுகிறார்கள், இஸ்லாம் எவ்வா றெல்லாம் தவறாகச் சித்தரிக்கப்படுகின்றது என்பதைச் சொல்லிமாளாது. மீடியாவில் இவ்வாறான தீயசக்திகளை அறிந்து ஈடுகட்ட வேண்டிய நிர்பந்தத்தில்தான் முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மீடியா ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் நிறை, குறைகளை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. அதன் மூலம் அந்த நாட்டின் வளர்ச்சிக்கும், சமுதாயத்தின் வளர்ச்சிக் கும் வித்திட முடிகிறது. சில சம்பவங்களை எடுத்து அலசி, ஆராய்ந்துப் பார்த்தோமானால் மீடியாவின் அவசியம் என்ன என்பதை அனுமானித்துவிடலாம்.

சமீபத்திய ஈராக் போரை எடுத்துக்கொள்வோம், ஈராக்கின் பெட்ரோல் வளத்திற்கு ஆசைப்பட்டது அமெரிக்கா. அதை அபகரிக்க ஈராக்கை பயங்கரவாத நாடு என்று தன் ஆதரவு செய்தி ஊடகங்களான பி.பி.ஸி மற்றும் சி.என்.என் வழியாக உலகநாடுகள் மத்தியில் சித்தரித்தது. அணுஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருக் கின்றதா? என ஐ.நா நிபுணர்கள் குழு ஆய்வு செய்து அவ்வாறு இல்லை என்று உறுதிபடக் கூறியது. எனினும் ஐ.நா"வின் சொல்லையும் மீறி அமெரிக்கா தன் தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி (Veto-Power) ஈராக் மீது போர் தொடுத்தது. அப்போது ஈராக்கை பலஹீனப் படுத்த முதன் முதலில் அமெரிக்கா தன் ஏவுகணைகளை ஈராக்கின் தகவல்தொடர்புக் கட்டிடத்தின் மீது வீசி அதை முற்றிலுமாக அழித்தது. காரணம், ஈராக்கினுள் தான் நடத்தப்போகும் அராஜக மனித மீறல்கள் உலகத்திற்குத் தெரிந்து விடக்கூடாது என்று மீடியாக்களின் வாசல்கள் அனைத்தையும் அடைத்தது.

ஈராக்கில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்களை கொன்று குவித்தது அமெரிக்கா. இச்செய்திகளை அல்-ஜஸீரா

மற்றும் சில இணைய ஊடகங்கள் வெளியுலகிற்குக் கொண்டு வந்தபோது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த மக்கள் கூட மனிதநேய அடிப்படையில் அமெரிக்காவை எதிர்த்துப் போர் நிறுத்தம் செய்யக் கூறி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

அமெரிக்க இராணுவத்தினர் ஈராக்கில் அப்பாவி முஸ்லிம்களை கைதிகளாக்கி சிறையில் அடைத்தனர். அவர்களை நிர்வாணப்படுத்தி ஒருவரோடு ஒருவராகப் பிணைத்துப் போட்டனர். ஈராக் முஸ்லிம்கள் மீது மின்சார அதிர்வுகள் கொடுத்தும், கற்பழிப்புகள் நடத்தியும் கொடுமைப்படுத்தினர். இவையெல்லாம் இணைய ஊடகங்கள் வாயிலாகக் கடந்த ஏப்ரல் 2004-ல் புகைப்படங்களாக வெளிவந்த போது, அமெரிக் காவின் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பெல்ட் இத்தகைய இராணுவ வரம்புமீறல்களுக்கு மன்னிப்புக் கோரினார். இழந்த உடமைகளும், உயிர்களும் இவரின் மன்னிப்பின் மூலம் மீட்டிட முடியுமா? இல்லை!

இதே போன்று பலஸ்தீனிய முஸ்லிம்கள் தங்கள் சொந்த மண்ணில் இஸ்ரேலிய யூத மக்களால் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் என்ற இல்லாத ஒரு நாட்டை யூதர்கள் திட்டமிட்டு பாலஸ்தீனில் உருவாக்கிவிட்டார்கள். இவ்விஷயத்திலும் ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இன்றளவும் செயல்பட்டு வருகின்றன. வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறான போர்கள் அரங்கேறியே வருகின்றன.

சமீபத்திய குஜராத் கலவரத்தை எடுத்துக் கொள்ளுங்கள், மோடி அரசின்போது இரண்டா யிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொடுமை யான முறையில் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், முஸ்லிம்களின் சொத்துக் கள் மதவெறி பிடித்தவர்களால் சூரையாடப் பட்டன. குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் அநியாயமான முறையில் தடாக் கைதிகளாகவும், பொடாக் கைதிகளாகவும் கைது செய்யப்பட்டு விசாரணை மரபு மீறலையும் தாண்டி மயக்க மருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்தனர். விசாரணை என்ற பெயரில் சித்தரவதை செய்யப்பட்டனர். இச்செய்திகளை மீடியாக்கள் வெளியுலகத்திற்குக் கொண்டுவந்த போது உலகநாடுகள் குஜராத் சம்பவத்தை விமர் சித்தன. இந்தியாவிற்கு ஏற்பட்ட தலைகுனிவு குஜராத் சம்பவம் என எல்லோரும் கூறினர். அப்போதைய பிரதமர் வாஜ்பாய் எந்த முகம் கொண்டு இனி நான் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வேன் என்று கூறினார். மீடியாவின் மூலமாக இச்சம்பவங்கள் வெளிவராமலிருப்பின் இன்னும் முஸ்லிம் சமுதாயம் நசுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

மாற்று மதத்தில் ஒருவன் தவறு செய்தால் அதை அவனளவிலும், முஸ்லிம் ஒருவன் தவறு செய்துவிட்டால் அதை இஸ்லாத்தோடு இணைத் தும் செய்திகளை வெளியிடுவது முஸ்லிம் களுக்கு எதிரான மீடியாக்களுக்கு கைவந்த கலை. முஸ்லிம்கள் என்றால் வன்முறைகளைத் தூண்டுபவர்கள், தீவிரவாதிகள் என்று மாற்றார்கள் கூறும் மனோநிலைக்கு மீடியாக்கள் மக்களை மாற்றியிருக்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான சூழ்ச்சிகளும், வன் முறைகளும் ஒருபுறம் என்றால் ஊடகங்களின் வாயிலாக இஸ்லாத்தின் மீது நடத்தப்படும் அவதூறான பிரச்சாரங்கள் மற்றொருபுறம். குர்ஆன், ஹதீஸ்களை திரிப்பதும், இஸ்லாமிய ஷரீயத் சட்டங்கள் நடைமுறைக்கு ஒவ்வாது, இஸ்லாம் பெண்களை அடிமைப்படுத்துகின்றது, பர்தா முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது என்றெல்லாம் போலிப் பிரச்சாரங்கள் ஊடகங்களின் மூலமாக நடத்தப் படுகின்றன.

நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, திருமணங்கள், போர்கள் ஆகியவைகளை தவறானமுறையில் ஊடகங்கள் சித்தரிக்கின்றன. எந்த அளவிற்கு என்று சொன்னால் அவர்களின் சூசகமான கருத்துக்களின் மூலம் பெயரளவில் முஸ்லிம்களாக இருப்பவர்கள் கூட நாத்திக வாதியாக மாறிவிடுமளவிற்கு அவர்களின்

மொழிப்புலமை கொண்டும், வாதத் திறன் கொண்டும் இஸ்லாத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள்.

உலக அளவில் முஸ்லிகள் பொட்டுப் பூச்சிகளைப் போல அழிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். முஸ்லிம்களின் வரலாறுகள், தியா கங்கள் எல்லாம் திட்டமிட்டு சிதைக்கப்படு கின்றது. பள்ளிகளில் பயில வரும் பிஞ்சுகளின் உள்ளங்களிலும் முஸ்லிம்கள் தீயவர்கள் என்ற நஞ்சை விதைக்கின்றனர். பாடதிட்டங்களில் தங்கள் மதக் கொள்கைகளைத் திணிக்கின்றனர். காவல் துறை, இராணுவம், அரசு நிர்வாகம் இவற்றில் முஸ்லிம்கள் திட்டமிட்டே புறக்கணிக் கப்படுகின்றார்கள். மக்கள் தொடர்பு கருவிகளான வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை ஊடகங்களில் வகுப்பு வெறி ஊடுருவிவிட்டது. முஸ்லிம்கள் விரும்பாத தலைமைகளை மீடியாக்கள் மூலம் மக்கள் சக்தியை உருவாக்கி முஸ்லிம்கள்பால் சுமத்துகின்றன. நாம் மீடியாவில் அவசியத்தை உணராமலிருப்பதன் விளைவுதான் இத்தகைய தீய பலன்களை அடைய வேண்டியுள்ளது. இதனடிப்படையில் முஸ்லிம்கள் மீடியாவில் பின்தங்கியிருப்பதன் காரணங்கள் பற்றி பார்க்கின்றபோது,

### மீடியாவில் முஸ்லிம்கள் பின்தங்கியிருப்பதன் காரணங்கள்

இந்திய முஸ்லிம்கள் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்க ஆங்கிலம் கற்பது ஹராம் என்று கல்வி கற்க மறந்துவிட்டனர். ஆரம்பகாலத்தில் அரபி மொழி அறிந்தோர் பிறமொழியை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டாதது, இன்றளவும் அரபியர்களிடத்தில் இவ்வழக்கம் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. பிற மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஒரு நிலை.

ஒவ்வொரு நவீனக் கண்டுபிடிப்புகள் வந்த போதெல்லாம் அதைத் தீய வழியில் பலர் பயன்படுத்துவதைக் கண்டு அஞ்சி முற்றிலுமாக அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இன்றளவும் டி.வி இல்லாத பல இஸ்லாமிய இல்லங்கள் இருக்கத்தான் செய்கின்றன. டி.வி“யை எவ்வாறெல்லாம் நல்ல முறையில் பயன் படுத்தலாம் என்பதை அறிய முற்படாமல் டி.வி பார்ப்பது ஹராம் என்ற மார்க்கத் தீர்ப்பையும் வழங்கினர். வீடியோ மற்றும் புகைப்படம் எடுப்பது ஹராம் என்றும் கூறினர். அதை எவ்வாறு சமுதாய வளர்ச்சிக்கும், மார்க்க வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம் என்று ஆமை வேகத்தில் அறிந்துகொண்டதன் பின்தான் ஆடியோ, வீடியோ, சி.டி, டி.வி.டி என பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

திருக்குர்ஆனையும், நபிகளாரின் போதனை களும் ஆரம்பகாலத்திலேயே மொழியாக்கம் செய்ய மறந்துவிட்டனர். மாறாக முன்னோர்களின் கட்டுக்கதைகளை கையிலெடுத்துக்கொண்டு இதுதான் மார்க்கம் என்று பிரச்சாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டதால் இஸ்லாம் அதன் தூயவடிவில் பலருக்கு கிடைக்காமல் சென்றுவிட்டது. இவ்வகையான முன்னோர்களின் திரிபு பெற்ற நூல்கள், பிரச்சாரங்கள் மீடியாவில் சரிகட்டவியலாத பின்னடைவை ஏற்படுத்தி விட்டன. முஸ்லிம்கள் கல்வியில் ஆர்வம் காட்டாதது, புதிய கண்டுபிடிப்புகளை உடனே ஏற்க மறுத்தது, குர்ஆன், ஹதீஸ்களை தெளிவுபடுத்த மறந்தது, மார்க்கப் பிரச் சாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில் பாதியேனும் சமுதாய வளர்ச்சிக்குக் கொடுக் காதது, தான் உண்டு தன் வேலையுண்டு என்ற பிற்போக்கு மனப்பான்மை என்று முஸ்லிம்கள் மீடியாவில் பின்தங்கிப்போனதன் காரணங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். பொதுவாக முஸ்லிம்கள் ஊடகங்களில் பின் தங்கியிருப்பது அனைவரும் ஏற்றாக வேண்டிய கூற்று.

உலகில் முஸ்லிம்கள் ஆயுத முனையில் பாதிக்கப்படுவதை விட மீடியாக்களினால் பாதிக்கப்படும் வீதம் நாளுக்கு நாள் அதிகரித் துக் கொண்டே செல்கிறது.இதை தடுக்க இந்த ஊடகம் மூலம் நம்மால் முடிவும். இதை பல நண்பர்கள் புரியாமல் இன்னும் இருந்து கொண்டு இருகின்றனர். இன்று மாணவர்கள் முதல் வயதானவர்கள் முதல் பயன்படுத்தும் Facebook,

gmail, yahoo, Hotmail, tweeter, skype போன்ற அனைத்தும் நமக்குக் கிடைத்த இலவச ஊடகமே என்பதை கவனத்தில் கொண்டு அவைகளை பயன்படுத்தி எமது சமூகத்திற்குக் தேவையான செய்திகளை வழங்க முன்வர வேண்டும்.

அவன் தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான், பின்னர் அர்ஷின் மீது அமைந்தான். பூமிக்குள் நுழைவதையும், அதிலிருந்து வெளியாவதையும், வானத்திலிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அவன் நன்கறிகிறான், நீங்கள் எங்கிருந்த போதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான் – அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்வதை உற்று நோக்கியவனாக இருக்கிறான். வானங்களுடையயவும், பூமியுடையவும் ஆட்சி அவனுக்கே உடையது, அன்றியும் காரியங்கள் அனைத்தும் அல்லாஹ்விடமே மீட்கப்படும்.

(ஸூரத்துல் ஹதீஸ் 57:4,5)

நாம் வாழுகின்ற தகவல் தொழில் நுட்ப யுகத்தில் தொலைத் தொடர்பு சாதனங்கள், பொதுசன ஊடகங்களை விடவும் சமூக வலைத்தளங்கள் மக்கள் மத்தியில் ஊடுருவி ஆதிக்கம் செலுத்து கின்றதன. எனவே யுகத்தின் சவால்களை கருத்தில் கொண்டு ஒரு முஸ்லிம் எவ்வாறு சமூக ஊடகங்களை கையாள்வது என்பதனை தெரிந்து வைத்துக் கொள்வதோடு புதிய தலைமுறை யினரை அறிவுறுத்தி உரிய உரிய வழிகாட்டல் களை வழங்குவது காலத்தின் கட்டாயம் மாத்திரமன்றி சன்மார்க்க கடமையும் கூட்டுப் பொறுப்புமாகும்.

சமூக ஊடகங்களை உபயோகிக்கும் விசுவாசி கள் எல்லா நிலையிலும் எங்கு இருந்தாலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ள வேண்டும், வாழ்வில் ஏனைய விடயங்களில் எவ்வாறு ஹலால், ஹராம், ஆகுமானவை, ஆகாதவை, கடமையனவை, தடுக்கப்பட்டவை, விரும்பத் தக்கவை விரும்பத் தகாதவை என வரைமுறைகள் இருக்கின்றனவோ அவைகள் சமூக ஊடக நடத்தைகளிலும் கண்டிப்பாக கைக்கொள்ளப்படல் வேண்டும். எனவே இதை விரிவாக அலசுவதை விடுத்து ஊடகங்களில் நாம் எவ்வாறு முன்னேறலாம் என்பதை ஆய்வு செய்வோம்.

## சமூக ஊடகங்களில் மஹ்ரம் பேணுதல்

மஹ்ரம் வரையறை எல்லாம் வல்ல அல்லாஹ் போட்டுள்ள அரண், அதை தகர்த்தெரியும் துணிவு உண்மை விசுவாசிகளுக்கு வரமாட்டாது. மஹ்ரமற்ற இருவரின் தனித்த தொடர்பாடலில் மூன்றாவது ஆளாக ஷைத்தான் இருக்கிறான். ஹராமான Chat தொடர்பாடல்கள் விடயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், எமது பிடரி நாளங்களை விடவும் அல்லாஹ் எமக்கு அருகாமையில் இருக்கிறான்.

உங்கள் கணவர், உங்கள் சகோதரன், உங்கள் மகன், உங்கள் சகோதரி, உங்கள் மனைவி, உங்கள் மகள் உங்கள் அன்பிற்குரியோர் நெறிபிறழ்வதை கனவிலும் நினைக்காத நீங்கள் பேணுதலாக இருந்து கொள்ளுங்கள், நாளை ஷைத்தான் உங்கள் வீடுளில் திருட்டுத் தனம் புரிவான். ''தக்வா'' எனும் இறையுணர்வு ஒன்று மாத்திரமே எங்களை, எங்கள் குடும்பங்களை சீரழிவுகளில், சிதைவுகளில் இருந்து பாதுகாக்க முடியும். அவனறியாமல் ஒரு மரத்தின் இலை ஒன்றேனும் உதிர்வதில்லை.

“அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். மேலும் கரையிலும் கடலிலும் உள்ளவற்றையெல்லாம் அவன் அறிவான் அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.”

(ஸூரதுல் அன்ஆம் 6:59)

“அவன் தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான், பின்னர் அர்ஷின் மீது அமைந்தான். பூமிக்குள் நுழைவதையும்,

அதிலிருந்து வெளியாவதையும், வானத்தி லிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அவன் நன்கறிகிறான், நீங்கள் எங்கிருந்த போதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான் – அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்வதை உற்று நோக்கியவனாக இருக்கிறான்."

(ஸுரதுல் ஹதீத் 57:4)

சமூக ஊடகங்களை சரியான இலக்குகளிற்காக பயன்படுத்துவது (பர்ழு) கடமையாகிறது. சிலர் எடுத்த எடுப்பிலேயே சமூக ஊடகங்கள் பொழுது போக்கிற்கு உரியவை அங்கு சீர்திருத்தங்கள், சமூக மாற்றங்கள், இலட்சிய போராட்டங்கள், அரசியல், மார்க்கம் என எதையும் கொண்டு வராதீர்கள் என்று கூறுவார்கள், அவ்வாறான குறுகிய பார்வையைக் கொண்டவர்கள் ஒருவிஷயத்தை தெளிவாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும், எங்கெல்லாம் மனித ஆளுமைகளில் ஷைத்தான் செல்வாக்கு செலுத்த இடம் இருக்கின்றதோ அங்கெல்லாம் நன்மையை ஏவி தீமையை விலக்குகின்ற பணி இடம்பெறுவது விதிக்கப்பட்ட கடமையாகும்.

## சமூக ஊடகங்களில் தீமைகளை தவிர்வதும், தவிர்ப்பதும் (பர்ழு) கடமையாகும்

உண்மை, நீதி, நேர்மை, சத்தியம் போன்ற உயரிய இலக்குகளை எந்தவொரு சூழ்நிலை யிலும் விசுவாசிகள் விட்டுக் கொடுப்பதற்கு மார்க்கத்தில் அனுமதி கிடையாது, அதேபோன்று உயரிய இஸ்லாமிய பண்பாடுகளை சீரழிக்கின்ற அல்லது தீமைகளை சந்தைப்படுத்துகின்ற எந்தவொரு நடவடிக்கையினையும் இரகசிய மாகவோ பரகசியமாகவோ ஒரு விசுவாசி மேற்கொள்வதற்கு அனுமதி கிடையாது.

எனவே வாழ்வின் ஏனைய விவகாரங்களில் எவ்வாறு இறையச்சம், உளத்துாய்மை, நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல், நல்ல விவகாரங்களில் ஒத்துழைத்தல், பயனுள்ள வற்றை பகிர்ந்து கொள்தல், பயனற்றவற்றை தவிர்ந்து கொள்தல், ஹலால், ஹராம் பேணுதல் என சகல பெறுமானங்களும் சமூக ஊடக வலையமைப்புகளின் பாவனைகளிலும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

ஒரு மனிதனின் பண்பாடுகள் விருப்பு, வெறுப்புக் கள், நடத்தைகள், அங்கீகாரங்கள், ஆதரவுகள் எல்லாம் அவரது ஆளுமையினை பிரதிபலிக் கின்றன, எண்ணங்களிற்கு ஏற்பவே கருமங்கள் இடம் பெறுகின்றன அதேபோன்றே சமூக ஊடகங்களில் எமது நடத்தைகள் எங்கள் தராதரங்களை பிரதிபலித்துக் கொண்டிருக் கின்றன. உதாரணமாக நாம் சமூக ஊடகங் களில் விரும்பி ரசிப்பவைகள், பகிர்ந்து கொள்பவைகள், பின்னூட்டம் இடுபவைகள் என எமது எல்லா நடத்தைகளையும் அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான், வானவர்கள் அவற்றை பதிவு செய்து கொள்கின்றார்கள், அவற்றிற்கான பிரதிபலன்கள் இவவுலக வாழ்விலும் மறு உலக வாழ்விலும் எங்களிற்கு வந்து சேருகின்றன.

## சமூக ஊடகங்களை பொறுப்புணர்வுடன் கையாளுதல் (வாஜிப்) ஆகும்

குறிப்பாக இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களிற்கும் எதிராக கட்டவிழ்த்து விடப்படுகின்ற தப்பபிப்பிராயங்கள், காழ்ப்புணர்வுப் பரப்புரைகள், அல்லது பிழையான தகவல்கள், வதந்திகள் செய்திகள், இருப்பு ,பாதுகாப்பிற்கு விடுக்கப் படுகின்ற அச்சுறுத்தல்கள் என சமூக ஊடகங்கள் பிழையான தரப்புக்களால் கையாளப் படுகின்ற பொழுது கூட்டுப் பொறுப்புடனும், அறிவு பூர்வமாகவும் அவற்றிற்கு முகம் கொடுப்பது எம்மீது கடமையாகின்றது.

இன நல்லுறவிற்கும், தேசத்தில் சமாதான சகவாழ்விற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற இனங்களுக்கிடையில் பிணக்குகளை தோற்று விக்கின்ற முரண்பாடுகளை ஏற்படுத்துகின்ற பதிவுகளை நாம் இடாது தவிர்ந்து கொள்வதும் அவ்வாறான பதிவுகளை தவிர்ந்து கொள்வதும் எவ்வாறு கடமையாகின்றதோ அவ்வாறே ஏனைய

தீய சக்திகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் பரப்புரைகளிற்கு உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினை யாற்றுதலும் கட்டாயமாக தவிர்க்கப்படல் வேண்டும்.

ஒரு சமூகத்தின் தேசத்தின் இருப்பு பாதுகாப்பு சார்ந்த செய்திகளை எவ்வாறு கையாள வேண்டும் என அல்-குர்ஆன் சொல்லித் தருகின்றது, ஒரு கூட்டத்தார் பிறிதொரு கூட்டத்தாரை ஏளனம் செய்வது குறித்து அல்-குர்ஆன் கண்டனம் செய்கின்றது, கோள் மூட்டு தல், புறம் பேசுதல், இட்டுக் கட்டுதல், பகிடிவதை பண்ணுதல், நையாண்டி பண்ணுதல், குரலை உயர்த்திப் பேசுதல், மற்றொருவரது உள்ளத்தை காயப் படுத்தல் போன்ற சகல பிரயோகங்களும் அல்-குர்ஆனில் மற்றும் அல் ஹதீஸில் வன்மையாக கண்டிக்கப் பட்டவையாகும். நாவை தீயவைகளில் இருந்து பேணுவது போல், நல்ல விடயங்களிற்கு பயன்படுத்தாமல் இருப்பதும் அமானிதங்களை பாழ்படுத்தும் ஒரு விடயமாகும், நல்லவற்றை ஏவுதல், தீயவற்றை தடுத்தல், நீதி நியாயத்திற்காக குரல் கொடுத்தல், சத்தியத்தை கொண்டு பரஸ்பரம் நல்லுபதேசங்கள் செய்து கொள்ளல், அல்-குரானை, அல்-ஹதீஸை கற்றல், கற்றுக் கொடுத்தல், சமாதனம் செய்து வைத்தல் என இன்னோரன்ன நல்ல கருமங் களிற்காக எமது பேச்சுக்களும் எழுத்துக்களும் பிரயோகிக்கப் படுதல் வேண்டும்.

## சமூகத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவது (ஹராம்) குற்றமாகும்

அழகிய இஸ்லாமிய பெயர்களை வைத்துக் கொண்டு நாம் பதிவேற்றுகின்ற அடையாளப் படங்கள், பகிர்ந்து கொள்கின்ற ஆபாசங்கள், அல்லது எமது சொந்த படைப்புக்கள், பதிவுகள், வார்த்தைப் பிரயோகங்கள் சிலவேளைகளில் நாம் சார்ந்த சமூகத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விடலாம், நிச்சயமாக நாம் அவற்றைத் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். பயனுள்ளவற்றை பகிர்ந்து கொள்ளுதல் (வாஜிப்) கட்டயமாகவும், (முஸ்தஹப்) விரும்பத் தக்கவையாகவும் இருக்கலாம்.

நாம் கடந்து செல்கின்ற அருமையான தகவல் கள், அவசியமான அறிவுறுத்தல்கள் என்பவற்றை பகிர்ந்து கொள்வது அவற்றின் முக்கியத்து வங்களிற்கு ஏற்ப கட்டாயமாகவும் சிலவேளை களில் விரும்பத் தக்கதாகவும் இருக்கலாம். நமக்கும் நமது சமூகத்திற்கும் மாத்திரமன்றி தேசத்திற்கும் மக்களிற்கும் பயனுள்ள தகவல்களையும் பகிர்ந்துகொள்கின்ற மன நிலை எங்களிடம் வர வேண்டும், நாம் வழமையாக விரும்புகின்ற பகிர்ந்துகொள்கின்ற விடயங்களை வைத்து எமது தற்போதைய மனநிலையை தெரிந்து கொள்ளலாம். இறையுணர்வு உள்ள ஆன்மாக்களின் நடத்தைகள் மாத்திரமல்ல நாவும் வார்த்தைகளும் ஆன்மீக அற நெறிகளை பிரதிபலிக்க வேண்டும். எமது கருத்து வெளியீடுகள், வார்த்தைகளாகவும், உரையாடல் களாகவும், எழுத்துக்களாகவும், வெவ்வேறு வடிவங்கள் கொண்டிருக்கலாம், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், செய்தி மற்றும் தகவல் பரிமாற்றங்கள் இலக்கியங்கள் போன்ற இன்னோரன்ன வடிவங்களைக் கொண்டி ருக்கலாம். எமது கருத்துச் சுதந்திரம் என்பது எமது ஆன்மீக பண்பாட்டு கலாசார விழுமியங் களை வரை முறைகளை தகர்த்தெறிகின்ற கருத்தியல் வன்முறைகளாக, துஷ்பிரயோகங் களாக இருக்க முடியாது.

தகாத, நாகரீகமற்ற பண்பாடற்ற (அறியாமைக் கால) வார்த்தைப் பிரயோகங்களை மற்றும் நடத்தைகளை விடாதவர்கள் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் கிடையாது, ஒரு மனிதனின் வார்த்தை கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட தூரமளவு நரகின் பாதாளத்தில் தள்ளி விடும், பேசினால் நல்லதையே பேசுங்கள் அல்லது வாய் மூடியிருங்கள், நாவினாலும் நடத்தையினாலும் அடுத்தவரை நோவினை செய்யாதவனே முஸ்லிம். என்ற கருத்துக்களையுடைய நபி மொழிகளை நாம் அறிந்து வைத்திருக்கின்றோம்.

## எழுத்துக்கள் விமர்சனங்கள் அமானிதங்களாகும்

ஒரு மனிதர் அல்லது கூட்டத்தினர் மீதுள்ள அன்போ அல்லது வெறுப்போ அவர்களுக்கு நீதி வழங்குவதிலிருந்து ஒரு விசுவாசியை தடுக்க முடியாது, ஒரு சாராருக்கு ஆதரவாகவும், மற்றுமொரு சாராருக்கு எதிராகவும் எழுதுவதும், பேசுவதும் கூட அந்த ஆன்மீக அளவு கோல்களின் கணிப்பீடுகளை விஞ்சிவிடக் கூடாது. அவ்வாறான விமர்சனங்களில் போட்டியும் பொறாமையும்,காழ்ப்புணர்வும், சில வேளைகளில் புகழ் தேடலும், தாழ்வு மனப் பான்மைகளும், மனநிலைக் கோளாறுகளும், கருத்தியல் வன்முறையும் குழுச் சண்டைகளும் மிகைத்து நிற்பதனை என்னால் உணர முடிகின்றது.

இஸ்லாமிய சகோதரத்துவ வாஞ்சை பரஸ்பர அன்பு இல்லாது ஒருவரை அடுத்தவர் வழிகேடாக அடையாளப்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற பிரயத்தனங்கள் அடிப்படை இஸ்லாமிய ஒழுக்கவியல் பண்பாட்டு விழுமியங்களை மீறுவதாக எனக்குத் தெரிகின்றது. பரஸ்பரம் அன்பு பாராட்டாத ஒரு சமூகத்தில் வெறும் கொள்கைகளும், கோட்பாடுகளும், கருத்தாடல் களும் முரண்பாடுகளையே தோற்றுவிக்கின்றன, அங்கு மதத்திற்கு மதம் பிடிக்கின்றது, வெறிபிடிக்கின்றது, அங்கு புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சமயோசிதம், உணர்வுகளை மதித்தல் மன்னித்தல், மறத்தல் போன்ற அடிப்படை ஒழுக்க விழுமியங்கள் உயிர்வாழ் வதில்லை. சிலரது கருத்துப் பகிர்வுகள் மிகவும் சிறு பிள்ளைத் தனமாகவும், அதிகப் பிரசங்கித் தனமான பிரயோகங்களைக் கொண்டதாகவும் எனக்குத் தெரிகின்றது குறிப்பாக, இலத்திரனியல் அச்சு மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாடு சத்தியம் அசத்தியம் என்ற வரை முறைகளை தாண்டும் பொழுது எமது பணியும் உழைப்பும், தொழிலும் ஹலால் ஹாராம் என்ற வரை முறைகளுக்கு உட்பட்டவையா அவை எமது கொள்கை கோட்பாடுகளை ஆன்மீக பண்பாட்டு பக்குவங்களை பிரதிபலிக்கின்றனவா என்பதனை நாம் மீள் பரிசீலனை செய்து கொள்ள வேண்டும்.

மிகைப்படுத்தல்,அளவுகடந்த வர்ணனைகள், அளவுகடந்த வஞ்சனைகள், கூட அநீதிகளாகும், கண்ணுக்குக் கண், காதுக்குக் காது, மூக்கிற்கு மூக்கு, உடலிற்கு உடல் என்ற ஒரு கோட்பாடு இஸ்லாத்தில் இருக்கின்றது, ஒரு சிறிய தவறை எல்லை மீறி பூதாகரமாக்குவது, ஒரு பெரிய தவறை அல்லது சமூகத் துரோகத்தை நியாயப் படுத்துவது அல்லது சிறிய விவகாரமாக பேசுவது எழுதுவது எல்லாம் ஆநீதிகளாகும்.

"நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், "குர்ஆனிலிருந்து நீங்கள் எதை ஓதினாலும், நீங்கள் எந்தக் காரியத்தை செய்தாலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போது நாம் கவனிக் காமல் இருப்பதில்லை. பூமியிலோ, வானத் திலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவும் (நபியே!) உம் இறைவனுக்குத் (தெரியாமல்) மறைத்து விடுவதில்லை. இதை விடச் சிறயதாயினும் அல்லது பெரிதாயினும் விளக்கமான அவன் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை."

(ஸூரத் யூனுஸ் 10:61)

## மீடியாக்களில் முஸ்லிம்கள் தாக்கத்தை ஏற்படுத்தல்

நவீன கண்டுபிடிப்புக்களைத் தூரநோக்கு பார்வை கொண்டு அங்கீகரிக்கவேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஆதரவான மக்கள் சக்தியை உருவாக்க முஸ்லிம்கள் பாடுபட வேண்டும். மீடியாக்களில் முஸ்லிம்கள் தாக் கத்தை ஏற்படுத்த பலவழிகள் உள்ளன, அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே பட்டியலிட்டுப் பார்ப்போம்.

## கல்வியின் முன்னேற்றம் ஊடகங்களின் வளர்ச்சிக்கு அடிகோலிடும்

கல்வி கற்பதில் முஸ்லிம்கள் ஆரம்பம் முதலே ஆர்வம் காட்டாத நிலை. மனித அறிவின் பிறப்பிடம் கல்வி என்பதை ஏனோ முஸ்லிம்கள் மறந்துவிட்டார்கள். எழுத்தறிவில் மிகவும்

பின்தங்கிய சமுதாய மக்களாக முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு இருக்கையில் கற்றறிந்த மாற்றார்கள் முஸ்லிம் சமுதாயத்தை ஊடகங்களின் வாயிலாக நசுக்குகிறார்கள். ஊடகங்களை எதிர்கொள்ள முஸ்லிம் சமுதாயத்தை கல்வியில் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். வீடியோ கான்ஃபிரன்சிங் மூலம் ஆன்லைனில் கல்விகற்கும் நிலை நிலவிவருகின்ற சூழலில் முஸ்லிம்களுக்கு என்று எத்தனை கல்வி நிலையங்கள் இருக்கின்றன. விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில் கல்விக்கூடங்களை நாம் வைத்திருக்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும். பணம்படைத்த முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் அதற்கான வாய்ப்புகளும் வசதிகளையும் ஏற்படுத்திட முன்வர வேண்டும். கற்றறிந்தவர்கள் அனைவரும் இதற்காகப் பாடுபடவேண்டும்.

கல்வியை மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என்று பிரிக்காமல் இரண்டும் இணைந்து கிடைக்கப் பாடுபடவேண்டும். கல்வியில் பின்தங்கியதால் மீடியாவில் மட்டுமல்லாது அரசு வேலைவாய்ப்பு, அரசியல் போன்றவற்றிலும் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். மீடியாவில் முஸ்லிம்கள் முன்னேறுவதற்கு கல்வியில் முன்னேற்றம் மிகஅவசியம்.

## இதழியல் மற்றும் மொழியியல் முன்னேற்றம்

இதழியல்(Journalism) என்பது வாரஇதழ்கள், மாதஇதழ்கள், தினசரி செய்திப் பத்திரிக்கைகள் மற்றும் எழுத்து வடிவில் மக்களைச் சென்றடையும் அனைத்து ஊடகங்களும் இதில் அடங்கும். எந்த ஒரு உலகச் செய்தியை நாம் அறிந்துகொள்ள வேண்டுமெனினும் மாற்றார் களிடத்தில் உள்ள ஊடகங்களைத்தானே அணுகவேண்டிய சூழல் நிலவிவருகிறது. உதாரணத்திற்கு தமிழில் முஸ்லிம்களால் நடத்தப்படும் தினசரிச் செய்தித்தாள் ஏதேனும் உண்டா? வேதனைக்குரிய விஷயம் முஸ்லிம் களில் திறமையான எழுத்தாளர்கள் மிகமிகக் குறைவு. பத்திரிக்கைத் துறையில் நமது சமுதாயம் முன்னேற்றம் காணவேண்டும். கருத்துக்கள் என்னவாக இருந்தாலும் அதைச் சீரிய முறையில் எடுத்துரைக்க மொழி என்ற ஊடகம் அவசியமாகிறது. எனவே மொழியை அதன் இலக்கிய, இலக்கண அறிவோடு அறிதல் வேண்டும். ஆங்கிலம் என்பது உலகில் அதிகமானோரால் பேசப்பட்டு வரும் மொழி, எனவே அவற்றையும் நாம் கற்றறிய வேண்டும்.

பட்டப் படிப்புகளில் இதழியலும் ஒரு பிரிவு. இதில் முஸ்லிம்கள் ஆர்வம் செலுத்திப் படித்து திறமையான எழுத்தாளர்களாக மாறவேண்டும். மீடியாவில் நம் சமுதாயம் முன்னேற திறமையான எழுத்தாளர்கள் பலர் உருவாக (உருவாக்க) வேண்டும். அதன் மூலமாக கணிசமான முறையில் முஸ்லிம் சமுதாயமும், இஸ்லாமும் ஊடகங்களில் வெற்றியைக் காணும்.

## தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் வானொலி அலைவரிசைகள்

எந்த ஒரு செய்தியும் எழுத்துவடிவில் மக்களைச் சென்றடைவதை விட காட்சி ஊடகமான (Visual-Media) தொலைக்காட்சி சேனல்கள், திரைப் படங்கள், குறும்படங்கள் (Documentery - Films) போன்றவற்றின் மூலமாக விரைவாகச் சென் றடைந்துவிடும். காட்சியோடு செய்திகள் மக்களைச் சென்றடையும் போது மக்கள் மனதில் அச்செய்திகள் பதியும். இவ்வகையான ஊடகங் களில் முஸ்லிம்கள் இப்போதுதான் தலைகாட்டி யுள்ளார்கள். உலக அளவில் முஸ்லிம்களுக்கு சில அரபி சேனல்கள் இருக்கின்றன. ஆங்கி லத்தில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு சேனல் உண்டா எனில் இல்லை.

பி.பி.ஸி மற்றும் சி.என்.என் போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான ஊடகங்கள் உலக அரங்கில் அதிகமானோரால் முஸ்லிம்கள் உட்பட கவரப்படுவதற்குக் காரணம் அவை அறிவியல் செய்திகளை ஆய்வுசெய்து தருகின்றன, மருத்துவச் செய்திகள் மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு

முக்கியத்துவம் கொடுத்தும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்வதேயாகும். இத்தனை காலம் கழிந்து டாண் மியூசிக் சேனலில் தமிழில் இஸ்லாமியர்களின் நிகழ்ச்சி தினமும் ஒரு மணிநேரம் ஒளிபரப்பாகின்றது என்பது வியப்புக்குரிய செய்தி. அத்தகைய சேனல்களும் முஸ்லிம்களுக்குச் சொந்தமா? எனில் அதுவும் இல்லை. ஆடல், பாடல், இசை, பொழுதுபோக்கு என்று எடுத்துக்கொண்டால் எண்ணற்ற தொலைக்காட்சி மற்றும் வானொலி அலை வரிசைகள்.

இத்தகைய ஊடகத்தை முஸ்லிம்கள் பயன்படுத்த முன்வரவேண்டும். இஸ்லாத்தை எத்திவைப்ப தோடல்லாமல் முஸ்லிம் சமுதாயம் எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகள், சமுதாய வளர்ச்சி, சேவை போன்ற நல்ல நோக்கங் களுக்கு இத்தகைய ஊடகங்களில் சரித்திரம் படைக்கவேண்டும். தொலைக்காட்சி, திரைப்படம், குறும்படம் (Documentary) என்று போனால் இசை, ஆடல், பாடல், கவர்ச்சி மற்றும் கமர்ஷியல் இல்லாமல் முடியுமா? என்று கேள்வியெழுப்பிக் கொண்டிருக்காமல் இஸ்லாத்தின் வட்டத்திற்குள் இருந்துகொண்டு இத்தகைய ஊடகங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைச் சிந்தித்துப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

### தனிநபர் பிரச்சாரங்கள், மேடை நாடகங்கள், கருத்தரங்குகள், ஜும்மாப் பேருரைகள்

இவை யாவும் மக்களைச் சென்றடையும் ஊடகங்களே! இவற்றின் மூலமாகவும் மக்கள் சக்தியை உருவாக்கிட முடியும். நபி(ஸல்) அவர்கள் மார்க்கத்தை மட்டும் போதித்துச் சென்றுவிடாமல் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அம்சங்களும் கற்றுக் கொடுத்துச் சென்றுள்ளார்கள். காலத்திற்குத் தகுந்தாற்போல் அவர்கள் வெள்ளிமேடைகளில் (குத்பாப் பேருரைகள்) பிரச்சாரங்கள் செய்துள்ளார்கள். ஆனால் இன்று நம் நாடுகளில் பெருவாரியான முஸ்லிம்கள் ஒன்று குழுமக் கூடிய வெள்ளிக் கிழமை பேருரைகள் அரபி மொழியிலேயே சடங்குக்காக நடந்து வருகின்றன. நம்மில் பலரும் அதைப் பக்தியோடு கேட்டு துயில் கொண்டு செல்கிறோம். இன்றைய முஸ்லிம் சமுதாயம் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றது, சமுதாயத்தில் படர்ந்துவிட்ட களங்கங் கள் என்ன? மார்க்கத்தை எவ்வாறு நிலை நாட்டலாம் என உணர்ந்து இந்த குத்பாப் பேருரைகள் அமைந்தால் அதுவும் மீடியாவில் மகத்தான வெற்றிதான்.

பொழுதுபோக்கிற்காக எத்தனையோ அம்சங்கள் வந்துவிட்டன. ஆனால் பொழுதுபோக்கிலும் உபயோகமுள்ள ஒரு கருத்தை வலியுறுத்தி பிரச்சாரங்கள், மேடை நாடகங்கள், கருத்தரங்கு கள் நடத்துதல் அவசியம். இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலமாகவும் மீடியாவின் கவனத்தை திசைதிருப்ப முடியும். மார்க்கப் பிரச்சாரங்கள், தொழுகை, இபாதத் போன்றவற்றிற்கு மட்டும் முஸ்லிம்கள் ஒன்று திரளக்கூடியவர்களாக இருந்த நிலை மாறி பாபர் மசூதி பிரச்சினை, வாழ்வுரிமை மாநாடுகள், அரசியல் மேடைகள், மதமாற்ற தடைச் சட்டம், லாட்டரி ஒழிப்பு போன்ற பிரச்சினைகளுக்கும் தற்போது ஒன்று குழுமக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனினும் மீடியாவில் நாம் சொல்லக்கூடிய அளவில் முன்னேற்றம் கண்டுவிடவில்லை. எனவே நவீன மீடியாக்களைப் பயன்படுத்தி காலத்திற்கேற்றாற் போல செய்திகளை மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

### இணையம் (Internet)

இணையம் என்பது உலகத்தின் ஒட்டுமொத்த ஊடகங்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து இணைத்துவிடுகிறது. டாட்காம், வெப்காம், பிளாக், இ-மெயில், சாட்டிங், டேட்டிங், ∴பாரம், ஆன்லைன் என்று உலக மீடியாக்களில் இணையம் இமாலய முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றது. நம் சமுதாய மக்களோ இன்னும் கம்ப்யூட்டர் என்றால் என்ன? சா∴ப்ட்வேர் என்றால் என்ன? ஹார்ட் வேர் என்றால் என்ன? என்று கணினி பற்றிய உபயோகம் குறித்து அறியாமலே இருக்

கிறார்கள். கணிப்பொறி மற்றும் இணையத்தின் பயன்பாடுகளைக் கொண்டு முஸ்லிம்கள் ஊடகங்களை வலுவடையச் செய்யலாம். கணினி மற்றும் இணையத்தின் எல்லாப் பயன்பாடுகளும் தமிழிலேயே அறிந்துகொள்ள மென்பொருட்கள் வந்துவிட்டன. கம்ப்யூட்டர் மற்றும் இண்டர்நெட் என்ற ஊடகங்களின் பயன்பாடுகள் அறிந்து முஸ்லிம்கள் இவ்வாறான மீடியாக்களைப் பயன்படுத்த முன்வருதல் வேண்டும்.

### ஒற்றுமை என்ற பண்பு மீடியாவின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்

முஸ்லிம்கள் மீடியாவில் தாக்குப்பிடித்து மேற் கண்ட வழிகளில் முன்னேற ஒற்றுமை என்ற பண்பை முன்நிறுத்தியாக வேண்டும். உலக அளவில் இருக்கும் 50க்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் ஒருமித்த கருத்தில் இருந்தால் அமெரிக்காவை எதிர்கொள்ள முடியாதா? ஊரளவில் முஸ்லிம்கள் ஜமாஅத்களாகவும், அமைப்புகளாகவும் பிரியாமல் ஒன்றுபட்டால் பெரிய மக்கள் சக்தியை உருவாக்க முடியாதா? கண்டிப்பாக முடியும். அப்போதுதான் மீடியாவின் மூலமாக சிறந்த செயல் திட்டங்கள் உருவாக்கமுடியும். பொருளாதாரத்தைச் சரிகட்டி நடைமுறைப்படுத்தவும் முடியும். இதை முஸ்லிம் சமுதாய மக்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

எனவே பிறமத மக்களும் அதிகளவில் பயன்படுத்தக்கூடிய சமூக வலைத்தளங்களை முஸ்லிம்களாகிய நாங்கள் மிகவும் கண்ணியத் துடனும், அவதானத்துடனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் வெளியிடுகின்ற தகவல்கள், தரவுகள் இஸ்லாத்தின் மீது ஏனைய மதத்தவர்கள் தவறான எண்ணங்களை ஏற்படுத்தாத வகையில் கவனமாக இருந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய மார்க்கத்தின் தனித்துவம், முஸ்லிம்களின் கண்ணியம் நமது செய்திகளில், வெளியீடுகளில் பிரதிபலிக்க வேண்டும். இஸ்லாத்தையும் அதன் கண்ணி யத்தையும் மழுங்கடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைகின்ற அந்நிய சதிகளும் அடிமையாகி விடாமல் ஒரு உண்மை முஸ்லிமாக வாழ்ந்து நபிகளார் விட்டுச்சென்ற அமானிதத்தை திறம்பட நிறைவேற்றி நாளை மறுமையில் மிகவும் உயர்த்தரமான இடத்தில் நம் அனைவரும் வீற்றிருக்க எல்லா வல்ல இறைவன் அருள்புரிவானாக.

எந்த ஒரு சமுதாயமும் தன் உள்ளத்திலுள்ள (போக்குகளை) மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அருட் கொடைகளை மாற்றிவிடுவதில்லை - நிச்சயமாக அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியுறுப வனாகவும், (யாவற்றையும்) நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (அல்-குர்ஆன் 8:53)

### Reference


- யூசுப் ரியாஸ் (2014), சமூக ஊடகங்களின் தாக்கம், Beru News (இணையம்), Retrieved from https;//berunews.word press.com/ 2014/05/17.
- ஷிப்லி, எப்.எச்.ஏ, சமூக ஊடகங்கள்: வாய்ப்புக்களும் சர்ச்சைகளும்; Retrieved from http://srilankamuslims.lk

## தென்கிழக்குப் பல்கழலக்கழக ஸ்தாபக உபவேந்தருடனான

# நேர்காணல்



– ஸஹீம் (இர்பானி)
– ஷகீர் (நத்வி)

### 1. உங்களை பற்றிய அறிமுகம்

இலங்கைத் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எழில் கொஞ்சும் பொத்துவில் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த நான் எனது ஆரம்பக்கல்வியை ஆங்கில மொழி மூலமாக தொடர்ந்து வந்த நான் பின் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அங்கேயே ஆரம்பித்தேன். ஆரம்பம் முதலே எனது கல்விப் பயணத்தை இணைந்து கொண்டேன். அங்கேயே எனது உயர்கல்வியினை நிறைவு செய்து பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவானேன்.

அங்கே எனது பட்டப்படிப்பினை தொடர்ந்த வேளையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மிகச்சிறந்த கல்விமான்களிடம் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களின் மனித வரலாறு பற்றிய ஆழமான, கூர்மையான அறிவும் அகன்ற சமூகப்பார்வையும் நான் பல்கலைக்கழக கல்வியை நேசிக்கக் காரணமாயின. இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நான் பொறுப்பேற்ற போது என் மதிப்பிற்குரிய ஆசான்களில் ஒருவராக இருந்த யு.து.வில்சன் அவர்கள் எனக்கு இவ்வாறு உபதேசித்தார்கள் “உனது கடைமைகளுள் முக்கியமானவை சிறந்த கல்வித் திட்டத்தை வழங்குவது, நவீன கற்கை நெறிகளை உருவாக்கி பல்கலைக்கழக கலண்டரினைத் தயாரிப்பது, யாதாயினும் ஒரு பீடத்தை அதிசிறந்த பீடமாக கட்டி எழுப்புவது என்பனவாகும். இதில் அவர் இஸ்லாமிய நாகரீகம் சார்ந்த கற்கை நெறிகள் தேவை” என அடையாளப்படுத்தினார்.

*1994*ல் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்ற ஒன்று இலங்கையில் இருக்கவில்லை. இப்பல்கலைக் கழத்தினை உடன் நிறுவி செயற்படுத்தும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. இம்மாபெரும் பொறுப்பினை நான் இறைபணியாகவே கருதினேன். அதன் பின் முழு மூச்சோடு இப்பணியில் இறங்கினேன். இதற்கு எனக்கிருந்த கல்வித் தகைமை, பல்கலைக்கழக சூழல், அதன் கலாசாரம் பற்றிய நீண்ட கால அனுபவமும் பயிற்சியும் துணை நின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி மூலம் கல்வி பயின்று உயர் சித்தி அடைந்த போது அப்பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டேன். நீண்ட காலம் இப்பணியை ஆற்றிய பின் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தராக பொறுப்பேற்றேன். அன்று நான் இங்கு வந்த போது பல்கலைக்கழகத்திற்கான எந்தவொரு வளங்களும் போதுமான அளவில் இருக்கவில்லை. ஆனால் இன்று எல்லா வளங்களும் நிறைவாகப் பெற்ற சிறந்த பல்கலைக்கழகமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. மேலும் இப்பல்கலைக்கழகம் இன்னும் வளர்ந்து இப்பிரதேசத்து மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் இந்நாட்டின் வளர்ச்சிக்கும் கைகொடுத்து உதவவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## 2. தங்களது உயர் கல்வி முயற்சியும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கான வாய்ப்புக்கு குறித்தும் கருத்துரைக்குக?

உயர்கல்வி முயற்சியைப் பொறுத்தவரையில் அனைவரதும் ஆசைதான் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரியாக மாறவேண்டும், சமூகத்தில் சிறந்த அந்தஸ்திற்கு வரவேண்டும், சமூகத்திற்காய் நிறைய செய்யவேண்டும். அதே போன்றுதான் என்னுடைய ஆசையும் பல்கலையினை மையமாகக் கொண்டே அமைந்திருந்தது.

உண்மையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பாரிய சவால்களுக்கு மத்தியிலே ஆரம்பிக்கப்பட்டது. ஒரு முறை மர்ஹூம் அமைச்சர் அஷ்ரப் என்னிடம் வந்து கேட்டதொரு கேள்வி ஞாபகத்திற்கு வருகிறது. சேர் நாங்க மடத்தனமானதோரு வேலை செய்து விட்டோமோ? இலங்கையில் வசதி வாய்ப்புக்களுடன் பல பல்கலைக்கழகங்கள் இயங்கிவருகின்றன. அதில் பல வருடகாலம் அனுபவம் பெற்ற பேராசியர்கள் கடமையாற்றுகின்றனர். இந்த நிலையிலே தற்பொழுது எந்தவொரு வளமும் இல்லாத நிலையில் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பது சரிதானா? என்று என்னிடம் கேட்டார். அவர் இவ்வாறு என்னிடம் கேட்கக் காரணம் அவரிடம் பலர் சொல்லியிருந்தார்கள். அஷ்ரப் பல்கலைக்கழகமெல்லாம் தொடங்கிறது பொய்வேல! அந்த சல்லியெடுத்து ரோட்டப் போட்டிங்கென்டா ஓட்டுக்கெடச்சும். அதற்கு நான் கூறினேன். அமைச்சர் அவர்களே! தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டால் விரிவுரையாளர்கள் யாரும் இல்லை. யாரும் வரவும் விரும்பமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது எமக்கு வேண்டியதெல்லாம் ஒரு தளம்தான். நாம் தளத்தைச் சரியான முறையில் உருவாக்கிவிட்டால் விரிவுரையாளர்களை இங்கிருந்தே பெற்றுக்கொள்ளலாம். வெளியில் தேடி அலையவேண்டிய நிலை வராது. இன்று இக்கருத்து மிகப் பொருத்தமானதாக அமைந்திருப்பினும் அன்று அதை சிந்திப்பதற்குக் கூட முடியாத நிலையே காணப்பட்டது.

## 3. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் என்ற வகையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்களும் மர்ஹூம் அமைச்சர் அஷ்ரபின் பணிகள் குறித்தும் விளக்கம் தருக.

உண்மையிலே பல்கலைக்கழத்தின் முதற்கட்டம் என்பதனால் பல்வேறு சவால்கள் நிறைந்து காணப்பட்டது. முதலில் இம்மாபெரும் பணியினை ஒழுங்மைந்த முறையில் செய்வதற்கான வருடாந்த செயற்றிட்டங்கள் எதுவும் காணப்படவில்லை. அதனை தொடர்ந்து கொண்டு செல்வதற்கான பௌதீக வளங்களும் மனித வளங்களும் போதியளவில் காணப்படாமையே முக்கிய காரணமாகும். அத்தோடு ஒரு பல்கலைக்கழகம் நிர்வாக ரீதியாக பெற்றிருக்கவேண்டிய உபவேந்தர், மாணவ ஆலோசகர், செனட் போன்ற பல்வேறு பொறுப்புக்களை தனிமனிதனாக நின்று செயலாற்ற வேண்டிய ஒரு நிலை எனக்கு ஏற்பட்டது. அவ்வாறே விரிவுரையாளர் பற்றாக்குறை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது. வெளிப்பிரதேசங்களிலிந்து விரிவுரையாளர்கள் வருகைதருவது என்பது அன்று சாத்திமற்றதாகவே காணப்பட்டது. இதன் விளைவாக இப்பல்கலைக்கழகம் அண்டியிருந்த பிரதேசங்களிலிருந்து பௌதீகவியல் போன்ற விரிவுரைகளுக்காக பாடசாலை ஆசிரியர்கள் வரவேண்டிய தேவை ஏற்பட்டது.

அத்தோடு இங்கே மேற்படிப்பைத் தொடருவதற்காக வெளியூர்களிலிருந்து பல கனவுகளோடு வந்திருந்த மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே அவர்களுக்கு இருந்தது. காரணம் அவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கான வதிவிடங்கள் போதாமலும் அதற்கான வசதிவாய்ப்புக்களும்

பற்றாக்குறையாகவும் காணப்பட்டன. விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்த காலமாக இருந்தது. எனவே எனக்கு இதனால் கொலைமிரட்டல், வன்முறைகள் வெடிக்கலாம் போன்ற கருத்துக்கள் என்னைச் சுற்றியிருந்தவர்களால் முன்வைக்கப்பட்டன. இருந்தபோதிலும் இவ்வாறான பல்வேறு சவால்களையும் பிரச்சினைகளையும் தாண்டியே இப்பலைக்கழகத்திற்காக அதன் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துச் செயலாற்ற முன்வந்தேன். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய பாரிய பிரச்சினைகளுக்கு பின்னாலும் இப்பல்கலைக்கழகம் இன்றுவரை தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது அமைச்சர் அ்ரப்பினுடைய அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் என்றுதான் சொல்லவேண்டும். இன்னும் சுருக்கமாக ஒரே வார்த்தையில் சொன்னால் அஷ்ரப் இல்லாமல் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இல்லை. இம்மண்ணில் முஸ்லிம்களின் கல்வி எழுச்சியினை மையமாகக் கொண்ட அவரது போராட்டம் பாராளுமன்றம் வரை சென்றது. அங்கே இனவாதிகளின் வாதப்பிரதிவாதங்களுக்குள் சிக்கிய இப்போராட்டம் பல்வேறு சவால்கள், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் வெற்றியோடு வீர நடைபோட்டது.

## 4. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப உபவேந்தர் என்ற வகையில் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தில் ஒரு உபவேந்தரினதும் ஏனைய ஆளணியினரதும் பணிகள் குறித்துக் குறிப்பிடுங்கள்?

சமூகத்தின் உயர்கல்வி நிறுவனமான பல்கலைக்கழகம் தனக்கென கல்வி மற்றும் நிர்வாகம் திட்டங்களையும் கொள்கைகளையும் கொண்டிருப்பது மிக இன்றிமையாத ஒன்றாகும். அவையே அதனது எதிர்கால நகர்வினை தீர்மானிக்கின்ற முக்கிய காரணிகளாகும். இந்த அடிப்படையில் அவற்றினை பொறுப்பெடுத்துச் செயலாற்றுகின்ற பிரதான நபர்தான் உபவேந்தராவார். பல்கலைக்கழத்திற்கான கொள்கைகளை திட்டங்களை வரைந்து அமுல்படுத்துகையில் அவரோடு சேர்ந்து ஏனைய கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என அனைவரும் முன்னின்று உழைக்கவேண்டும்.

உண்மையில் பல்கலைக்கழகம் ஒன்றில் அதியுயர் அதிகாரம் கொண்ட உபவேந்தர் அது எப்படி, எவ்வாறு இருக்கவேண்டும் எதனைச் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கின்றாரோ அதுவே நடைமுறைக்கு வரும். மொத்தத்தில் அவரே பல்கலைக்கழகமொன்றின் அடுத்த கட்ட நகர்வின் முக்கிய சக்தியாக விளங்குகிறார். இத்தகைய நபர்தான் சாதாரண ஊழியர் முதல் உயர்மட்ட அதிகாரிகள் வரை அனைவருக்கும் எல்லா விவகாரங்களிலும் சிறந்ததொரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். இவ்வாறாக தனது பொறுப்பினை முறையாக பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளும் போது ஏனையவர்களும் அதனைப் பின்பற்றுவார்கள் என்பது வெள்ளிடைமலை.

அத்தோடு இப்பல்கலைக்கழகத்திற்கு என்னால் என்ன முடிந்ததோ அதைச் செய்தாக வேண்டும் என்ற மனப்பாங்கோடு உழைக்கின்ற, படிக்கின்ற, சேவையாற்றுகின்ற ஓர் சமூகத்தினை உருவாக்க வேண்டும். அத்தோடு பல்கலைக்கழகம் ஒன்றின் முக்கிய கதாபாத்திரங்களாக இருந்து கொண்டிருக்கின்ற மாணவர்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற இன்னும் பல்வேறு விடயங்களிலும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். இன, மத, பேதமின்றி சகல மாணவர்களும் சகோதரர்களாக வாழ்வதற்கான சிறந்ததொரு கல்விச்சூழலை உருவாக்குவதும் பல்கலைகழகமொன்றின் உண்மையான முன்னேற்றமாகும்.

## 5. அமைச்சர் மர்ஹூம் அஷ்ரபின் கனவுப் பல்கலைக்கழகத்திற்கும் இன்றை நடப்புப் பல்கலைக்கழத்திற்குமான மதிப்பீடுகள் குறித்து சொல்ல முடியுமா?

அமைச்சர் அஷ்ரப் இலங்கை வாழ்முஸ்லிம்களின் எதிர்கால முன்னேற்றத்திற்காக வளர்ச்சிக்காக உழைத்த அம்மாமனிதரின் சிந்தனையில் உதித்த கனவுகளில் ஒன்றுதான் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமாகும். அமைச்சர் அஷ்ரப் அவர்கள் அன்றைய அரசியல் கெடுபிடிகளுக்கு மத்தியில் போதிய ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாத தருணத்தில் தென்கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு பல்கலைக்கழகம் தேவை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார் என்றால் நிச்சயமாக அவருக்கு அதில் பல கனவுகள், இலக்குகள் இருந்திருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விடயம்தான் இந்நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் உயர்கல்வியினை தனித்துவமான முறையில் முன்னெடுத்தும் செல்லும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் இப்பல்கலைக்கழகமாகும். உண்மையில் அவரது அயராத முயற்சிக்கான பலன்களை இந்நாட்டு முஸ்லிம்கள் அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சொல்லி விளக்க வேண்டிய அவசியம் கிடையாது என்பது தான் எனது கருத்து. இலங்கையில் வருடாந்தம் பல்கலைக்கழகம் நுழையும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தை மதிப்பீடு செய்யும் போது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இங்கே வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம்தான்.

குறிப்பாக கிழக்கிலே செறிந்து வாழும் முஸ்லிம்களின் கல்வியினை வளப்படுத்தும் தரப்படுத்தும் அறிவு உற்பத்தி மையமாக இப்பல்கலைக்கழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதிலும் இலங்கையில் முதன்முதலாக முஸ்லிம்களுக்காக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபுமொழிக்கென தனியானதொரு பீடம் தோற்றம் பெற்றது இதன் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகிறது.

மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் அன்றைய கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். அத்தோடு அவரின் இன்னுமொரு கனவுதான் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் ஏனைய சிங்கள, தமிழ்,கிறிஸ்தவ இனத்தவர்களும் இங்கிருந்து ஒன்றாக உயர்கல்வி பயின்று சகோதரர்களாக இந்நாட்டிற்கு சிறந்த பிரஜைகளாக சேவையாற்ற வேண்டும் என்பதாகும்.

இன்றைய காலத்தில் சகல இனத்தவர்களையும் உள்வாங்கிக் கொண்ட ஒரு கல்விச் சூழலை அவதானிக்க முடிகிறது. மேலும் அவர்களின் மதநடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ளும் வகையில் சகல மத வழிபாட்டுத்தலங்களையும் இங்கு காணமுடியும். அத்தோடு ஆங்கில மொழியினை முதன்மையாகக் கொண்ட கல்விமுறையும் நவீன காலத்திற்கு ஏற்றாற்போல் தொழில்நுட்பப் பீடமும் உருவாக வேண்டும் என்பது அவரது இன்னொரு கனவாகக் காணப்பட்டது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில மொழிக்கென தனியானதொரு அலகு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் பெரும்பாலான பீடங்கள் ஆங்கில மொழி மூலமான விரிவுரைகளைக் கொண்டே காணப்படுகிறது. தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் அது இன்று தனி ஒரு பீடமாக செயற்படும் அளவுக்கு போதிய மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கொண்டு மிகச்சிறந்த முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த காலங்களை விட தற்போது அதன் வளர்ச்சியைக் காணமுடிகிறது. அமைச்சர் அஷ்ரப் அவர்கள் கண்ட கனவுகள் இன்று வல்லவன் அல்லாஹ்வின் நாட்டத்தோடு இனிதே நடந்தேறி வருகிறது.

## 6. இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்விக்கு எத்தகைய பங்களிப்புக்களை வழங்கியுள்ளது எனக் கூறுவீர்களா?

உண்மையில் இது முக்கியமானதொரு கேள்விதான். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் எனும் போது அது இலங்கைத் திருநாட்டில் ஏனைய பல்கலைக்கழகங்களை விட இந்நாட்டிற்கும் இஸ்லாமிய சமூகத்திற்கும் தேவையான பல பட்டதாரிகளை, கலாநிதிகளை, பல்துறைசார் அறிஞர்களை உருவாக்கிக்கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

மேலும் இப்பல்கலைக்கழகம் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அமைந்திருப்பது பெரும் வரமாகக் கருதமுடியும். உள்வாரியாக மற்றும் வெளிவாரியாக என அதன் பட்டப்படிப்பிற்கான கல்விப்பயணம் வெகுவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் தன்னிடம் வருகின்ற மாணவர்களை சமூகத்திற்குத் தேவையான குறிப்பிட்ட துறைசார்ந்த மாத்திரம் மனித வளங்களை உருவாக்கிவிடுவதோடு அதன் பணியை முடித்துவிடுகிறது.

பல்கலைக்கழகம் நுழையும் மிக அதிகமான முஸ்லிம் மாணவ, மாணவிகள் கலைப்பீடத்தினை நோக்கியே படையெடுத்துவருகின்றார்கள். வந்தோம், படித்தோம், பட்டம் பெற்றோம் எனும் மானப்பாங்கோடே இதனை இங்கு தொடர்கிறார்கள். இத்தகைய சிந்தனை அவர்களது மனங்களிலிருந்து நீக்கி விட்டு என்னிடம் என் சமூகம் எதனை எதிர்பார்க்கிறது என்னால் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பது போன்ற சமூக சிந்தனையை வளர்த்து விடவேண்டும். அதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமாக அத்தனையையும் செய்தாக வேண்டியது பல்கலைக்கழகத்தினுடைய தார்மீகப் பொறுப்பாகும். உண்மையில் அதுதான் பல்கலைக்கழகம் ஒன்றின் மகத்தான வெற்றியும் பெறுபேறுமாகும்.

அத்தோடு கலைப்பீடத்தோடு அதன் கடமைகளை முடித்துக்கொள்ளாமல் சமூகம் வேண்டி நிற்கின்ற வைத்தியம், பொறியியல் போன்ற முக்கியமான துறைகளுக்கான மனிதவளங்களை உருவாக்கவும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவும் செயற்படுவது அதன் மற்றுமோரு பொறுப்பாகும். எனவே கலைத்துறை பட்டதாரிகளை சமூகத்திற்குள் நிரப்பிவிடுவதோடு அதன் பணியை நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்தும் இஸ்லாமிய சமூகத்திற்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் நேரடியான பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமாகப் பேசப்படவேண்டிய ஒன்றாகும்.

## 7. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையப்படுத்தி ஒலுவில் மற்றும் அதனைச் சார்ந்த பிரதேசங்கள் பெற்றுக்கொண்ட பயன்களும் பெறத்தவறிய பயன்களும் குறித்து உமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுங்கள்?

உண்மையில் தென்கிழக்குப் பிராந்தியத்தில் இப்பல்கலைக்கழகத்தின் வருகையானது ஒலுவில் மற்றும் அதனை அண்டிய கிராமங்களுக்கும் கிடைத்த பெரும்வரம் என்றுதான் சொல்லவேண்டும். இதன் வருகையோடுதான் அப்பிரதேசங்களில் வீதிகள் புனரமைப்பு, சில அரசாங்கக் கட்டடங்கள் உருவாக்கப்படல் போன்ற பொருளாதார ரீதியாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத்தினால் நடைமுறைக்கு வந்தன. குறிப்பாக கல்வி நிலையை மையப்படுத்தி நோக்கும் பொழுது அங்கே காலடியில் பல்கலைக்கழகம் நன்றாகப் படிக்க வேண்டும் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் போன்றதொரு ஆசை, ஆர்வம் அப்பிரதேசத்து மாணவ, மாணவிகளுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு சிறந்த சில பயன்களையும், முன்னேற்றங்களையும் அடைந்து கொண்டது.

எனினும் இப்பல்கலைக்கழகம் இப்பிரதேசத்தை மையப்படுத்தி நேரடியாக போதிய பங்களிப்பினையும், சேவையினையும் வழங்கவில்லை என்பதே உண்மையாகும். சமூக வளர்ச்சிக்கு தேவையான மனித வளங்களை உற்பத்தி செய்கின்ற அறிவுக் கேந்திரமையமான பல்கலைக்கழகமானது தன்னைச் சுற்றியிருக்கின்ற பிரதேசங்களிலும் ஏனைய இடங்களிலும் தாக்கம் செலுத்தும், செலுத்த வேண்டும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுதான் பேராதனைப் பல்கலைக்கழகமாகும். இலங்கையில் முன்னிலை வகிக்கின்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத்திகழ்ந்து கொண்டிருக்கின்ற இப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளியாகும் பட்டதாரிகள் அனைவரும் சமூகத்திற்கு சேவையாற்றும் அதேநேரம் அப்பல்கலைக்கழகமும் பல்வேறு சமூகம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதனால் அதனை அண்டியிருக்கின்ற மாவனெல்லை போன்ற பல பிரதேசங்களும் பயனடைந்து வருகின்றன. குறிப்பாக அப்பிரதேசத்து முஸ்லிம்கள் கல்வியிலும் நிர்வாகத்துறையிலும் இன்னோரன்ன துறையிலும் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் ஒலுவிலும் அதனையொட்டிய பிரதேசத்தவர்களும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை எவ்வாறு பார்க்கிறார்கள்? எதனை எதிர்பார்க்கிறார்கள்? என்பதுதான் நாமனைவரும் சிந்திக்க வேண்டிய விடயமாகும். உண்மையில் அவர்களின் பார்வையில் இது எமக்கு வேண்டாத ஒன்றுதான். அதற்கான முக்கிய காரணம் இப்பல்கலைக்கழகம் இன்னமும் அவர்களோடு இணைந்ததாக சமூகமயப்படுத்தப்படவில்லை.

எனவே, இவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டியது எம்மனைவரினதும் கடைமையாகும். அந்தவகையில் இப்பல்கலைக்கழகம் அச்சமூகத்தவர்களைப் புரிந்து கொண்டு அவர்களின் தேவைகளை இனங்கண்டு அதற்கான முன்னெடுப்புக்களையும் செயற்திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். சமூகம்சார் கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளையும் நடாத்த வேண்டும். மேலும் இப்பிரதேசம் மீன்பிடி, விவசாயம் ஆகியவற்றை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகிறது.

எனவே இவ்விடயத்திலும் கரிசனை செலுத்துவதோடு அதற்கான வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும். தற்போதைய உயர் பதவிக்குரிய உபவேந்தர் பேராசிரியர் நாஜிம் அவர்கள் கூட விவசாயத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். இத்துறையில் தேர்ச்சி பெற்ற அவர் தொடர்ந்து இவ்விவகாரங்களில் கவனம் செலுத்துவார் என நம்புகிறேன். இது போன்ற திட்டங்களுடன் அர்ப்பணிப்புடன் இப்பல்கலைக்கழகம் பயணிக்கும் என்றால் நிச்சயமாக இறைவன் நாடினால் சிறந்ததொரு சமூக மாற்றத்தினையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தலாம் என்பது திண்ணம்.

### 8. தேசியப் பல்கலைக்கழகம் என்றவகையில் அதன் அபிவிருத்தி அடைவுகள் எதனை மையப்படுத்தியதாக அமைய வேண்டும் என நம்புகிறீர்கள்?

பொதுவாக சமூகத்திற்குத் தேவையான பெறுமதியான மனித வளங்களை உற்பத்தி செய்கின்ற பணியினைப் சகல தேசியப்பல்கலைக்கழகங்களும் செய்துகொண்டிருக்கின்றன. இன்னும் தெளிவாக சொல்லப்போனால் தேசியப்பல்கலைக்கழகம் என்று சொல்வதற்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அத்தனையையும் பெற்றிருக்க வேண்டும். அது கல்வி, விளையாட்டு, பொருளாதாரம் என எத்துறை சார்ந்ததாகவும் இருக்கலாம். முக்கியமாக நவீன காலத்திற்கு ஏற்றால் போலான சமூகமாற்றத்தினையும், சமூக நகர்வினையும் திட்டமிட்டு கட்டமைக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

அதற்கு முன்னதாக எந்தப் பல்கலைக்கழகமும் தான் பொறுப்பேற்று எடுக்கின்ற ஒவ்வொரு

மாணவனையும் சமூக சிந்தனை கொண்ட ஓர் ஆய்வாளாக வளர்த்தெடுக்க வேண்டும். அவன் அப்பல்கலைக்கழகத்தின் எத்துறை மாணவனாக இருந்தாலும் சரி இத்தகைய பயிற்சியினை கட்டாயம் வழங்க வேண்டும். ஏனென்றால் சடத்துவ சிந்தனை பரவியிருக்கின்ற இன்றைய இவ்வுலகில் பட்டம், பதவியோடு தனது வாழ்வு முடிந்து விடுகிறது என இளைஞர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இதே சிந்தனையோடுதான் படித்த பலரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தான் தன்னையும் தனது சமூகத்தினையும் பற்றிச் சிந்திக்கின்ற ஓர் சமூக ஆர்வலனையும் ஆய்வாளானையும் உருவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பில் சகல தேசிய பல்கலைக்கழகங்களும் உள்ளன என்று சொன்னால் மிகையாகாது.

அல்ஹம்துலில்லாஹ் இன்று எமது தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இதனை கவனத்திற் கொண்டு பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதனை அவதானிக்க முடியுமாக உள்ளது. அதில் ஓர் அங்கம்தான் கடந்த சில வருடங்களாக துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாணவர் ஆய்வு மன்றமாகும். கலைகள் கணினியுடைய கைகளுக்கு கைமாறிப்போன இக்காலத்தில் கையினால் கட்டுரைகளையும் கவிதைகளையும் ஏனைய ஆய்வுகளையும் எழுதி மிகச் சிறப்பான மாணவர் சமூகத்தினை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இவற்றுக்கும் மேலாக இத்திருநாட்டில் வாழ்கின்ற எல்லா இனத்தவர்களையும் மதத்தவர்களையும் நல்லமுறையில் புரிந்து வாழ்கின்ற பட்டதாரிகள் உருவாக்கப்பட வேண்டும்.

## ௯. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இன, மத நல்லுறவுக்கான வாய்ப்புக்களும் வழிகாட்டல்களும் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்?

இன்று எமது நாட்டிலே இருக்கும் தேசியப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மேற்படிப்பைத் தொடர்வதற்காக சகல இன,மத சகோதரர்களுக்காகவுமே உருவாக்கப்பட்டுள்ளது. கற்றறிந்த இந்நாட்டுப்பிரஜைகள் தான் எதிர்கால சந்ததியினரை வழிநடாத்தக்கூடியவர்கள் என்பதை அனைவரும் அறிந்திருக்கிறார்கள். இன,மத பேதமின்றி அனைவரும் சகோதரர்களாக சகவாழ்வு வாழவேண்டும் என்பதைத்தான் எல்லாப் பல்கலைக்கழகங்களும் விரும்புகின்றன.

இந்த வரிசையில் எமது பல்கலைக்கழகத்திற்கு தனியிடம் இருக்கிறது. கடந்த காலங்களை விட இப்போது இதனை பரவலாகக் காணமுடியும். சிங்களவர்கள், முஸ்லிம்கள்,தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என அனைவரும் சமூகமாக வாழும் அழகிய சூழலை இப்பல்கலைக்கழகம் ஏற்படுத்தியிருக்கிறது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தபோதிலும் அவரவர்களுக்கான மதவழிபாட்டுத்தளங்களை அருகருகே காணமுடியும். இத்தோடு நில்லாமல் ஒவ்வொரு மத சகோதரர்களும் தமது மதம், கலை, கலாசாரம் போன்ற நிகழ்வுகள் அரங்கேற்றும் போது மற்ற மாற்றுமத சகோதரர்களையும் இணைத்து நடாத்தும் காட்சிகளை தாராளமாக இன்று காணமுடியும். உண்மையில் இவையனைத்தும் இப்பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திற்காக அயராது பாடுபட்ட அமைச்சர் மர்ஹூம் அஸ்ரப் அவர்களின் கனவாகவே இருந்தது.

மேலும் இன, மத கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங்களை பரிமாறிக்கொள்ளும் வகையிலான மேடை நிகழ்ச்சிகளையும் விளையாட்டுப்போட்டிகளையும் அவ்வப்போது இப்பல்கலைக்கழகம் வழங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் மஜ்லிஸ், இந்து மாமன்றம் போன்ற இன்னும் சில மாணவர் அமைப்புக்கள் இவ்வின, மத நல்லிணக்கமான வாழ்வுக்கு பெரிதும் தொண்டாற்றிக்கொண்டிருக்கின்றன என்பது இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய அம்சமாகும்.

## 10. இலங்கை வாழ்முஸ்லிம்கள் உயர்கல்வியை தொடர்வதற்கு போதிய முயற்சி செலுத்தாமல் இருக்கிறார்கள். இது பற்றிய உங்களது தேடல்?

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை நோக்கும் போது அவர்களின் வாழ்வு வர்த்தகத்தை பிரதானமாகக் கொண்டிருந்ததை அறியமுடிகிறது. இந்த வகையில் அதன் தாக்கம்தான் இன்று சுயதொழில் பொருளாதாரம் எனும் சிந்தனையாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனைத் தான் நமது சமூகம் இலக்காகக் கொண்டு நகர்ந்து கொண்டிருக்கிறது. இவ்விடயம்தான் பெரும்பாலும் படிக்கவேண்டும், முன்னேற வேண்டும் எனும் சிந்தனை மழுங்கடிக்கிறது. அதனால் உயர்கல்வியினை தொடர்வதற்காக பல்கலைக்கழகம் நுழையும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தைப் பார்க்கும் போது குறைந்தளவிலேயே இருக்கிறது. அதிலும் பலர் பட்டம் பெற்று சமூகத்திற்குச் சென்றாலும் அவர்களும் பாமரர்களாகிவிடுகிறார்கள். வெகு சிலரே சமூகம் எதிர்பார்க்கும் சிறந்த பிரஜைகளாக சமூகசேவகர்களாக உருவெடுக்கிறார்கள்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் முஸ்லிம்களை கல்விப்பாதையில் வழிநடாத்துகின்ற வழிகாட்டுகின்ற சிறந்தொரு தலைமைத்துவம் இல்லாமைதான். அமைச்சர் அஷ்ரப்பின் மறைவோடு அதுவும் மறைந்து விட்டது. இன்றைய முஸ்லிம் தலைமைகள் அரசியலையும் பொருளாதாரத்தையும் முதன்மைப்படுத்தி பேசும் அளவுக்கு கல்வியை முன்னிறுத்திப் பேசுவதில்லை என்பது கசப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும். இன்றைய முஸ்லிம் இளம் சந்ததியினரின் கல்வி நிலையை கவனிக்கும் போது எதிர்கால முஸ்லிம்களின் இருப்பு கேள்விக்குறியாகவே இருக்கிறது.

எனவே இவ்வாறான மோசமான நிலையினை அடியோடு இல்லாதொழித்து சிறந்ததொரு கல்விச்சமூகத்தை உருவாக்க வேண்டும். இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது இலங்கை வாழ்முஸ்லிம்கள் அனைவரினதும் தார்மீகக் கடைமையாகும். இன்றிருக்கின்ற புத்திஜீவிகளும், சமூகசிந்தனையாளர்களும், அரசியல்வாதிகளும் ஏனையோரும் இவ்விடயத்தில் முன்னின்று தீர்மானம் எடுக்க வேண்டும். இதுவே இனிவரும் காலத்தினை நல்லமுறையில் செப்பனிட உதவும் என்பதில் சந்தேகமில்லை.



# இலங்கையின் மும்மொழிப் பாடசாலைத் திட்டமும் அதன் எதிர்கால நிலைபேறும்

**- றினோசியா யாகூப்**

மொழி என்பது ஒரு தொடர்பாடல் ஊடகமாகும். ஒரு வகுப்பார் அல்லது நாட்டார் தம் கருத்தினை பிறருக்குப் புலப்படுத்துவதற்கு கருவியாகக் கொள்ளும் ஒலித் தொகுப்பே மொழியாகும். மொழி என்பது மனிதனின் அறிவு நிலைப்படுத்தப்படுவதனை அடையாளப் படுத்துகின்றது. மனிதவியல் ஆய்வாளர்கள் கூறுகின்ற போது 'மனித குலம் பேச ஆரம் பித்ததே கடந்த பத்தாயிரம் ஆண்டுகள்தான்' என்கின்றனர். மனிதன் தன் தொடர்பாடல் ஊடகமாக மொழியைப் பயன்படுத்துகின்ற அதே நேரம் அம் மொழி பல வகையினதாக காணப்படுகின்றது. ஒவ்வொறு கால சூழலிலும் ஒவ்வொரு சமுகமும் தனக்கேயான பிரத்தியேகமான மொழிகளை அடையாளம் காட்டுகின்றது. மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம் என்ற அடிப்படையில் கல்வித்துறையில் அதீத பங்காற்றுகின்றது. அந்த வகையில் உலகில் ஏராளமான நாடுகளில் மொழிப் பாடங்கள் பாடசாலைக் கல்வியில் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளதை காணலாம். பாடசாலை மாணவர் கள்தான் நாட்டின் எதிர்கால முதுகெலும்புகள் என்ற அடிப்படையில் மாணவர்களின் மொழி அறிவு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப் படுகின்றது. 'ஜோன் டைகர்' என்ற அறிஞர் தன்னுடைய ***'out line of linguistic analysis (1942)*** என்ற நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ***'A language is a system of arbitarary vacal symbols by means of which a social group coaperates'*** இதிலிருந்து மொழி என்பது ஒலியினையும், குறியீட்டினையும் கொண்ட ஓர் ஊடகமாகும். இது சமுகங்களுக்கிடையிலான தொடர்பினை ஏற்படுத்தும் எனலாம்.

இவ்வகையில் மொழித் துறைக் கல்வியானது ஒவ்வொரு நாடும் ஆழ்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டிய துறையாகும். உலக நாடுகள் ஒவ்வொன்றும் தனக்கேயுரிய சொத்தான தேசிய மொழியொன்றை கொண்டு காணப்படுகின்ற போதிலும் ஏனைய மொழிகளும் முக்கியம் பெறுகின்றன. ஏனெனில் ஒரு நாட்டில் ஒரு மொழி பேசுகின்ற சமுகம் மாத்திரம் வாழ்தல் என்பது அசாத்தயமானது. ஏராளமான நாடுகள் பல்லின சமுகங்களினை கொண்டு காணப்படுகின்றன. ஒவ்வொரு சமூகமும் பிரத்தியேகமான மொழி யின் ஊடாக தொடர்பாடலை மேற் கொண்டிருக்கும் வேளை பன்மொழித் துறைத் தேர்ச்சி என்பது ஒரு பிரஜை அவசியம் அறிந்திருக்க வேண்டிய ஒன்று எனலாம். பன்மொழித் துறையின் அவசியத்தை உணர்ந்த இன்றைய நவீன உலகு அதனை கல்வி நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்துவதே சாலச் சிறந்தது என்ற அடிப்படையில் மாணவர் கள் மத்தியில் அதன் எதிர்கால அடைவு களையும், தேவைகளையும் எடுத்தியம்பி அதன் வழியே மாணவர்களை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் பெறுமதியான வளங்களில் மாணவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வகையில் மொழித்துறை தொடர்பான கவனம் மேலோங்கியுள்ளது.

பன்மொழித்துறைக் கற்கை நெறிகள் உலகில் ஏராளமான நாடுகளில் போதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக மலேசியா, தென்னா பிரிக்கா, இந்தியா, சூரிணாம், அமெரிக்கா, ஆசியா, கனடா, சுவிஸ்லாந்து, பெல்ஜியம், பப்புவா நியுகினி போன்ற நாடுகளை அடை யாளப்படுத்தலாம். இவ்வாறான நாடுகள் ஏன் பன்மொழிக் கல்விக்கு அவசியம் கொடுத் துள்ளது என்றால் ஒவ்வொரு நாடும் மற்றைய நாடுகளுடனும், சமுகங்களுடனும் தொடர் பாடலை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. அந்த தொடர்பாடல் அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, இராஜ தந்திர உறவுகளாகவோ அமையலாம்.

இவ்வாறான நிலையில் வெவ்வேறு நாடுகளிலும் உள்ள மொழி தொடர்பான அறிவு அவசியமாகின்றது. எனவேதான் மேற்சொன்ன நாடுகள் பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்களில் மொழித் துறைக்கான பிரத்தியேகமான திணைக்களங்களை நிறுவி மொழி அறிவினை அதிகரிக்க முயல்கிறது. இதற்காக உலக நாடுகள் தம் நிதியில் பெரும்பாலான தொகையினை செலவிடுகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கமும் பன்மொழி தொடர்பான கவனத்தினை கொண்டுள்ளது. இலங்கை ஒரு பல்லின சமூகம் வாழுகின்ற நாடு என்ற வகையிலும், சமூக ஒருமைப்பாட்டிற்கு அந்தந்த சமூகங்களின் மொழி தொடர்பான அறிவு அவசியம் என்ற அடிப்படையிலும் பன்மொழி தொடர்பான செயற்பாட்டினை கல்வித் துறையில் புகுத்தியுள்ளது இலங்கையில் அரச கரும மொழியாக தமிழ், சிங்களம் காணப்படுகின்ற போதிலும் 'மும்மொழித் திட்டம்' ஒன்றினை உருவாக்குவதன் ஊடாக சர்வதேச ரீதியிலும் தொடர்பாடலை விரிவுபடுத்த முயல்கிறது. மொழி என்பது மனித குல வரலாறு நெடுகிலும் உணர்வுகளையும், அனுபவங்களையும் பரிமாற்றிக் கொள்கின்ற ஒரு சாதனமாகும். இது கற்காலம் முதல் பல பரிணாமங்களை பெற்று வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. சர்வதேச மொழியாக ஆங்கிலம் காணப்படுவதனால் இலங்கை அரசு தன் அரச கரும மொழியான தமிழ் மற்றும் சிங்கள மொழியோடு ஆங்கில மொழியையும் அவசியப்படுத்தியுள்ளது. எனவேதான் மொழி தொடர்பான அரசின் வேறுபட்ட கொள்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இதன் ஒரு அங்கமாகவே மும்மொழிக் கல்வித் திட்டத்தினை கல்வித்துறையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இலங்கை தமிழ் மற்றும் சிங்களத்தினை தாய் மொழியாக கொண்ட சமூகம் வாழுகின்ற நாடாக காணப்படுவதனால் இனங்களுக்கிடையிலான தொடர்பாடலை விரிவுபடுத்தும் முகமாக இரு சாராருக்கும் பொது மொழியாக ஆங்கில மொழியினை அடையாளப்படுத்தலாம். எனவே இலங்கை அரசின் 'மும்மொழித் திட்டம்' பல்கலைக்கழகங்களினூடாக போதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக களனி பல்கலைக் கழகம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகம் போன்ற இடங்களில் விஷேட பாட நெறியாக இந்த மும்மொழிக் கல்வி போதிக்கப்பட்டுகின்றது. அதே நேரம் யாழ் பல்கலைக் கழகம் 'மொழி பெயர்ப்பு' என்ற ஒரு கற்கை நெறியை அறிமுகம் செய்துள்ளது. இதுவும் மொழி தொடர்பான மாணவர்களின் அறிவினை விருத்தி செய்யும் ஒரு களம் என்றே கூறலாம். நாட்டின் எதிர்காலம் மாணவர்களின் கரங்களில்தான் உள்ளது என்ற கருத்தினை வரவேற்கும் இலங்கை அரசு வரையறுக்கப்பட்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கலைத்திட்டம் வாயிலாக மாணவர்களிடையே உருவாக்கும் வகையில் கட்டாய கல்வியை அறிமுகம் செய்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளை நிறுவியுள்ளது. 'ஒரு பாடசாலையை திறப்பது ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்கு சமம்' என்ற அளவுக்கு பாடசாலைகள் பெறுமதி வாய்ந்த நிறுவனங்களாகும். எனவேதான் இந்த மும்மொழித் திட்டத்தினை சிற்சில பல்கலைக் கழகங்களின் ஊடாக முன்னெடுத்து வந்த அரசு அதனை கற்றலின் ஆரம்ப கட்டமான பாடசாலைகளினூடாக நடைமுறைப்படுத்தும் ஆலோசனையை முன்வைத்துள்ளது.

காலத்திற்கு காலம் புதிய கல்வி முறையினை அடையாளப்படுத்தி வரும் அரசு நாட்டின் எதிர் கால நலன் கருதி உருவாக்கிய திட்டமே மும்மொழி பாடசாலைத் திட்டமாகும். இத் திட்டம் மூன்று மொழி அறிவினையும் கொண்ட மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதன் ஊடாக எதிர் கால இலங்கையின் நிலைபேற்றை மாற்றியமைக்க உருவாக்கப்பட்டது எனலாம். இலங்கை பல மொழி, இன, கலாசாரம் கொண்ட நாடாகும். இந்த வகையில் சமுகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்பவே இந்த மும்மொழி பாடசாலைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் கடந்த அரசாங்கத்தின் கால கட்டத்தில் மும்மொழியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு இந்திய அரசு ஆதரவு வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தது. இதற்கமைவாக முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னால் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் இருவரும் இணைந்து இத்திட்டத்திற்கு கைச்சாத்திட்டனர். இந் நிகழ்வு கடந்த 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி

அலரி மாளிகையில் இடம் பெற்றது. மும்மொழி இலங்கை ஒன்றுக்கான புத்தாண்டு தேசிய திட்டம் என்பது சுதந்திரத்தின் பின் இலங்கை அரச தலைவர் ஒருவரினால் திறந்து வைக்கப்பட்ட மும்மொழித் திட்டம் பற்றிய தெளிவான திட்டமாகும். இந்த மும்மொழித் திட்ட அங்குராப்பண நிகழ்வில் டாக்டர் அப்துல் கலாம் மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் கலந்து கொண்டதுடன் எதிர்கால மும்மொழி இலங்கையினை பிரதிபளிக்கும் வகையில் இந் நிகழ்வில் மும்மொழியிலுமான நன்றியுரைகள் நிகழ்த்தப்பட்டது. இலங்கை அரசின் இத் தேசிய திட்டத்திற்கான அனைத்து விதமான உதவி களையும் இந்திய அரசாங்கம் பொறுப் பேற்றுள்ளது. அதற்கான முதற்கட்ட நடவடிக்கை யாக 80 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்திருந்தது. இவை கடந்த அரசாங்கத்தின் காலகட்டத்தில் நடைபெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2011 ம் ஆண்டு காலத்தில் யோசனைக்குட்படுத்தப்பட்டிருந்த இத்திட்டத்திற்கு இந்திய அரசு ஏராளமான உதவிகளை வழங்குவதாக வாக்குறுதி யளித்திருந்தது.

நாட்டின் தலைவர்கள் மாற்றப்பட்டாலும் அரசின் கொள்கைகளோ, எதிர்கால திட்டங்களோ எவ்விதத்திலும் மாற்றப்படமாட்டாது என்பதற் கமைவாக முன்னால் ஜனாதிபதியினால் அங்குராப்பணம் செய்யப்பட்ட இந்த 'மும்மொழிப் பாடசாலைத் திட்டம்' தற்போதைய இலங்கை அரசின் தலைவரினால் முன்னெடுத்து செல்லப்படுகின்றது. ஏற்கனவே இந்திய அரசுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணைவாக இலங்கைக்கான தூதுவர் தரஞ்ஜித் சிங் சிந்து மற்றும் இலங்கை கல்வியமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி போன்றோர் இத் திட்டத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். புதிய அரசாங்கத்தின் பின்னர் இத் திட்டத்தின் முதற்கட்ட பணியாக பொலன்னறுவை கதுறுவெல பிரதேசத்தில் மும்மொழி பாடசாலை ஒன்றுக்கான கட்டுமான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன தலைமையில் கடந்த 2017ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெற்றது. இப்பாடசாலையில் தரம் 6 தொடக்கம் உயர் தரம் வரையிலாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது இரு மாடிக் கட்டிடங்களாகவும், மாணவர் விடுதி, ஆசிரியர் விடுதி, நிர்வாக கட்டிடம், சுகாதார வசதி, ஆய்வு கூடம் போன்றன நிர்மாணிக்கப்படவுள்ளது. மேலும் பொலன்னறுவைக்கு அண்மைய மாவட்டங்களான அநுராதபுரம், திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களில் பல்லின மும்மொழி பாடசாலையின் தேவையை நிறைவு செய்தல், போட்டித் தன்மையுடைய சமுகப் பொருளாதார உலகிற்கு பொருத்தமான தேசிய நல்லிணக்கம், சமுக ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் உயர் அறிவுடைய பூரணமான மாணவர் சமுதாயத்தை உருவாக்கல் போன்ற ஏராளமான திட்டங்கள் இதனூடாக முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் தற்கால செய்திகளின்படி அத்திட்டத்திற்கான இந்திய அரசின் நிதி உதவி 300 மில்லியன் எனவும் அறியப்படுகின்றது. அதே நேரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் இப் பாடசாலைக்கு உள்வாங்கப்படவுள்ளதுடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகள் போதிக்கப்படவுள்ளது.


பல்லின மக்கள் வாழுகின்ற நாடான இலங்கை யில் இவ்வாறான மும்மொழிப் பாடசாலைத் திட்டம் உருவாக்கப்படுவது காலத்தின் தேவை எனலாம். இதனூடாக மாணவர் சமுதாயம் சிறந்த மொழியாற்றலை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. மாணவர்கள் எதிர் காலத்தினை நிர்ணயிக்கின்ற முக்கிய ஆயுதங்களாவர். இன்னும் இந்த மும்மொழித் திட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் சிறந்ததொரு அபிப்பிராயம் காணப்படுகின்றது. இலங்கை பல்லின மக்கள் வாழுகின்ற நாடாக காணப்படுகின்ற போதிலும் பாடசாலைகள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என பாகுபடுத்தப் பட்டுள்ளதை காணலாம். பெரும் பாலும் இந்த பிரிவினை மொழியினை அடிப்படை யாக கொண்டே காணப்படுகின்றது. இத்தகைய பாடசாலைகளின் பிரிவினைகள்தான் மதங்களுக் கிடையிலான புரிந்துணர்வுக்கு தடையாக அமைந்துள்ளது எனலாம். அத்துடன் சமுகங் களுக்கிடையிலான பிரிவினை மொழியறிவு இன்மையால் ஏற்பட்டுள்ளது எனவும் கருதலாம். எனவே மும்மொழியிலான பாடசாலைகள் உருவாக்கப்படுகின்ற நேரம் மொழி வேறுபாடற்ற ஒரே மாணவர் சமுதாயம் உருவாகலாம்.

மும்மொழியின் பாடசாலைகளின் ஊடாக பல்லின சமுகங்களின் ஒருமைப்பாடு கட்டியெழுப்பப்படுவதுடன் நாட்டின் அபிவிருத்திக்கான ஒட்டுமொத்தமான பயணத்தினை தொடர முடியும். பாடசாலைகளில் ஏற்படவுள்ள இந்த இனங்களுக்கிடையிலான உறவு ஒவ்வொரு சமுகத்தினதும் கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை பரிமாற்றிக்கொள்ள உதவுவதுடன் நாட்டின் எதிர் கால அபிவிருத்தி தொடர்பான அத்திவாரமாகவும் விளங்குகின்றது. சிறுபாண்மை, பெரும்பாண்மை என மொழியினால் பிளவுபட்ட சமுதாயம் மறைந்து 'யாவரும் இலங்கையர் மும்மொழியில் முதற்தரம்' என்ற சமுதாய உருவாக்கத்திற்கான ஏற்பாடாகவும் இந்த மும்மொழிக் கொள்கை விளங்குகின்றது. இனிவரும் இலங்கையில் மொழியினால் பிளவுபட்ட சமுதாயம் ஒன்றே இல்லாது போகலாம் என்ற எதிர்வு கூறலும் காணப்படுகிள்றது. அதே நேரம் இலங்கை தொடர்பான மனப்பதிவினை மாற்றியமைக்கக் கூடிய சக்தி வாய்ந்த ஆயுதமாக இந்த மும்மொழித் திட்டத்தினைக் கூறலாம். இதனால் உலகளாவிய ரீதியில் அனைத்து மக்களுடனான உறவு கட்டியெழுப்பப்படும் நேரம் புரிந்துணர்வு, ஒருமைப்பாடும் கொண்ட சமுதாயத்தை எதிர்பார்க்கலாம். எனவே இவ்வாறான அரசின் வேறுபட்ட திட்டங்களினால் முரண்பாடுகள் அற்ற ஒருமைப்பாடும் ஒற்றுமையும் கொண்ட மாணவர் சமுதாயத்தினை வளர்ப்பதனூடாக எதிர்கால இலங்கையின் நிலைபேற்றை வலுவானதாக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. எது எவ்வாறாயினும் 'யாவரும் இலங்கையர்' என்ற வகையில் அரசின் இத்தகைய புத்தாக்க செயற்திட்டங்களுக்களுக்கு எம்மாலான அர்ப்பணிப்பினை வழங்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

**உசாத்துணைகள் :**


1. கருணாகரன், கே. (1997), 'மொழியியல்', குமரன் பதிப்பகம், கலிபோர்னியா பல்கலைக்கழகம்.
2. காசியப்பன் (2011), 'மொழி என்றால் என்ன? Retrieved from http://www.kashyapan.Blogspot.com, Accessed 10.05.2018.
3. பத்மநாதன் கலாவல்லி, (2015), 'இலங்கையில் ஒரு மொழியம்' (1997), 'மொழியியல்', Retrieved from http://www.geotamil.com, Accessed 17.04.2018

# எம்.எச்.எம். அஷ்ரபின் கனவுகளை நனவாக்க வேண்டிய தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



**அஷ்ஷேய்க் ஸஹீம் கமால்** (இர்பானி) B.A.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அந்நஹ்லா அறபு இஸ்லாமிய கலாபீடம்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் எம்.எச்.எம். அஷ்ரப் என்ற ஆளுமைக்கு தனித்துவமான இடம் உண்டு. அவர் உலகை விட்டு மறைந்திருந்தாலும் அவருடைய சேவைகளும், அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் அவருடைய சிறந்த வாழ்க்கைக்கு சான்று பகர்கிறது. இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் தனித்துவமானதோர் முஸ்லிம் அரசியலை உருவாக்கியதும், பெரும்பான்மை மக்களிடம் கூட இவர் சிறந்த ஒரு ஜனாதிபதியாக வரலாம் என்ற கருத்து பேசப்பட்டதும் அவரது தனித்துவமான ஆளுமைகளுக்கு சான்று பகர்கிறது. அதே போன்றுதான் கல்வித் துறையிலும் இன ஐக்கியத்திலும் அவரது சேவைகள் காத்திரமானதாக அமைந்துள்ளது.

அஸ்ரபின் திடீர் மரணத்தின் பிற்பாடு பாரிய அரசியல் தலைமைத்துவ இடைவெளியும், முஸ்லிம் சமூகம்சார் இன்னும் சில மந்த நிலைகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளது.

எம்.எச்.எம். அஷ்ரப் அவருடைய சிந்தனைகள் எவ்வாறிருந்தது. அவருடைய செயற்பாடுகள் எதனை மையப்படுத்தி அமைந்தன. இந்த நாடு தொடர்பாக அவருடைய நிலைப்பாடு எவ்வாறு இருந்தது, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்காலம், கல்வி தொடர்பாக எதனை எதிர்பார்த்தார், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாக அவரது நிலைப்பாடு என்ன? தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு எதனை சாதிக்க முனைந்தார் என்பதனை அறிய வேண்டும். ஆக அஸ்ரபின் அன்றைய சிந்தனையையும் அதன் இன்றைய தேவைப்பாடுகளையும், நடைமுறை சாத்தியங்கள் குறித்தும் இவ்வாக்கம் பேச முனைகின்றது.

### இன நல்லுறவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகமும்...

எம்.எச்.எம். அஷ்ரபின் கனவுகளில் முதன்மையானதாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தைக் குறிப்பிடலாம். இன்று இப்பல்கலைக் கழகம் முஸ்லிம் சமூகத்திற்கும், இந்த நாட்டிற்கும் ஆற்றி வரும் பங்களிப்பு மகத்தானது. அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் மேற்கொண்ட முன்னால் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார்கள் 'நான் வழங்கிய பல்கலைக்கழகம் மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு வேகமாக முன்னேறியிருப்பது என்னையே ஆச்சரியப்படுத்துகின்றது' என கூறிப்பிட்டார். உண்மையில் இக்கூற்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது.

இந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை எம் எச் எம் அஷ்ரப் உருவாக்க விளைந்ததனை ஆய்வு செய்யும் போது பிரதானமாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

1. தேசிய சகவாழ்வு
2. முஸ்லிம்களின் கல்வி எழுச்சி.

1980 ஆம் 90 ஆம் ஆண்டு காலப் பகுதிகள் இலங்கையில் இனவாதம் உச்ச கட்டத்தினை அடைந்திருந்த காலமாகும். சிங்கள-தமிழ் இன மொழி முரண்பாடு உச்ச கட்டத்தினை

அடைந்திருந்த காலமாகும். விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தீவிரம் பெற்று வந்த காலம். இன்னும் ஒரு வார்த்தையில் சொல்வதானால் இலங்கை சுடுகாடாய் மாறும் என அனைவரும் அச்சப்பட்ட காலம். பல்லின தேசங்களாய் வாழ்ந்த நாடுகள் பற்றியெறிந்த காலம். மதவாதம், இனவாதம் தலைக்கேறிய காலம். இப்படியானதோர் பின்னணியில்தான் தேசிய ஒற்றுமை, சகவாழ்விற்கான அடித்தளமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை எம்.எச்.எம். அஷ்ரப் கனவு கண்டார். ஒரு பல்கலைக்கழகம் எனும் போது பல இனத்தவர் கள், மதத்தவர்கள், பல மொழி பேசக்கூடிய வர்கள் என பலரும் வருவார் என்பதனை அறிந்திருந்தார். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பன்மைத்துவ சூழலில் பொதுமைப் படுத்தப்பட்ட தூரநோக்கு சிந்தனை கொண்ட, புரிந்துணர்வுடன் வாழக்கூடிய, இன ஐக்கியத் திற்கு சான்றுபகரக் கூடிய உன்னதமானதோர் மாணவ சமூகத்தை உருவாக்குவதன் மூலம் தேசிய சக வாழ்விற்கு வித்திட்டு புதியதோர் நாகரீகத்தினை உருவாக்க முனைந்தார்.

அதனை எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களே ஒரு பாடலில் இவ்வாறு சொல்கின்றார்.

பல்கலை வேந்தர்கள்
பகலிரவாய் வலம் வருவார்.
வெல்லமெனக் காதில் விழும்
வேத குர்ஆன் ஓதும் ஒலி,
கோயில் மணியோசை
நெஞ்சை நிறைக்கும்
தேவனருள் தவழ்ந்து
வரும் ஆலயங்கள்
தித்திக்கும் தீகாவப்பி
புத்தபிரான் புகழ் பரப்பும்

இவ்வாறு பன்மைத்தவ சூழலில் இன ஐக்கியத்திற்கு சான்று பகர்ந்து தேசிய சக வாழ்விற்கு பங்களிப்பு செய்கின்ற புரிந்துணர் வையும், சக வாழ்வையும் கட்டியெழுப்பி புதியதோர் நாகரீகத்தினை படைக்கவே எம்.எச்.எம். அஷ்ரப் முனைந்தார்.

அந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் என்பவற்றில் தலை தூக்கியிருந்த இனவாதம், முஸ்லிம் மாணவர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் என்பன தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அவசியத் தினை உணர்த்தியது. எம்.எச்.எம். அஷ்ரபின் அரசியல் பிரவேசமும் தென்கிழக்குப் பல்கலைக் கழக ஸ்தாபக உபவேந்தர் காதர் அவர்களின் அர்ப்பணிப்பும் துணை நின்றது.

எம்.எச்.எம். அஷ்ரபின் கனவுப் பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என ஆசைப்பட்டார் என்பதனைப் பார்த்தோம். இன்றைய நடப்பு பல்கலைக்கழகம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை ஆராய்வோம்.

இன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 6 பீடங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. முஸ்லிம்கள், பௌத்தர்கள், இந்துகள், கிறிஸ்தவர்கள் என பலரும் வருவதனை காண்கின்றோம். இவ்வாறு பன்மைத்துவ சூழல் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள நிலையில் எம்.எச்.எம்.அஸ்ரபின் தேசிய சக வாழ்விற்கான கனவு நனவாக்கப்பட்டுள்ளதா? பல்கலைக்கழகத் திற்கு பல மதத்தவர்களும் இனத்தவர்களும் வந்தாலும் கூட அவர்களுக்கிடையான இடைவெளி நீக்கப்படவில்லை. ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது இன்னும் முழுமையாக நீங்கவில்லையென்றே சொல்ல வேண்டும்.

இங்கு வருகின்ற சில மாணவர்களுடைய முறையற்ற செயற்பாடுகள், ஆர்ப்பாட்டங்கள், கேளிக்கூத்துகள் என்பன பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்பது உண்மையே. இங்கு வருகினற் சிங்கள மாணவர்கள் பலர் தீய சக்திகளால் வழிநடாத்தப் படுகின்றார்கள். இப்பல்கலைக்கழகம் தொடர் பாக பிழையான புரிதல் அவர்களுக்கு கொடுக் கப்படுகின்றது. அதனையே அவர்களுடைய செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும் அனைத்து சவால்களையும் வெற்றி கொண்டு வீர நடை போட வேண்டிய தேவைப்பாடு எமக்குண்டு. இங்கு வருகின்ற சிங்களவர்கள், தமிழர்கள் எமது பல்கலைக்கழக மாணவர்கள் எமது சகோதரர்கள் என்ற உணர்வு எம்மிடம் இருக்க வேண்டும். உண்மையான, நிலையான

அபிவிருத்தி அனைத்து கரங்களும் இணைவதினூடாகவே சாத்தியமாகும். இவர்கள் தொடர்பாக நாம் முன்னெடுத்த ஆக்கபூர்வமான முன்னெடுப்பு என்ன என்பதனை சிந்திக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் மாணவர் களுக்கிடையே மத ரீதியான இடைவெளி யிருப்பது உண்மையே. மொழி ரீதியான சிக்கல்களும் தொடர்வது பாரிய சவாலே.

எத்தகைய பாரிய சவால்கள் இருந்தாலும் அனைத்தையும் வெற்றி கொண்டு எம்.எச்.எம். அஷ்ரபின் கனவுப் பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதே எமது பணி. அதனை எவ்வாறு செய்யலாம்?

வாருங்கள் அதனை அஷ்ரபிடமே கேட்போம்.

அஷ்ரப் இப்பல்கலைக்கழகத்தில் பிரதானமாக இரு விடயங்களை எதிர்பார்த்தார். பல்கலைக் கழகத்தில் அனைத்து விரிவுரைகளும் ஆங்கிலத் தில் நடைபெற வேண்டும். ஆங்கிலப் புலமையில் பாண்டித்தியம் பெற்றவர்களாக மாணவர்கள் வர வேண்டும். அதன் மூலமாக சிங்கள-தமிழ் மொழியிற்கிடையான இடைவெளியை இல்லாமற் செய்யலாம் என நம்பினார். மாணவர்களிற்கு இடையான இடைவெளிகளை இல்லாமற் செய்வதினூடாக சகோதரத்துவத்தை வளர்க்க முற்பட்டார்.

இன்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு மத்தியில் ஆங்கில புலமையை விருத்தி செய்வதற்காக **ELTU** என தனியானதோர் **Unit** ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த Unit இன் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகள் வரவேற்கத் தக்கது. அடுத்து அஷ்ரப் அவர்கள் இப் பல்கலைக்கழகம் தொழிநுட்பத் துறையில் உச்ச கட்டத்தினை அடைய வேண்டும் என எதிர்பார்த்தார். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் நாஜிம் அவர்களால் தொழிநுட்ப பீடம் திறந்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆக அஷ்ரப் கனவு பல்கலைக்கழகத்தில் எதிர்பார்த்த இரு விடயங்களும் நடப்பு பல்கலைக்கழகத்தில் அமையப் பெற்றுள்ளது.

இங்கு மத ரீதியான பரந்த கலந்துரையாடல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். பிற மதம் தொடர்பான ஐயங்கள் கேட்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழகம் தொடர்பான சரியான புரிதல்களை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். இது எங்களுடைய பல்கலைக்கழகம் இதனை கட்டியெழுப்புவது எமது கடமை என்பதனை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். பல்கலைக்கழகம் தொடர்பாக மாணவர்களிடம் உள்ள சந்தே கங்கள் நீக்கப்பட வேண்டும். தப்பபிப்பிராயங்கள் களையப்பட வேண்டும். தூய எண்ணங்கள் விதைக்கப்பட வேண்டும். பல்லைக்கழக உபவேந்தர்களும், அவரை சார்ந்தவர்களும் மாத்திரம் எதனையும் கட்டியெழுப்ப முடியாது. மாணவர்களையும் தமது சிந்தனை நீரோட் டத்தில் கலக்கச் செய்ய வேண்டும். மாணவர்கள் ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் பரவலாக்கப்பட வேண்டும். ஆய்வு கலாசாரம் ஊக்குவிக்கப்பட வேண்டும். மாணவர்களில் ஆய்வாளர்கள் இனங் காணப்பட்டு ஊக்குவிக் கப்பட வேண்டும். இவ்வாறு ஒரே சிந்தனையின் கீழ் மாணவர்கள் வழிநடாத்தப்படுவதினூடாக தீய சக்திகளிலிருந்தும் நெறிபிறழ்வுகளிலிருந்தும் எமது மாணவர் சமூகத்தினைப் பாதுகாக்கலாம். முறையான வழிகாட்டுதல் வழங்கப்படாத பட்சத்தில்தான் தவறான வழிகாட்டுதல்கள் அவர்களை சென்றடைகின்றது என்பதனை மறந்து விடக் கூடாது.

இவ்வாறான ஆக்கபூர்வமான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டால் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தை அஷ்ரப் கண்ட தேசிய சகவாழ் விற்கான முன்னோடியாக முன்னெடுக்கலாம்.

# இலங்கையில் போதைப்பொருள் பாவனை

**BP. Sifara, Anuradapura (Vice President of SRF)**

போதைப்பொருள் பாவனை முக்கிய சமூகப் பிரச்சினையாகக் காணப்படுவதுடன், நடைமுறையில் இளைஞர்கள் அதிகமாக போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. உலக சுகாதார நிறுவன அறிக்கைகளுக்கு ஏற்ப இன்று இளைஞர்கள் அதிகமாக போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருள் பாவனையானது அதனை உள்வாங்குவோரை மட்டுமன்றி முழுச்சமூகத்தையும் பீதிக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கையாக காணப்படுவதை நாளுக்கு நாள் அதிகரிக்கும் சமூகப் பிரச்சினைகள் நிரூபிக்கின்றன. இதனால் சமூக விழுமியங்கள் தகர்த்தெறியப்பட்டு ஒழுக்க சீர்கேடுகள் உருவாவதற்கு போதைப்பொருள் பாவனையானது காரணமாக அமைகின்றது. இது பண்பாட்டுச் சீரழிவினை ஏற்படுத்துவதுடன் சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிக்க ஓர் ஊக்குவிப்புக் காரணியாகவும் விளங்குகின்றது.

போதைப் பொருள் எனப்படுவது, இரசாயனப்பதார்த்தங்களை உள்ளடக்கிய ஒரு கலவை யாகும். இது சட்டரீதியாக விலக்கப்பட்டுக் காணப்படுவதுடன், உடலுக்குத் தீங்கு விளைவிக்கத்தக்கதுமாகும். இதன் பாவனையானது இதனைப் பாவிப்பதற்கு மட்டுமன்றி அவரைச் சூழவுள்ள அங்கத்தவர்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

போதைப் பொருள் பாவனை தனி மனிதர்களிடத்தில் அறியாமை, மன அழுத்தம் மற்றும் மனச் சோர்வு போன்ற இன்னோரன்ன தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. குறிப்பிட்ட ஒரு நபர் போதைப்பொருளுக்கு அடிமையானதுடன் அதிலிருந்து மீளுதல் கடினமான காரியம் எனவும் கூறப்படுகின்றது. போதைப்பொருள் சொற்ப நேரத்திற்கு இன்பத்தைத் தரக்கூடியது என்ற காரணத்தினால் அது பாவிக்கப்படுவதாக பாவிப்போர் கூறுகின்றனர். எனினும் அவை மனிதனை இன்பத்தில் ஆழ்த்தி துன்பத்தில் தள்ளி விடுகின்ற பண்பினை உடையன. மேலும் போதைப் பொருளுக்கு அடிமையாகிய ஒருவர் உடலியல் ரீதியாக அல்லது உளவியல் ரீதியாக குறிப்பிட்ட போதைப்பொருட்களுக்கு தொடர்ச்சியாக உட்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் விளங்குவது யாதெனில் குறிப்பிட்ட ஒரு நபர் ஏதேனும் ஒரு போதைப் பொருளுக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டாராயின் அவருக்கு குறித்த போதைப்பொருளின்றி வாழ முடியாத அளவிற்கு தள்ளப்படுகின்ற அவல நிலை உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது. இதுவே போதைப்பொருளுக்கு அடிமையாதல் எனக்கருதப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில் இலங்கையில் போதைப்பொருள் பாவனை மிகவும் கவனம் செலுத்த வேண்டிய விதத்தில் அதிகரித்துச்செல்கின்றது. இலங்கையானது போதைப்பொருள் பாவனை அதிகம் உள்ள நாடுகளில் ஒன்றாக கருதப்படுவதுடன் வெளிநாட்டில் உற்பத்தி செய்யும் போதைப்பொருட்களை கொள்வனவு செய்வதிலும் வெளிநாடுகளில் அவற்றைப் பகிர்ந்து விற்பனை செய்வதிலும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உலக சுகாதார அமைப்பு) இதனால் மேலை நாடுகளில் உற்பத்தி

செய்கின்ற நச்சுத்தன்மை மிக்க போதைப்பொருட்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப் படுவதற்குரிய சூழ்நிலை உருவானது. இதனால் பலர் போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதன் பாவனை தொடர்பாக கைது செய்யப்பட்டனர். பின்வரும் அட்டவணைகள் 2012 தொடக்கம் 2016 வரை பல்வேறு வகைப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டோர் தொகையை மாவட்ட அடிப்படையில் காட்டுகிறன.

**மத்திய மாகாணம்**

அட்டவனை 1 – கண்டி மாவட்டம்

| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 855 | 74.0 | 1011 | 57.6 | 1692 | 74.4 | 1841 | 58.6 | 2614 | 58.4 |
| ஹெறோயின் (Heroin) | 304 | 26.0 | 745 | 42.4 | 582 | 25.6 | 500 | 15.9 | 702 | 15.7 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 802 | 25.5 | 1162 | 25.9 |
| மொத்தம் | 1159 | 100.0 | 1756 | 100.0 | 2274 | 100.0 | 3143 | 100.0 | 4478 | 100.0 |

அட்டவணை 2 – மாத்தளை மாவட்டம்

| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 502 | 85.0 | 742 | 81.9 | 1254 | 84.6 | 1289 | 75.5 | 1169 | 7008 |
| ஹெறோயின் (Heroin) | 88 | 15.0 | 164 | 18.1 | 228 | 15.4 | 222 | 13.0 | 241 | 14.6 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 196 | 11.5 | 242 | 14.6 |
| மொத்தம் | 590 | 100.0 | 906 | 100.0 | 1482 | 100.0 | 1707 | 100.0 | 1652 | 100.0 |

அட்டவணை 3 – நுவரெலியா மாவட்டம்

| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 253 | 97.0 | 314 | 95.4 | 538 | 93.1 | 809 | 53.0 | 700 | 46.4 |
| ஹெறோயின் (Heroin) | 7 | 3.0 | 15 | 4.6 | 39 | 6.7 | 23 | 1.5 | 21 | 1.4 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 1 | .0 | 0 | .0 | 1 | 0.2 | 693 | 45.5 | 789 | 52.2 |
| மொத்தம் | 261 | 100.0 | 329 | 100.0 | 578 | 100.0 | 1525 | 100.0 | 1510 | 100.0 |

## வட மத்திய மாகாணம்

| அட்டவணை 4 – அநுராதபுர மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 103 | 77.0 | 1524 | 80.3 | 1324 | 77.6 | 1766 | 83.3 | 1247 | 77.1 |
| ஹெறோயின் (Heroin) | 150 | 23.0 | 373 | 19.7 | 383 | 22.4 | 218 | 10.3 | 287 | 17.7 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 1 | .0 | 0 | .0 | 0 | .0 | 137 | 6.4 | 84 | 5.2 |
| மொத்தம் | 653 | 100.0 | 1897 | 100.0.0 | 1707 | 100.0 | 2121 | 100.0 | 1618 | 100.0 |

| அட்டவணை 5 – பொலன்னறுவை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 493 | 97.0 | 736 | 93.5 | 521 | 94.2 | 804 | 88.0 | 808 | 88.2 |
| ஹெறோயின் (Heroin) | 15 | 3.0 | 51 | 6.5 | 32 | 5.8 | 77 | 8.4 | 75 | 8.2 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 33 | 3.6 | 33 | 3.6 |
| மொத்தம் | 508 | 100.0 | 787 | 100.0 | 553 | 100.0 | 914 | 100.0 | 916 | 100.0 |

## வடமேல் மாகாணம்

| அட்டவணை 6 – குருநாகல் மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 1320 | 88.0 | 1475 | 73.4 | 1695 | 19.2 | 2267 | 69.1 | 2129 | 69.3 |
| ஹெறோயின் (Heroin) | 177 | 12.0 | 535 | 26.6 | 764 | 30.8 | 704 | 21.5 | 739 | 24 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 1 | .0 | 0 | .0 | 0 | .0 | 309 | 9.4 | 206 | 6.7 |
| மொத்தம் | 1498 | 100.0 | 2010 | 100.0 | 2449 | 100.0 | 3280 | 100.0 | 3074 | 100.0 |

| அட்டவணை 7 – புத்தளம் மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 480 | 83.2 | 828 | 73.3 | 1056 | 74.4 | 1469 | 79.5 | 1765 | 77.9 |
| ஹெறோயின் (Heroin) | 97 | 16.8 | 301 | 26.7 | 363 | 25.6 | 304 | 16.5 | 405 | 17.9 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 74 | 4.0 | 96 | 4.2 |
| மொத்தம் | 577 | 100.0 | 1129 | 100.0 | 1719 | 100.0 | 1847 | 100.0 | 2266 | 100.0 |

வட மாகாணம்

| அட்டவணை 8 – யாழ்ப்பாண மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 54 | 75.0 | 41 | 95.3 | 122 | 90.4 | 178 | 76.4 | 274 | 87.3 |
| ஹெறோயின் (Heroin) | 18 | 25.0 | 2 | 4.7 | 8 | 5.9 | 7 | 3.4 | 15 | 4.8 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 1 | 0.3 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 5 | 3.7 | 21 | 10.2 | 24 | 7.6 |
| மொத்தம் | 72 | 100.0 | 43 | 100.0 | 135 | 100.0 | 206 | 100.0 | 314 | 100.0 |

| அட்டவணை 9 - மன்னார் மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 35 | 81.4 | 167 | 85.6 | 167 | 90.8 | 153 | 73.9 | 150 | 83.3 |
| ஹெறோயின் (Heroin) | 8 | 18.6 | 28 | 14.4 | 12 | 6.5 | 23 | 11.1 | 12 | 6.7 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 1 | 0.5 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 5 | 2.7 | 30 | 14.5 | 18 | 10 |
| மொத்தம் | 43 | 100.0 | 195 | 100.0 | 184 | 100.0 | 207 | 100.0 | 180 | 100.0 |

| அட்டவணை 10 – முல்லைதீவு மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 4 | 100.0 | 15 | 79.0 | 40 | 90.9 | 53 | 100.0 | 83 | 98.8 |
| ஹெறோயின் (Heroin) | 0 | .0 | 4 | 21.0 | 0 | .0 | 0 | .0 | 1 | 1.2 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 4 | 9.1 | 0 | .0 | 0 | .0 |
| மொத்தம் | 4 | 100.0 | 19 | 100.0 | 44 | 100.0 | 53 | 100.0 | 84 | 100.0 |

| அட்டவணை 11 – வவுனியா மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 67 | 89.3 | 244 | 91.4 | 461 | 88.3 | 400 | 89.7 | 366 | 88 |
| ஹெறோயின் (Heroin) | 8 | 10.7 | 23 | 8.6 | 23 | 4.4 | 11 | 2.5 | 32 | 7.7 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 38 | 7.3 | 35 | 7.8 | 18 | 4.3 |
| மொத்தம் | 75 | 100.0 | 267 | 100.0 | 522 | 100.0 | 446 | 100.0 | 416 | 100.0 |

| அட்டவணை 12 – கிளிநொச்சி மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | - | - | - | - | 47 | 97.9 | 70 | 94.6 | 113 | 90.4 |
| ஹெறோயின் (Heroin) | - | - | - | - | 0 | 0 | 1 | 1.4 | 0 | .0 |
| அபின் (Opium) | - | - | - | - | 0 | .0 | 0 | 0 | 0 | .0 |
| ஏனையவை | - | - | - | - | 1 | 2.1 | 3 | 4.0 | 12 | 9.6 |
| மொத்தம் | - | - | - | - | 48 | 100.0 | 74 | 100.0 | 125 | 100.0 |

## சப்ரகமுவ மாகாணம்

| அட்டவணை 13 – கேகாலை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 303 | 89.4 | 386 | 82.5 | 314 | 73.4 | 561 | 83.0 | 396 | 72.7 |
| ஹெறோயின் (Heroin) | 36 | 10.6 | 82 | 17.5 | 114 | 26.6 | 103 | 15.2 | 129 | 23.6 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 12 | 1.8 | 20 | 3.7 |
| மொத்தம் | 339 | 100.0 | 468 | 100.0 | 428 | 100.0 | 676 | 100.0 | 545 | 100.0 |

| அட்டவணை 14 - இரத்தினபுரி மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 856 | 86.2 | 1346 | 92.5 | 1759 | 82.7 | 2145 | 75.7 | 1473 | 72.9 |
| ஹெறோயின் (Heroin) | 137 | 13.8 | 109 | 7.5 | 369 | 17.3 | 478 | 16.9 | 365 | 18.1 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 211 | 7.4 | 182 | 9.0 |
| மொத்தம் | 993 | 100.0 | 1455 | 100.0 | 2128 | 100.0 | 2834 | 100.0 | 2020 | 100.0 |

## தென் மாகாணம்

| அட்டவணை 15 – காலி மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 1107 | 62.0 | 1502 | 58.8 | 1737 | 55.1 | 1946 | 69.2 | 1622 | 60.0 |
| ஹெறோயின் (Heroin) | 678 | 38.0 | 1052 | 41.2 | 1413 | 44.8 | 839 | 29.9 | 1018 | 36.6 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 3 | 0.1 | 26 | 0.9 | 95 | 3.4 |

| அட்டவணை 16 - ஹம்பாந்தோட்டை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 1800 | 95.7 | 2056 | 92.2 | 2343 | 89.9 | 1611 | 78.3 | 1977 | 87.8 |
| ஹெறோயின் (Heroin) | 81 | 4.3 | 173 | 7.8 | 263 | 10.1 | 437 | 21.2 | 257 | 11.4 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 10 | 0.5 | 19 | 0.8 |
| மொத்தம் | 1881 | 100.0 | 2229 | 100.0 | 2606 | 100.0 | 2058 | 100.0 | 2253 | 100.0 |

| அட்டவணை 17 – மாத்தறை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 513 | 78.9 | 748 | 75.8 | 798 | 74.6 | 2918 | 92.3 | 1290 | 71.0 |
| ஹெறோயின் (Heroin) | 136 | 20.9 | 238 | 24.1 | 271 | 25.4 | 172 | 5.5 | 490 | 27.0 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 1 | 0.2 | 1 | 0.1 | 0 | .0 | 70 | 2.2 | 36 | 2.0 |
| மொத்தம் | 650 | 100.0 | 987 | 100.0 | 1069 | 100.0 | 3160 | 100.0 | 1816 | 100.0 |

**ஊவா மாகாணம்**

| அட்டவணை 18 – பதுள்ளை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 609 | 91.9 | 1063 | 87.9 | 996 | 91.5 | 1372 | 87.8 | 1374 | 81.5 |
| ஹெறோயின் (Heroin) | 54 | 8.1 | 146 | 12.1 | 93 | 8.5 | 80 | 5.1 | 161 | 9.5 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 110 | 7.1 | 151 | 9.0 |
| மொத்தம் | 663 | 100.0 | 1209 | 100.0 | 1089 | 100.0 | 1562 | 100.0 | 1686 | 100.0 |

| அட்டவணை 19 – மொனராகலை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 314 | 99.0 | 2092 | 99.7 | 1726 | 98.0 | 1800 | 97.2 | 1291 | 98.2 |
| ஹெறோயின் (Heroin) | 3 | 1.0 | 7 | 0.3 | 36 | 2.0 | 39 | 2.1 | 21 | 1.6 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 13 | 0.7 | 3 | 0.2 |
| மொத்தம் | 317 | 100.0 | 2099 | 100.0 | 1762 | 100.0 | 1852 | 100.0 | 1315 | 100.0 |

## மேல் மாகாணம்

| அட்டவணை 20 – கொழும்பு மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 15516 | 54.0 | 17267 | 54.3 | 16215 | 55.4 | 18501 | 52.0 | 16785 | 49.7 |
| ஹெறோயின் (Heroin) | 13332 | 46.0 | 14543 | 45.7 | 13061 | 44.6 | 16846 | 47.4 | 16770 | 49.7 |
| அபின் (Opium) | 0 | .0 | 2 | .0 | 0 | .0 | 2 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 19 | .0 | 4 | .0 | 6 | .0 | 223 | 0.6 | 220 | 0.6 |
| மொத்தம் | 28867 | 100.0 | 31816 | 100.0 | 29282 | 100.0 | 35572 | 100.0 | 33775 | 100.0 |

| அட்டவணை 21 - கம்பஹா மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 2269 | 76.0 | 4198 | 50.8 | 4699 | 52.4 | 5945 | 53.1 | 5747 | 53.7 |
| ஹெறோயின் (Heroin) | 706 | 24.0 | 4073 | 49.2 | 4263 | 47.6 | 4671 | 41.8 | 4587 | 42.9 |
| அபின் (Opium) | 1 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 1 | .0 | 1 | .0 | 0 | .0 | 569 | 5.1 | 369 | 3.4 |
| மொத்தம் | 2977 | 100.0 | 8272 | 100.0 | 8962 | 100.0 | 11185 | 100.0 | 10703 | 100.0 |

| அட்டவணை 22 – களுத்துறை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 1321 | 64.0 | 1411 | 59.9 | 1676 | 63.4 | 1768 | 65.0 | 2078 | 61.8 |
| ஹெறோயின் (Heroin) | 746 | 36.0 | 944 | 40.1 | 968 | 36.6 | 755 | 27.8 | 1074 | 31.9 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 195 | 7.2 | 212 | 6.3 |
| மொத்தம் | 2067 | 100.0 | 2355 | 100.0 | 2644 | 100.0 | 2718 | 100.0 | 3364 | 100.0 |

## கிழக்கு மாகாணம்

| அட்டவணை 23 – அம்பாறை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | % | N | % | N | % |
| கன்சா (Cannabis) | 1099 | 99.4 | 1385 | 99.2 | 1119 | 99.6 | 929 | 96.8 | 1032 | 93.0 |
| ஹெறோயின் (Heroin) | 6 | 0.5 | 10 | 0.7 | 4 | 0.3 | 3 | 0.3 | 20 | 1.8 |
| அபின் (Opium) | 1 | 0.1 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 3 | 0.2 |
| ஏனையவை | 0 | .0 | 2 | 0.1 | 1 | 0.1 | 28 | 2.9 | 55 | 5.0 |
| மொத்தம் | 1106 | 100.0 | 1397 | 100.0 | 1124 | 100.0 | 960 | 100.0 | 1110 | 100.0 |

| அட்டவணை 24 – மட்டக்களப்பு மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | N | % | N | % | N |
| கன்சா (Cannabis) | 285 | 99.2 | 792 | 99.0 | 635 | 96.2 | 728 | 91.5 | 629 | 90.4 |
| ஹெறோயின் (Heroin) | 1 | 0.4 | 5 | 0.6 | 25 | 3.8 | 12 | 1.5 | 11 | 1.6 |
| அபின் (Opium) | 1 | 0.4 | 4 | 0.4 | 0 | .0 | 1 | 0.1 | 0 | .0 |
| ஏனையவை | 1 | .0 | 0 | .0 | 0 | .0 | 55 | 6.9 | 56 | 8.0 |
| மொத்தம் | 288 | 100.0 | 801 | 100.0 | 660 | 100.0 | 796 | 100.0 | 696 | 100.0 |

| அட்டவணை 25 – திருகோணமலை மாவட்டம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதைப்பொருள் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| | N | % | N | % | N | N | % | N | % | N |
| கன்சா (Cannabis) | 535 | 96.0 | 976 | 95.9 | 749 | 96.5 | 753 | 97.2 | 625 | 92.3 |
| ஹெறோயின் (Heroin) | 21 | 4.0 | 42 | 4.1 | 27 | 3.5 | 14 | 1.8 | 29 | 4.3 |
| அபின் (Opium) | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| ஏனையவை | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 8 | 1.0 | 23 | 3.4 |
| மொத்தம் | 556 | 100.0 | 1018 | 100.0 | 776 | 100.0 | 725 | 100.0 | 677 | 100.0 |

**National Dangerous Drugs Control Board (NDDCB)**

மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணைகளை நோக்குகையில் 2012 தொடக்கம் 2016 வரை இலங்கையில் பல்வேறு வகைப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டோரின் தொகையானது மொனராகலை, அம்பாறை, மட்டகளப்பு, ஹம்பாந்தோட்டை, பொலனறுவை, பதுளை போன்ற மாவட்டங்களில் அதிகமாக காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

| அட்டவணை 26 – வயது அடிப்படையில் கஞ்சா பாவனையில் கைது செய்யப்பட்டோர் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| வயது | N | % | N | % | N | N | % | N | % | N |
| 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் | 12 | .0 | 0 | .0 | 05 | 0.11 | 16 | 0.08 | 15 | 0.07 |
| 15-18 வயது வரையானோர் | 258 | 1.0 | 41 | 0.1 | 327 | 7.41 | 1889 | 8.96 | 2411 | 11.32 |
| 9-24 வயது வரையானோர | 4,803 | 15.0 | 7,989 | 18.9 | 793 | 17.98 | 4519 | 21.42 | 5456 | 25.61 |
| 25–29 வயது வரையானோர | 8,050 | 26.0 | 10,386 | 24.5 | 650 | 14.75 | 3378 | 16.01 | 3717 | 17.45 |
| 30 க்கு மேல் | 17,970 | 58.0 | 23,903 | 56.5 | 2635 | 59.75 | 11,291 | 53.53 | 9705 | 45.55 |
| மொத்தம் | 31,093 | 100.0 | 42,319 | 100.0 | 4410 | 100.0 | 21,093 | 100.0 | 21,304 | 100.0 |

| அட்டவணை 27 –வயது அடிப்படையில் ஹெரோயின் பாவனையில் கைது செய்யப்பட்டோர் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| வயது | N | % | N | % | N | N | % | N | % | N |
| 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் | 0 | .0 | 0 | .0 | 01 | 0.04 | 01 | 0.02 | 03 | 0.04 |
| 15-18 வயது வரையானோர் | 13 | .0 | 2 | .0 | 30 | 1.09 | 86 | 1.46 | 172 | 2.29 |
| 9-24 வயது வரையானோர | 1,340 | 8.0 | 4,891 | 20.07 | 220 | 8.03 | 755 | 12.84 | 962 | 12.82 |
| 25–29 வயது வரையானோர | 4,908 | 29.0 | 6,768 | 28.6 | 345 | 12.59 | 1050 | 17.85 | 1343 | 17.90 |
| 30 க்கு மேல் | 10,548 | 63.0 | 12,004 | 50.7 | 2144 | 78.25 | 3990 | 67.83 | 5023 | 66.95 |
| மொத்தம் | 16,809 | 100.0 | 23,665 | 100.0 | 2740 | 100.0 | 5883 | 100.0 | 7503 | 100.0 |

| அட்டவணை 28 – வயது அடிப்படையில் அபின் பாவனையில் கைது செய்யப்பட்டோர் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
| வயது | N | % | N | % | N | N | % | N | % | N |
| 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| 15-18 வயது வரையானோர் | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| 9-24 வயது வரையானோர் | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 | 0 | .0 |
| 25–29 வயது வரையானோர் | 0 | .0 | 2 | 33.3 | 1 | 33.3 | 2 | 50 | 2 | 50 |
| 30 க்கு மேல் | 3 | 100.0 | 4 | 66.7 | 2 | 66.7 | 2 | 50 | 2 | 50 |
| மொத்தம் | 3 | 100.0 | 6 | 100.0 | 3 | 100.0 | 4 | 100.0 | 4 | 100.0 |

**National Dangerous Drugs Control Board (NDDCB)**

மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணைகளை நோக்கும் போது 30 வயதுக்கு மேற்பட்டோர் போதைப்பொருள் பாவனையில் அதிகமாக கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகின்றது

| அட்டவணை 29 - இன ரீதியாக கைது செய்யப்பட்டோர் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இனம் | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| சிங்களம் | N | 29879 | 36859 | 6694 | 24,150 | 24,449 |
| | % | 62.0 | 55.8 | 91.3 | 83.27 | 81.12 |
| தமிழ் | N | 9,475 | 16,934 | 244 | 2197 | 2298 |
| | % | 20.0 | 25.7 | 3.33 | 7.57 | 7.62 |
| முஸ்லிம் | N | 8,545 | 12,202 | 368 | 2300 | 3058 |
| | % | 18.0 | 18.5 | 5.02 | 7.93 | 10.14 |
| மலாயர் | N | 0 | 0 | 11 | 116 | 137 |
| | % | .0 | .0 | 0.15 | 0.4 | 0.45 |
| பரங்கியர் | N | 0 | 0 | 11 | 49 | 50 |
| | % | .0 | .0 | 0.15 | 0.17 | 0.17 |
| ஏனையோர் | N | 27 | 3 | 4 | 192 | 150 |
| | % | .0 | .0 | 0.05 | 0.66 | 0.5 |
| மொத்தம் | N | 47,926 | 65,998 | 7332 | 29,004 | 30,143 |
| | % | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

| அட்டவணை 30 – பால் ரீதியாக கைது செய்யப்பட்டோர் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| போதைவஸ்து | S | Y | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| கஞ்சா (cannbis) | M | | 30,778 | 42,218 | N.A | N.A | N.A |
| | F | | 315 | 101 | N.A | N.A | N.A |
| | T | | 31,093 | 42,319 | 43,683 | 52076 | 47787 |
| ஹெரோயின் (heroin) | M | | 16,423 | 23,607 | N.A | N.A | N.A |
| | F | | 386 | 58 | N.A | N.A | N.A |
| | T | | 16,809 | 23,665 | 23,331 | 26539 | 27,462 |
| அபின் (opium) | M | | 3 | 6 | N.A | N.A | N.A |
| | F | | 0 | 0 | N.A | N.A | N.A |
| | T | | 3 | 6 | 0 | 4 | 4 |
| கூட்டுத்தொகை | M | | 47,204 | 65,831 | N.A | N.A | N.A |
| | F | | 701 | 159 | N.A | N.A | N.A |
| மொத்தம் | | | 47,905 | 65,990 | 67,014 | 78,619 | 75,253 |

**National Dangerous Drugs Control Board (NDDCB)**

## போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள்

### வறுமை அதிகரித்தல்

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானோரால் அவற்றிலிருந்து மீள முடியாது. எனவே போதைப் பொருளுக்காக தமது வருமானத்தில் அதிகளவினைச் செலவிட வேண்டியுள்ளது. மேலும் ஒரு குறித்த நிறுவனத்தில் தொழில் செய்யும் ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையானால் அவரால் தனது பணியில் போதிய அக்கறை செலுத்த முடியாத நிலை ஏற்படலாம். இவ்வாறான நிலைமையில் கிடைக்கும் சொற்ப வருமானத்தையும் போதைக்காக செலவழித்தால் குடும்பம் வறுமையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். வருமானம் எதுவுமில்லாவிட்டால் வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளும் விற்பனைக்குச் சென்றுவிடும். தன்னில் தங்கியிருப்பவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதை அவர்கள் எண்ணாது போதையைப் பெறுவதே தமது நோக்காகக் கருதுவர். இதிலிருந்து விடுபடுவது கடினமான நிலையாகும். எனவே இது மேலும் அவர்களின் வறுமை நிலையினை அதிகரித்துச் செல்லவே துணை புரியும்.

### குடும்பக் கட்டமைப்பு பாதிக்கப்படல்

பொதுவாக குடும்பத்தலைமைப் பொறுப்பு தந்தையிடம் காணப்படுகிறது. குடும்பத்திலுள்ள பெற்றோரில் ஒருவரோ, பிள்ளைகளில் ஒருவரோ போதைக்கு அடிமையாகும் போது குடும்பத்திலுள்ள ஏனைய அங்கத்தவர்கள் பாதிப்படைகின்றனர். உதாரணமாக தந்தை போதைப்பொருள் பாவனைக்கு அமையாகி இருப்பின் வீட்டில் தினமும் தகராறுகள், சண்டைகள் நடக்கும். அவரது தொல்லைகள் பொறுப்பற்ற செயல்களால் விவாகரத்துக்கள் கூட நிகழலாம். இதனால் மனைவி மற்றும் பிள்ளைகள் அதிக சிரமத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. இவ்வாறு குடும்பக் கட்டமைப்பில் ஏற்படும் சீர்குலைவானது சமூகத்துக்கு தடையாக உள்ளது. சூழல், குடும்ப என்ற சமூக நிறுவனம் ஆரோக்கியமற்றுச் சிதறிச் செல்ல போதைப் பொருள் பாவனையும் மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகவுள்ளது.

### வன்முறைகள் அதிகரித்தல்

போதைப் பொருள் பாவனையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ள எந்தச் செயலையும் செய்யத் தயங்கமாட்டார்கள். தாம் வழக்கமாக நுகரும் நேரத்திற்கு அதனை பெறுக் கொள்ள கொலை, கொள்ளை, களவு, கடத்தல் போன்ற எதனையும் செய்யத் துணிவர். இதனால் பல சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மேலும் போதை அதிகரித்தவுடன் சிலர் தம் நிதானத்தை இழந்து விடுகின்றனர். இதனால் பாலியல் துஷ்பிரயோகங்கள், கொலைகள், அவதூறான வார்த்தைப் பிரயோகங்கள் என்பவற்றில்

ஈடுபடுவர். இவ்வாறான வன்முறைகளால் சமூகத்திலுள்ள பலர் பாதிக்கப்படுகின்றனர். போதை அதிகரித்த பின் அவர்கள் தம்மை அல்லது சுயத்தை இழப்பதே வன்முறைக்கு அடிப்படையாக அமைகின்றது. உதாரணமாக, இன்று தோட்டத்துறையில் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதற்கு போதைப் பொருள் பாவனையும் ஒரு பிரதான காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

**சமூகத்திலிருந்து ஒதுக்கப்படல் மற்றும் விரக்தி மனநிலை அதிகரித்தல்**

ஒருவர் போதைப் பொருள் உபயோகிப்பதை சமூகம் அறியும் போது அவர் சமூகத்தால் குறித்த ஒரு விஷேட அவதானத்திற்கு அல்லது கண்ணோட்டத்திற்கு உட்படுத்தப்படுகிறார். ஒரு சமூகத்தால் விரும்பப்படாத ஒரு நடத்தையை செய்யும் போது அவருடைய சமூக அந்தஸ்து கீழ்நோக்கிச் செல்லத் தொடங்குகின்றது. போதைப் பொருள் பாவிப்பவர் என்று முத்திரை குத்தப்பட்டு சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகிறார்.

**போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதற்கான வழிமுறைகள்**

பாடசாலை மாணவர்களில் அதிகமானோர் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுவதால், பாடசாலைகளில் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அடிக்கடி ஏற்பாடு செய்வதன் மூலம் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகளை விளக்குவதன் மூலம் மாணவர்கள் விழிப்புணர்வு பெறுவர்.

ஒவ்வொரு கிராம, நகர்ப் புறங்களிலும் போதைப்பொருள் தொடர்பாக ஒவ்வொரு வருடமும் கைது செய்யப்பட்டோர், போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் குடும்ப, கலாச்சார சீரழிவுகள் என்பவற்றை அறிக்கை தயாரித்து விழிப்புணர்வூட்டல்.

போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாரிய உடல், உள நோய்களையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் சமூகத்திற்கு முன்வைத்தல்.

போதைப் பொருள் பாவனையின் காரணமாக சமூக அந்தஸ்த்து இழக்கப்படல், சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படல் போன்றவற்றைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.

**முடிவுரை**

பாடசாலை மாணவர்கள் முதல் பெரியோர் வரை பரவிக் கொண்டிருக்கும் போதைப் பொருள் பாவனையானது ஒரு சமூகப் பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளது. இது ஒரு தனிமனிதனின் சொந்த விடயமல்ல. அதன் விளைவுகள் குறித்த நபரின் மூலம் சமூக நிறுவனங்கள் அனைத்தையும் பாதிப்படையச் செய்யக்கூடிய அளவு பரந்த வலைப்பின்னல்களைக் கொண்டன. எனவே இதன் விளைவுகள் ஒரு சமூகத்தை எவ்வாறு அதிகளவு பாதிக்கின்றன என்பதை தெளிவுபடுத்தி போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு எமது சமூதாயத்தைக் பாதுகாக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

**உசாத்துணைகள் :**


1. Amerasekara,D. (2001), Sri Lankawe Samaja Praashna, Warakapola. Ariya Prakashakayo.

2. Anna leon – Guerrero, (2009), Social Problems: community policy and social action, London: Sage publication.

3. Swarnalatha, M.C, (2004), Samaja Getalu, Nugegoda: Chinthana prakashakayo.




04.07.2018



10.09.2018




10.10.2018




10.10.2018



10.10.2018




10.10.2018



10.10.2018



10.10.2018

Printed by : Jesa Grafix, Maruthamunai. 0756569393